திருத்துடிசைப்புராணம்

துடிசைகிழார் - அ. சிதம்பரனார்.

விலை அணா 12.

உ

கணபதி துணை.

திருத்துடிசைப்புராணம்

இஃது

தமிழர்களின் பூர்வ சரித்திரங்களை ஆராயும் சபையின்
அங்கத்தினருள் ஒருவரும்,
மதுரைச் செந்தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருள்
ஒருவரும், சைவசித்தாந்தநூற் போதகரும்,
"காசிகாண்ட வசனம்", "விபூதி விளக்கம்", பண்முறை
விளக்கம்", "நித்திய கரும விளக்கம்" சிவஞான
போத முதனூல் விளக்கம்" "தமிழுலகு"
என்னும்
அநேக நூல்கள் எழுதினவரும் ஆகிய,
ஆதிசைவப் பரம்பரையில் வந்த

துடிசை கிழார்
அ. சிதம்பரனார் என்பவரால்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:
மினேர்வா அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா 12.

உ

கணபதி துணை.

மெய்யுரை.

"அத்தியை யுரித்துப்போர்த்த வமலனை யகண்ட ஞான
சத்தியை நடுவட்டோன்றுந் தனிக்கதைக் குமரவேளைப்
பத்தியினினைத் தோர்கண்டோர் பாடுநர்பணிவோர் யாரும்
நித்தியசுகம் பெற்றென்றும் நீணிலந்துதிக்க வாழ்வார்."

பதிப்புரை.

திருத்துடிசையம்பதியானது மிகவும் பூர்வீக ஸ்தலம் என்றும்; சுயம்பு க்ஷேத்திரம் என்றும்; விநாயகர், அகத்தியர், கந்தமாமுனி, குருவவிருடி முதலானவர்கள் பூசித்துப் பேறுபெற்ற ஸ்தலமென்றும்; கணேச்சுரபுரம், அகத்திய நல்லூர், கந்தபுரி, திருத்துடிசை என்னும் பல காரணத் திருநாமங்களை யுடையதென்றும்; சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு வேடனுப்க் காட்சிகொடுத்தது இந்த ஸ்தலத்தில் என்றும் அவருக்குக் காட்டு முருங்கைக்கீரை அமுதாக அளிக்கப்பட்ட ஸ்தலம் என்றும்; அத்தலத்தின்கண் உள்ள குருவவிருடி தீர்த்தம் அல்லது சிவதீர்த்தம் ஆனது சகலவித நோய்களையும் தீர்க்கக்கூடியதென்றும்; அத்தலத்தின்கண் எழுந்தருளியுள்ள எம்பெருமாட்டியாகிய உருப்பெருவழகியார் (விஸ்வநாயகி அம்மன்) அதிக கருணையுள்ள தெய்வமென்றும், வேண்டுவார் வேண்டுவதே ஓபாமல் அன்புடன் அளிக்கும் தேவியென்றும் என்னிளம்பருவத்தில் பலகால் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றனன். அத்தகைய பெருமைவாய்ந்த ஸ்தலத்திற்கு அத்தல மகிமைகளைச் செவ்வனே விளக்கக்கூடிய புராணம் ஒன்று உளதானல் மிக நலமாயிருக்குமே, தலபுராணம் எங்கு கிடைக்குமோ எனக் கவன்று தேடிக்கொண்டிருக்கும் சமயத்தில் எனது பெரிய மாமனாகிய சைவ ஸ்ரீ கோ. சு. சாமிநாத

முதலியார் அவர்கள் தங்களிடத்தில் ஒருபிரதி இருப்பதாகச்சொல்லி அப்பிரதியைக் கருணைகூர்ந்து எற்கு அளித்தனர் அப்பிரதியையும், இன்னும் எனது தகப்பனர் ஸைவஸ்ரீ அர்த்தனாரீஸ்வர முதலியார் அதிக பிரயாசைப்பட்டுச் சேசகரித்து வைத்திருக்கிற ஏட்டுப்பிரதிகளில் இருந்த பிரதி ஒன்றையும் ஒத்திட்டுப்பார்த்து அப்புராணத்தை அச்சிடுவான் 1904-ம் வருடத்திலேயே முயன்றனன். முயன்றும்,

"அடுத்துமுயன்றாலும் ஆகுநாளன்றி
எடுத்த கருமங்களாகா"

என்னும் திருவாக்குக்கிணங்க அவ்வருடத்தில் முடியாமல் அது முடிவுபெறுங் காலமாகிய இவ்வருடத்தில் எம்பெருமான் திருவருளால் முடிந்தது.

சிவாலயத் திருப்பணி செய்வதும், சிவபுராணம் அச்சிடுவதும் சிவபுண்ணியமாதலால் அச்சிவபுண்ணியத்தை யான் ஒருவனே அடைய எண்ணுவது சுயநலம் பாராட்டுதல் என்னும் குற்றமாகுமே, "காசமுறவு கலந்துண்ணும்" என்னும் மெய்ம்மொழியையேனும் சிறிது கவனிக்க வேண்டாமா?

"யான்பெற்ற வின்பம் பெறுக
விவ்வையகம்"

என்பது கற்றறிந்தார் கருத்தன்றோ?

"அகண்டாகார சிவபோகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாய் எங்கும்பரந்து கிடக்குதையோ! இன்புற்றிட நாம் எடுத்ததேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே!"

என்று நமது அன்பர் கூறின அருண்மொழியையேனும் பின்பற்ற வேண்டாமா? எனக் கருதியான் அநேகருக்கு நேரிலும் கடித மூலமாகவும் இப்புண்ணியத்தைப் பங்கிட்டுக் கொள்ளுமாறு தெரிவித்தனன். தெரிவித்ததில், எனது நண்பரில் ஒருவராயும், சைவத்தில் பற்றும், சைவசித்தாந்த நூற்பயிற்சியில் ஊக்கமும், நல்லொழுக்கமும்வாய்ந்த ஸ்ரீமான் தி. சுப்பிரமணியபத்தர் 'என்பவர் ஒருவர்மாத்திரம் இப்புராணம் அச்சிடுவதற்கு வேண்டியதாள்களை மனப்பூர்வமாகத் தாமாகவே அளித்து அச்சிவபுண்ணியத்தைப் பாகித்துக் கொள்ளும் பெரும் பாக்கியத்தைப் பெற்றனர்.

இத்தகைய புண்ணியத்தை ஏனையோர் எய்தவில்லையே என்று என்மனம் கவலுகின்றது. ஏனையோர் இத்தகைய புண்ணியத்தை அடையும் அமயத்தை இழந்த போதிலும், இப்புராணத்தை அதிக சிரத்தையுடன் வாங்கி அன்புடன் வாசிக்கும் பெரும் புண்ணியத்தையாவது அடைவார்களென்று எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை அல்லும் பகலும் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றனன்.

புதுவை
24-2-13.

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

உ.

கணபதி துணை.

முகவுரை.

புராணத்தின் பெயரும் சருக்கங்களின் தொகையும்.

திருத்துடிசை என்னும் பெயரிய இப் புராணமானது, பாயிரம் (1) நைமிசச் சருக்கம் (2) நாட்டுச் சருக்கம் (3) கிரிச் சருக்கம் (4) நகரச் சருக்கம் (5) மூர்த்திதரிசனைச் சருக்கம் (6) கணபதி பூசனைச் சருக்கம் (7) அகத்தியர் பூசைச் சருக்கம் (8) கந்தமாமுனிபூசைச் சருக்கம் (9) குருவவிருடிபூசைச் சருக்கம் (10) சந்திரார்ச்சனைச் சருக்கம் (11) சுந்திர மூர்த்தி பூசனைச் சருக்கம் (12) வச்சிரவாகு, பாபவிமோசனச் சருக்கம் (13 சிவபூசைச்சருக்கம் (14) வாழ்த்துச் சருக்கம் (15) என்னும் பதினைந்து சருக்கங்களையுட் கொண்டது.

பாக்களின் தொகை.

பாயிரத்தில் 24 ; நைமி. 21 ; நாட். 23 ; கிரி. 61 ; நகர. 67 ; மூர்த்தி. 26 கணபதி. 45 ; அகத்தியர். 48 ; கந்த. 27 குருவ. 44 ; சந்திர. 25 ; சுந்திர. 48 ; வச்சிர. 29 ; சிவ. 25 ; வாழ்த்து. 3 ; ஆகப் பாக்கள் 516.

பாயிரம்.

பாயிரத்தில், விநாயகர் முதலிய நவநாயகர்களின் வாழ்த்தும், காப்புக் கடவுளர்களின் வாழ்த்தும், சமயாசாரிகளின் வாழ்த்தும், மற்றத் திருத்தொண்டர்களின் வாழ்த்தும், அவையடக்கமும் கூறப்பட்டடிருக்கின்றன.

நைமிசச் சருக்கம்.

நைமிசச் சருக்கத்தில், நைமிசவனத்தின் விபரமும் அவ்வனத்தில் வசிக்கும் சவுனகாதி முனிவர்களின் விபரமும், அம்முனிவர்கள் யாகம் ஒன்று செய்த காலத்து அவண் சூத முனிவர் சென்ற விபரமும் அவர் இத்துடிசைத்தலபுராணத்தை அவர்களுக்குச்சொன்ன விபரமும் கூறப்பட்டிருக்கின்றன.

நாட்டுச் சருக்கம்

நாட்டுச் சருக்கத்தில், கொங்குநன்னாட்டின் வருணனையும் அந்நாட்டிலுள்ள மலை, யாறு ஓடை, குளம், வாவி, பொய்கை முதலியவைகளின் வருணனையும், அந்நாட்டில் விளையும் தானியங்களின் வருணனையும், மனிதர்களின் வருணனையும் பொதுப்படக் கூறப்பட்டிருக்கின்றன.

கிரிச் சருக்கம்

கிரிச் சருக்கத்தில் சிவ சொரூபமான வெள்ளிமலையின் வருணனையும், அதன் வடக்கிருக்கும் வடிவேற் செங்கைப் புனிதனது சொரூபமான மருத மலையின் வருணனையும், அதன் வடக்கிருக்கும் உலக முழுதுயிர்த்த எம்பிராட்டியின் சொரூபமான குருவலிருடி மலையின் வருணனையும் கூறப்பட்டிருக்கின்றன.

N. B.—இம்மலைகள் மூன்றும் இயற்கையிலேயே சோமாஸ் கந்த முகூர்த்தமாக அமைந்திருக்கிறதை யாவரும் அறியலாம். வெள்ளி மலைக்குத் தென்பால் பிரமகிரியும், குருவவிருடிமலைக்கு வடபால் விண்டு கிரியும் (நீலகிரி) உள. இவ்வைந்தும் பஞ்சகிரி எனப்படும். Vide:—

> "அயன்வரையுமையாளோங் கலவிரொளி வெள்ளிவெற்புப்
> புயனிகர்மேனிச் செல்வன் பொருப்புயர் மருதக்குன்றென்
> றியலுமைந்தடுக்கண்மாட்டு மிரும்புனற்றீர்த்தந்தோறும்
> வயமருளிறைவனூர் தமலரடி பூசித்தாரால்.
>
> (பேரூர் புராணம். அபய. 38)

மேலும், இக்கிரிச் சருக்கத்தில் வெள்ளி மலையில் உள்ள பஞ்சலிங்கத்தின் பெருமையும், அம்மலையிலுள்ள வல்லி, பூடு, புல் பரவிய தருக்கள் முதலிய யாவும் சடைகள் தாங்கி நிற்கும் வரலாறும், மருதமலையின் கண்ணுள்ள மருததீர்த்தம், கன்னிகை தீர்த்தம், கந்ததீர்த்தம், அனும தீர்த்தம், சரவணப் பொய்கை முதலிய தீர்த்தங்களின் வரலாறும், குருவவிருடி மலையிலுள்ள கந்ததீர்த்தம், அகத்திய தீர்த்தம், சந்திர நதி விநாயக நதி (தன்னாசி கோவில் பள்ளம்,) சிவ தீர்த்தம் சுருவ முனி தீர்த்தம் (கோவில் உட்பிரகாரத்தில் உள்ளது) முதலிய தீர்த்தங்களின் மகிமையும் அம்மலைகளின் விம்பிதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

குருவவிருடி மலைக்குக்

கிரேதாயுகத்தில்	...	சதுர்ப்புயாசலமென்றும்
திரேதாயுகத்தில்	...	அகத்திய பூதரமென்றும்
துவாபரயுகத்தில்	...	கந்தசைலமென்றும்
கலியுகத்தில்	...	குருவவிருடி மலையென்றும்

பெயர்கள் உண்டான வரலாறும் கூறப்பட்டிருக்கிறது.

நகரச் சருக்கம்

நகரச் சருக்கத்தில் மதுர நதியின் (தன்ஞசி, கோல்வி பள்ளம்) தென்புறத்துள்ள துடிசையம்பதியின் வருணனையும், அப்பதியிலிருந்த கோட்டை, அகழி, மாடம், மாளிகை, கூடம், கோபுரம், கடைத் தெரு, சித்தாந்த சைவர்களின் கூட்டம் தமிழ்நாட்டுத் துறவியர் களாகிய அந்தணர்களின் கூட்டம், குதிரைப் பந்தி முதலிய பந்திகள், கல்விச்சாலை, ஆயுதசாலை, முதலியசாலைகள், சைவமடங்கள் முதலியவைகளின் வருணனையும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், அந்நகருக்கு

கிரேதாயுகத்தில்	...	கணேச்சுரபுரம் என்றும்
திரேதாயுகத்தில்	...	அகத்தியநல்லூர் என்றும்
துவாபரயுகத்தில்	...	கந்தபுரி என்றும்
கலியுகத்தில்	...	துடிசையம்பதி (துடியலூர்)

என்றும் பெயர்க்காரணமும் கூறப்பட்டிருக்கிறது.

மூர்த்தி தெரிசனைச் சருக்கம்

மூர்த்தி தெரிசனைச் சருக்கத்தில் துடிசையம்பதியில் அருளுருக்கொண்டு எழுந்தருளியிருக்கும் விருந்தீஸ்வரலிங்கத்தின் வரலாறும், அவ்விலிங்கத்தைக் காசிபர் முதலிய அநேக முனிவர் வழிபட்டவிதமும், அப்பதியின் கண் கருணைம்பிகையாய் வீற்றிருக்கும் உருப்பெரு வழகியின் (விஸ்வநாயகி) வரலாறும் இவர்கள் நடுவில் வீற்றிருக்கும் குன்ற மெறிந்த குமரவேள் வரலாறும் கூறப்பட்டிருக்கின்றன.

கடவுளுக்கு

முதல்	யுகத்தில்	...	கணேசுரநாதர்	என்றும்
இரண்டாவது	,,	...	அகத்தீசர் ...	,,—
மூன்றாவது	,,	...	நண்ணுவுடையார்	,,—
நான்காவது	,,	...	விருந்தீசர் ...	,,—

அம்பிகைக்கு

முதல்	யுகத்தில்	...	கோமளவல்லி	என்றும்
2 வது	,,	...	அருந்தவச்செல்வி	,,—
3 வது	,,	...	நாயகச்செல்வி	,,—
4 வது	,,	...	உருப்பெருவழகி (விஸ்வநாயகி)	,,—

பெயர்கள் வந்த காரணமும் விளக்கப்பட்டிருக்கிறது.

கணபதிபூசைச் சருக்கம்

கணபதிபூசைச் சருக்கத்தில் கிரேதாயுகத்தில் விக்கினங்களைப் போக்கும் விநாயகர் திருத்துடிசையம்பதியில் உள்ள அம்மையப்பனைப் பூசித்தவாறும் அதனல் அவர் அடைந்த பேறும் கூறப்பட்டிருக்கின்றன.

அகத்தியபூசைச் சருக்கம்

அகத்தியபூசைச் சருக்கத்தில் திரேதாயுகத்தில் சந்தனப் பொதிகைச் செந்தமிழ் அகத்தியர் திருத்துடிசையம்பதியில் உள்ள பெருமானையும் பெருமாட்டியையும் வழிபட்ட வரலாறும், அம்முனிவர் சிவராத்திரி வந்தடுக்க அற்றைக்கு வணங்கின விதமும், அவ்வாறு,

விதிப்படி வணங்க அதனால் வில்வலன் வாதாபியைக் கொன்ற பிரமகத்தி அவருக்கு நீங்கின வரலாறும் இன்னும் அவர் அடைந்த பேறுகளும் கூறப்பட்டிருக்கின்றன.

கந்மாமுனிபூசைச் சருக்கம்.

கந்தமாமுனிபூசைச் சருக்கத்தில் துவாபரயுகத்தில் பந்தபாசமறுத்த கந்தமாமுனி திருத்துடிசையம்பதியில் எழுந்தருளியிராநின்ற தேவதேவனையுந்தேவியையும் வழிபட்ட வரலாறும், அஞ்ஞான்று அநேக சித்தி அருள் பிரதோடம் வந்தணுக அவ்வமயம் அம்முனிவர் வழிபட்ட விதமும் அதனால் அவர் அடைந்தபேறும் கூறப்பட்டிருக்கின்றன.

குருவவிருடி பூசைச் சருக்கம்.

குருவவிருடி-பூசைச் சருக்கத்தில் கலியுகத்தில் இருளதை யொழித்த குருவவிருடியென்னும் முனிவர் திருத்துடிசையம்பதியில் சுயம்புலிங்கமாய் இராநின்ற சோதியங் கடவுளையும், அருளையே உருவாக்கொண்ட உருப்பெருவழகியாகிய என்னம்மையையும் வழிபட்டவரலாறும், அம்முனிவருக்காக எம்பெருமான் அத்துடிசையம்பதியில் துடியை முழக்கி உள்ளாள இசைத்துநடன தரிசனங்காட்டின வரலாறும், அதனால் அம்முனிவர் அடைந்த பேறும் கூறப்பட்டிருக்கின்றன.

சந்திரார்ச்சனைச் சருக்கம்

சந்திரார்ச்சனைச் சருக்கத்தில் தாரையைப் புணர்ந்த சந்திரன் அப்பழியால் வருந்தியவரலாறும், பின் நாரதமுனிவரால் திருத்துடிசையம்பதியின் மகத்துவங்களைக் கேட்டு அப்பதியில் எழுந்தருளியிருக்

கும் கருணாநாயகரையும் கருணாம்பிகையையும் தொழுது தனது பாவத்தைப்போக்கிக் கொண்டவரலாறும் கூறப்பட்டிருக்கின்றன.

சுந்தரமூர்த்தி பூசைச் சருக்கம்.

சுந்தரமூர்த்தி பூசைச் சருக்கத்தில் சமயாசாரிகளில் ஒருவராகியதம்பிரான் தோழர் திருவளிநாசியின் கண் முதலைவாய்ப் பிள்ளையை அழைத்து விட்டுப் பிறகு திருத்துடிசையம்பதியைச் சேர்ந்த அடவியில் வழிதெரியாமல் திகைத்ததும், அப்போது அமலனும் தேவியும்வேடனும் வேடிச்சியுமாகவுருக் கொண்டு நம்பியாரூரரைத்திருத்துடிசையம்பதியில் கொண்டுவந்து விட்டு அவருக்குக் காட்டு முருங்கையிலைக் கறியுடன் அமுது செய்வித்ததும், சுந்தரர் களித்துத் தமிழ் வேதமோத எம்பெருமான் நடித்ததும், பிறகு அந்நாயனார் ஆதிபுரி பட்டீச்சரம் நோக்கி நடந்ததும் முதலியவை கூறப்பட்டிருக்கின்றன.

வச்சிர பாகு பாவ விமோசன சருக்கம்

இச்சருக்கத்தில் மகத தேயத்து அரசனாகிய வச்சிரபாகு என்பான் வேட்டைக்குச் சென்றதும், அவ்விடத்தில் துருவாச மகாமுனிவருடைய சாபத்தைப் பெற்றதும், அச்சாபமானது பலதலங்களிலும் சென்று வணங்க நீங்காமல் திருத்துடிசையம்பதியை அணுகி அவண் எழுந்தருளியிராநின்ற காலகாலனையும் கயற்கண்ணியையும் வணங்க அச்சாபமானதுசூரியன்முன் பனியெனப் பறந்ததும், பிறகு அவ்வரையன் சௌக்கியமாய் தந்நகரையடைந்து அரசு செலுத்தியதும்முதலியவை கூறப்பட்டிருக்கின்றன.

சிவபூசைச் சருக்கம் இச்சருக்கத்தில் சிவபெருமானை வழிபடும் முறையும் அவ்வழி பாட்டால் எய்தும் பலனும் செவ்வனே கூறப்பட்டிருக்கின்றன.

வாழ்த்துச் சருக்கம் இச்சருக்கத்தில் இப்புராணத்தைப் படித்தவர் கேட்டவர் எழுதியவர் முதலியவர்கள் அடையும் பேறும் குலோத்துங்க அரையனுடைய வாழ்த்தும் கூறப்பட்டிருக்கின்றன.

கணபதிதுணை.

தந்துரை.

புராணம்பாடிய புலவர்.

திருத்துடிசைப் புராணமானது ஏட்டுப் பிரதிகளினின்றும் கையெழுத்துக் காகிதப் பிரதியாகச் செய்யப்பட்டு இற்றைக்கு ஏறக்குறைய 40-வருடங்களாகின்றன. இப்புராணம் பாடினார் இன்னாரென அப்பிரதிகள் ஒன்றிலேனும் விளங்கவில்லை.

புராணம் பாடின காலம்.

இப்புராணத்தின் கடைசியில் புராணிகர் வாழிசொல்லுமிடத்து,

> "வடிவுபெறு குலோத்துங்கன் வாழி
> செங்கோல் வாழியவே."

எனக் கூறியிருக்கின்றார். ஆகையால், குலோத்துங்கச் சோழன் காலத்தில் இருந்த யாதாமொரு புலவரால் பாடப்பெற்றிருக்க வேண்டுமென்பது திண்ணம். குலோத்துங்கன் என்று மாத்திரம் கூறினாரே யொழிய இன்ன குலோத்துங்கன் என்று கூறவில்லை.

		முதல் வரை.
குலோத்துங்கன்	I	1070—1118 A.D.
Do	II	1143—1153 A.D.
Do	III	1178—1216 A.D.

அரசாண்டதாக சரித்திர வாராய்ச்சியால் தெரிகிறது ஆகையால், எந்தக் குலோத்துங்கனோ என்று நிச்சயிக்கத் தகுந்த ஆதாரங்கள் இப்புராணத்தில் இல்லை. எப்படியிருந்தாலும் இப்புராணம் பாடப்பட்டு இற்றைக்கு 700-வருடத்துக் குறையாது என்பது மாத்திரம் சொல்லமுடியும்.

திருத்துடிசையம்பதிக்குத் தெற்கே மூன்றுமயில் தூரத்திலுள்ள சுக்கிரன் பாளையத்தில் இருந்த ஒரு புலவனிடத்தில் இருந்த பழய ஏட்டில் அடியில் வருமாறு காணப்படுகிறது:—

"இப்படி வேடங் கொண்டே எனக்கெதிர் நீங்கள் வந்தால்
சொற்படி மனுஷநானே சுந்திர னென்னும் பேரேன்
விற்பிடித் தானெங்கூட்டி மிகுவிளை யாட்டதாக
எப்படி நடந்துசுவாமி எனக்கெதிர் வந்தா யேதோ.

ஏதோ வெனவோ நீகேட்டால் எனக்கு வறுமை மிகவருத்த
போதே படியுமில்லாமற் பூமிதனிலே நாமிருக்க
ஏது புலவர்வாராரென் றெதிரே வந்தேன் சுந்திரனே
ஏது வுமக்குத் தரவகைதா னில்லையென்றே யுரைத்தனரே.

கண்டுமகிழ்ந்தே யூர்புகுந்தார் காலால்நடந்தே யிருவருமாய்
அண்டரானவரைநோக்கி யமிர்தயோகமா மென்று
தெண்டஞ் செய்தார் சுந்திரனார் சிரித்தார் புதுமையா மெனவே
கண்டேடயனைய மொழியுமைபாள் காந்தனிருமென் றறைந்தனரே.

இருந்த மறையோன் றனைப்பார்த்தே யெங்கேவந்தீ ரெனக்கேட்டார்
சிறந்தவுலகில்நல்லூரில் திறமாயிருந்தே னென்கோவே
மறந்துபோனீர் திருவாரூர் மங்கைதனக்குத் தூதுசென்றே
இரந்துதிரியவந்ததுதான் என்னவென்று சொல்வேனே.

"அந்தமொழியை யரன்கேட்டே யானுலிதுதான் கலிகாலம்
சிந்தையிசைந்து வேடர்பரி திடமாய்முருகன் பூண்டிதனில்
சொந்தார்குழலார்தனக்காகக் கொடுத்தானுடமை யத்தனையும்."
* * * * (செல்அரித்துவிட்டது.)

மற்றொரு ஏட்டில்,

"கலியுக சகாப்தம் 4797-க்குமேல் இம்முடிபட்டத்து மசக்கவுண்டன் அம்மனுக்குக் கோவில் புதுக்கிக் கும்பாபிஷேகமும் செய்வித்து மந்திர புஷ்பத்துக்கு வாசுதேவ சாஸ்திரிக்கு 2-வள்ளம் நிலமும் பஞ்சாங்கம் வெங்கிட கிருஷ்ணையனுக்கு 2-வள்ளம் நிலமும் பூமிதானம், படித்தரத்துக்குத் தோட்டமும் காடும்விட்டது பட்டயங்களில் இருக்கும்.

துடிசைப்பதியைத் திசைநோக்கிச் சென்றார் அடவிதிசை காணார்
கடுகச்சிறுகாற் றடம்பார்த்துக் காணார்மனது மிகச்சலித்து
அடவிதனிலே திசைநோக்கி அநேகந்தூரம் போய்மீண்டு
தொடர்ந்து நடந்து வழிகண்டு துடிசைப்பதிக்கு வந்தனரே.

வந்தனரிதயங்கூர்ந்து மலரடிவணங்கிப் போற்றி
யிந்தநற்சிற்றூர்ப் பேர்தான் ஏதெனக்கேட்க வீசன்
சுந்தரர்க்குரைத்த சேதி துடிசையாம்கலியுகத்தில்
முந்தவே கிருதயுகத்தில் கணேசுர புரமதாகும்.

அந்தணன் மனமகிழ்ந்தே யரனடிடணிந்து மீற்சப்
பிந்தின யுகத்தில்நல்ல பேரகத்திய நல்லூராம்
சந்தமாமலைசூழ்சோலை துவாபரயுகத்தில் நல்லூர்
யிந்தகால் யுகத்தில்நாமே யிருந்தமென் றரனுரைத்தார்.

உரைத்தநன்மொழியைக் கேட்டு உண்மையாய்ச் செவிகள்கூர்ந்து
சிரித்தனன் உடல்பூரித்துச் சேவடி தலைமேற்கொண்டு
விரித்தனன் சிவபுராணம் விளங்கவே திருப்பாட்டோதச்
சிரத்தையுமசைத்தே யீசன் செப்பென வுரைக்கலுற்றார்.

உன்னையல்லால் வேறொருவர் உண்டோ எனக்குப் புவிமீதில்
இன்னம்ஜென்மம் எடுக்காமல் இருதாள்தருவாய் என்கோவே
பன்னார்மதியம் தனைச்சூடும் பரமானந்தப் பழம்பொருளே [தான்.
யென்றாருயிரே யெனைக்காக்க வெளிதோ வெளிதோ எனமொழிந்

மொழிந்த மறையோன் றனைப்பார்த்து மூன்றான்நன்றாய்ப்புவிவிளங்
துளங்கு சோழன் சேரனுமே சொன்னபடியே யரசாள்வார் [கத்
வளந்தனிதியும் பொன்னும்உண்டு மனிதர்நன்றா யிருப்பார்கள்
தளர்ந்தோமிந்தக் கலியுகத்தில் தருகவொன்றும் கைகயில்லையே.

ஆறாற்பேரைப் பதிநோக்கி அடியேன்போக விடைதாரும்
நாலுயுகத்திற் பூசைகொண்ட நண்பாதுடிசை அகத்தீசா.
பாலாமமிர்தமிலை கறியும் பழமுமவலும் தேங்காயும்
கோலாகலமா யமுதுசெய்தாற் குறைவோவால சுந்திரனே.

சுந்தரன் மனமகிழ்ந்து தொழுதரனடி பணிந்து
எந்தையே யகத்திலிங்கா யிறைவனே போற்றியெங்க

* * *

* * *

இந்தநாட் கலியுகத்தி லிருமலைப் புறத்தேசென்று
சிந்தைகூர்ந்திலையுங் கையிற் சிக்கெனக் கொண்டுவந்தார்.

வந்தனர முதளித்து வரிசைதாம்பூல மீய்ந்து
கெந்தமுமகிலும் பூவும் கொடுத்தனர் குன்றைவில்லி
அந்தமாம் பேரூர்நோக்கிப் போமென வருளிச்செய்ய
சுந்தரன் மனமகிழ்ந்து சொற்றனர் சிலதுபாடல்.

அருந்தித் தவஞ்செய் தருளார் பதத்தை யனுதினமும்
பொருந்தி வினையவல்லார்க் கெளிதே புவிமீதினிலே
வருந்தித் துதிக்குமடியார் வருத்தமது தவிர்க்கும்
விருந்தீஸ்வரர் தமைச் சேவித்தபேர்கள் வினையறுமே.

அருந்தாத ஆலமதை யருந்தினீசர பிரம்பதனை லடியும்பட்டீர் [மாக
இரந்தாலே யிகழ்ச்சியென்றே யறிந்திருந்தும் இரந்துண்டீர் இன்ப
கரும்பானமொழி விஸ்வநாயகிபால் களிப்பினொடு விருந்துசெய்ய
விருந்தீசரெனப் பேர்கொண்டிருந்ததுவும் சேவிபுடை மேன்மை
[தானே

அங்காளம்மன் கோவிலுக்குத் தென்கிழக்கு மூலை யில் ஆலமரத்துக்கு மேல்புரம் 50-முழம் நிருதிமூலையில் சோதிக்க என்று கண்டிருக்கிறது.

இன்னொரு வட்டில்,

தன்மசாதனப் பட்டயம்.

கலியுக சகாப்தம் 4175-க்கு மேல் சொல்லாநின்ற ஆனந்த வருஷம் சித்திரை மாதம் முதல் தேதி எழுதிய தன்மசாதனப் பட்டயம்:—

ஆறுநாட்டுக் குள்வான வானவநல்லூர்க் காதிபதியான குலோத்துங்கச் சோழராஜாவின் காரியத்துக்குக் கர்த்த னை பூலுவ வேடுவரில் தியாகப்பெருமாள் அரசன்; இவர் காரிய கருத்தர் விஸ்வரூயக் கவுண்டன். தளவாய் அந்துக

வேட்டுவரிற் காங்கேயன். வாசல் கணக்கரில் செங்குந்த கோத்திரம் பெரிய அதிகாரி பிள்ளை.

வருஷம் ஒண்ணுக்குத் திருவாலி ஆயிரம் பொன்னு. திரிசந்தியா பூசை படித்தரம் தினம் 1-க்கு:—

அரிசி வள்ளம் ...	... 24	சந்தனக்கட்டை பணம் ...	1
பச்சைப்பயர் வள்ளம்	... 5	தேங்காய் ...	... 10
உளுந்து வள்ளம்	... 2	சர்க்கரை பலம்	... 4
கச்சாயம் ...	... 40	தேன் உழக்கு ...	... 2
வடை ...	... 30	இளநீர் ...	... 20
வெல்லம் பலம் ...	... 15	எலுமிச்சம் பழம	... 50
நல்லெண்ணை வள்ளம்	... 2	தீவட்டி எண்ணை வள்ளம்	1
பசுவினெய் do	... 1		
பழம் ...	... 26		

கற்பூரம் சாம்பிராணி
வெற்றிலை பாக்கு
குங்குமம்
மஞ்சக்காப்பு
திருமஞ்சனத் திரவியம்.
} பொன் ஒன்று.

இப்படிக்கு திரிசந்தியா காலமும் பூசை நடத்திவரும்படி செங்குந்த கோத்திரத்தில் பெரிய அதிகாரிபிள்ளை தம்பி குமாரவேல் பிள்ளை கணக்கப்பிள்ளை என்று இருக்கிறது.

மேலே காட்டிய பழய பாட்டுக்களாலும் தன்மசாதனப் பட்டயத்தாலும் நாம் அறிந்துகொள்ளுவது என்னவென்றால், திருத்துடிசையப்பதியானது சுமார் ஆயிரம் வருடத்துக்கு முந்தி நெருங்கிய அடவிகளால் சூழப்பட்டிருந்ததென்றும், அவ்வழியாகச் சுந்தரர் வரும்போது வழிதப்பிப் போய்விட்டாரென்றும், அம்மையும் அப்பனும்

வேடனும் வேடிச்சியுமாகப் போய்ச் சுந்தரரை அழைத்துவந்து விருந்தூட்டினாரென்றும், அவ்விருந்தில் காட்டு முருங்கையிலைக் கறி பிரதானமாக இருந்ததென்றும், எம்பெருமான் சுந்தரர்க்கு விருந்துமாத்திரம் செய்தாரேயொழிய பொன் அவ்விடத்தில் கொடுக்கவில்லையென்றும், திருத்துடி சையப்பதிக் கோவிலில் திரிசந்தியாபூசை அதிக விமரிசையாக நடந்துவந்ததென்றும் அதற்காக அநேக மானியங்கள் விடப்பட்டிருந்தன வென்றும் அறியக் கிடக்கின்றது.

சுந்தரமூர்த்தி நாயனாரும் தமக்குத் திருத்துடிசையம் பதியில் சுவாமி வேடரூபமாக வந்து காட்சிதந்த மகிமையைத் தமது திருவாழ்க்கொளி புத்தூர் திருத்தேவாரத்தில் ஓதிவைத்திருக்கிறார். அது அடியில்வருமாறு:—

திருவினையசனாகிய மாலுக்
கருள்கள் செய்திடும் தேவர்பிரானை
யுருவினானை யொன்றுவறி யொண்ணா
மூர்த்தியை விசயற்கருள் செய்வான்
செருவிலேந்தியோர் கேழற்பின் சென்றுஞ்
செங்கண்வேடனா யென்னொடும் வந்து
மருவினான்றனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத்தை மறந்தென் னினைக்கேனே.

(7-ம் முறை திருவாழ்க்கொளி புத்தூர். 6)

இத்திருப் பாசுரத்தில் விசயற்கு வேடனாய் வந்தருள் செய்த தன்மையையும் தனக்குச் செங்கண் வேடனாய் வந்தருள்செய்த தன்மையையும் விவரமாகக் கூறி யிருக்கின்

ரூர். இத்தகைய திருவிளையாடல் நடந்த ஸ்தலத்திற்குத் தனித் தேவாரம் ஒன்று இல்லையே என்பார்க்குத் தேவாரம் இருந்து இறந்து போயிற்றென்பதே விடையாகும்.

இன்னும் கொங்கு நாட்டில் திருஅன்னியூர், திருச்சேலூர், திருநாகேஸ்வரம், தாராபுரம், திருப்பேரூர் முதலிய அநேக பழய ஸ்தலங்கள் இருக்கின்றன. அவைகளுக்கும் தேவாரங்கள் கிடையா அவைகள் எல்லாம் 1008 சிவாலயங்களில் சேர்ந்தவை. அவைகளுக்கெல்லாம் இருந்த தேவாரங்கள் இறந்து போயின.

இத்துடிசையம் பதியைப்பற்றி அவிநாசிப்புராணம் சுந்தரச்சருக்கத்தில்

"மட்டிலகுமலரவிழ்ந்தவை கறையிலெழுந்து திருவாயில் சார்ந்து
விட்டசுடரொளியிலகு புக்கொளியானடிபரவி விடைபெற்றேகி
நெட்டிசையின்றமிழ்முனிபூசனையுகந்ததுடிசையில்வாழ்நிமலற்போற்றி
அட்டில்விளைப்புனமுருங்கையடகவி நல்லமுது விருந்தளிக்க வுண்டார்"

என்றும்:

கந்தப்புராணம் காவிரி நீங்குபடலத்தில்,

"செங்கை தூங்கிய தீர்த்த நீரொடும்
கொங்கின் பாற் செலக்குறீஇயமாமுனி
மங்கு கின்றவம் மைந்தர் நேருறு
வங்கண் மேவினரருந்த வத்தர்போல்
ஆசில் கொங்கினுங் கணித்திறேரிடை
வாசமீதென மகிழ்ந்து வீற்றிரீஇ
யீசனோர் தமையிலிங்க மேனியி
னேச நெஞ்சி னினைந்து தாபித்தான்"

என்றும்:

கந்தப்புராணச் சுருக்கம், அசுரகாண்டத்தில்

முடிவான கொடியோர்கள் தவமேவு துருவாச
முனிமைந்தரான முறையில்
படியோர்கள் புகழ்கும்ப முனிபின்பு முனிவோர்கள்
படிவங்கள் கொண்டு தொடரா
விடிபோலிரைப்பவுயர் கொங்குக்கணித்தாயிருந்தோரி
லிங்கமதனி
லடியார் மனத்தனை யருச்சனை புரிந்தங்
ககன்றா னவர்க்கொல்பவமே"

என்றும்

அருணகிரியார் திருப்புகழில்,

"கருடன் மிசைவரு கரியபுயலென
கமலமணியென— வுலகோரைக்
கதறியவர்பெயர் செருகிமனமது
கருதமுதுமொழி— களைநாடித்
திருடியொருபடி நெருடியறிவிலர்
செவியில் நுழைவன— கவிபாடித்
திரியுமவர்சில புலவர்மொழிவது
சிறிதுமுணர்வகை— யறியேனே
வருடையினமது முருடுபடுமகில்
மரமுமரதமு— மடிசாய
மதுரமெனுநதி பெருகியிருகரை
வழிய வகைவகை— குதிபாயும்
துருடிமலையுறை முருககுலவட
குவடுதவிபொடி— மயிலேறும்
குமரகுருபர திமிரதினகர
குறைவிலிமையவர்— பெருமாளே"

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இக்கலியுகத்தில் மகரிஷியாகிய குருவவிருடி பூசித்த தலத்திற்கு குருவவிருடி பாளையம் என்று வழங்குகிறது. இப்போது குருடம் பாளையம் என்னும் கிராமம் கிடையாது. இருந்து அழிந்து போயிற்று. ஆனால், குருடம் பாளையம் வட்டம் என்றும் அதில் புதூர், புதுமதுரை முதலிய சிற்றூர்கள் சேர்ந்திருக்கின்றன வென்றும் சர்க்கார் கணக்கால் தெரிகிறது.

விநாயக நதியென்பதும், கணேச்சுரநதி என்பதும், சந்திரநதி என்பதும், சந்திரோபநதி என்பதும், மதுரநதி என்பதும், தன்னாசிகோவில் பள்ளம் என்பதும், ஒன்றே. சந்நியாசிகளாகிய குருவவிருடி, கந்தமாமுனி முதலிய மெய்த்தவர்கள் மூழ்கிய நதியாதலால் அந்நதி அப்பேர் பெற்றது போலும். குருவவிருடி போன்ற மகரிஷிகள் எல்லாம் அந்நதியில் நீராடி, நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, அந்நதிக்கரையில் உள்ள ஒரு வேப்பமரத்தின் கீழ் அமைத்துள்ள பன்னசாலையில் செபம் செய்வது வழக்கம். இப்போதும் அந்த இடத்திற்கு 'சந்நியாசி கோவில்' அல்லது 'தன்னாசி கோவில்' என்று பெயர் வழங்குகிறது. அந்த இடத்தில் மகரிஷியின் உருவம் ஒன்று இருக்கிறது. அதற்கு இன்னும் பூசைகள் நடந்தேறிவருகின்றன. அந்த இடமானது மிக அமைதியுள்ளதாயும், செல்பவர் மனத்தைக் கவரக்கூடியதாயும், மனோகரமாயும், குளிர்ச்சியுள்ளதாயும், அவ்விடத்தில் கொஞ்சநேரம் இருந்து செபம் செய்வோருக்கு வேண்டிய இஷ்டசித்திகளை அளிப்பதாயும் உள்ளது.

இக்காலத்தும் அநேகம்பேர் அவ்விடத்திற்குச் சென்று, வழிபட்டு வேண்டிய வரங்களைப் பெற்றுப் போகின்றதை ஒவ்வொருவரும் அறியலாம். செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக் கிழமையும் அவ்விடத்தில் மிகவும் விசேஷமான நாட்கள்.

மதுராநதியின் கரையிலுள்ள ஊர் 'மதுரை' எனப் பெயர் பெற்றது. அம்மதுரை இப்போதுள்ள கூடலாலவாய் என்னும் தென் மதுரைக்கும், வடக்கிலுள்ள 'வட மதுரைக்கும் மத்தியில் புதிதாய் ஏற்பட்டதால் புதுமதுரை எனப் பெயர்பெற்றது போலும்.

இத்தலம் சத்திகிரியாகிய குருவவிருடி கிரிக்குப் பிரதான ஸ்தலமாதலால், சத்தியாகிய உருப்பெரு வழகியார் என்னும் திருநாமமுடைய என்னம்மையாருடைய கருணை நோக்கத்தைப் பெரிதும் கொண்டுளது. இத்தல மகாத்மியங்களை "திருத்துடிசை மான்மியம்" என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

அ. சி.

உ

கணபதிதுணை.

சிறப்புப்பாயிரம்.

திருமாநறல் சைவஸ்ரீ பண்டிதர்

கார்த்திகேய முதலியார் அவர்கள்

இயற்றிய

சாத்துக்கவி.

நேரிசையாசிரியப்பா.

வயங்கு கடலத்து வசையில் பஃறேத்துத்
தயங்கு தமிணாடு தவப்பல வெட்புறாஉம்
மற்றதன் பாலாய் வயங்கொள் டன்ணாட்டுளும்
கொற்றப் படைகுடி கூழ் முதலுடைய
மங்குன் மணங்கொளீஇ மழைநனி பொழிவுறாஉம்
கொங்கு நன்ணாட்குளிக் கோயம்புத் தூரின்
மதிதிசைக் குறிச்சி வளாசமாகித்
துதிசெய வீறுசால் துடிசை நகருளதால்
அடவி முருங்கை ஆற்றவும் இனிதாப்
டடவரு பகிமையின் பைந்தமிழ்ப் பொலிவின்
திருக் கோபுரத்தின் திருமாளிகையின்

திருவத்த வாகிச் சிறக்கு மூப்பதிக்கண்
கங்கையுரிமையே காசினியுரிமையே
மங்கைபாகன் வரத்தி னுரிமையான்
தெய்வமணியொடு திருநீற்றழகினன்
வைதிகசைவ மரபுறு மாண்பினன்
அர்த்தநாரீச அருந்தவப் பெயரோன்
பத்திமையின்ஞொளிர் பண்புடை மக்களுட்
பொன்னங் கொங்கிற் புகழ்பல * நீர்மையும்
தன்னுழியூங்கும் தகவருங் குரிசில்
அருந்தவப்பயில்வோ டாங்கிலமும்பயில்
பெருந்தவமுதலி பிரானன்பு கூர்ந்தென
வடதமிழ் தென்றமிழ் என்பவற்றியற்கை
நடைபெறு தென்றமிழ் நடையிற் கவினி
கடிகமழ் கதலியங்கனியி னுகர்வான்
துடிசையம் புராணம் துலக்கியச் சிட்டனன்
அஞ்சலி தனக்குடை அரன்பெருமை யாகலின்
அஞ்செவியுறினும் ஆவன ஆகிற்கும்
தூங்காமைகல்வி துணிவுடைமை மூன்றும்
நீங்காமைபேணி நெடுநிலங் காவல்செய்
ஆங்கில அரையர்பால் அலுவல் முதன்மை
தீங்கற நடாத்தும் சிதம்பரப் பெயரினன்
ஆவுங்கிளியும் அன்னோர்
தாமுமுணருச் சழக்கறுபாக்கே.

---

* பலவகைப்படு தானமுமென்னும் செய்யுளால் அந் நீர்மைகளை யுணர்க.

(நாட்டுச் சருக்கம் 2-வது செய்யுள்)

அச்செய்யுள் பல என்னும் சொல்லில் தொடங்கலின் ஈண்டும் பல என்னும் சொல் குறிப்பிக்கப்பட்டது.

துடிசைப்புராணம்.

உ

திருச்சிற்றம்பலம்.

துடிசைப் புராணம்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

விநாயகர் வணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1. உலகேழு மேழுமதித் துய்யவருள்
செய்ய வரு வுருவாய்த் தோன்றி
நலநீடு துடிசைவள நகர்வடநீ
ழலிற் பொலிந்தென் றுமோங்கு
நிலவேறு செழும்பவள நிறவேணி
யானை முக நிமலன் கஞ்ச
மலர் போலு முபயநவ மணிச் சதங்கைத்
திருப்பதங்கள் வழுத்தி வாழ்வாம்.

கலிவிருத்தம்.

2. அரசித்தி முதற்றருக்க ளடர்பொழிலந் தரத்தினைக்
குரசித்தி நகரினிடை யொதுங்கவிமிர் துடிசைதனிற்
கரசித்தி ரமுஞ் சிலையுங் காமனு மிட் டிறைஞ்சவளர்
வரசித்தி விநாயகனை மனத்திருத்தி மருவிப்பாம்.

விருந்தீசர் துதி.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அரியமறை முதற்பொருளா யண்டபகி ரண்டமுமா யதற்கப் பாலா
யுரியதவ முனிவரரு முணரவொண்ணுப் பேரின்ப வுருவாய்த் தூய
துரியமுடி வானபரஞ் சோதியாய்ப் படிபுகழத் துடிசை மேவும்
விரிகிரண மதிவேணி விருந் தீச ரடிமுடியின் மேற்கொண்டுய்வாம்.

விஸ்வநாயகியம்மன் துதி.

4. போதநா யகி கருணைப் புனிதநா யகியளவில் புவன சீவ
பேதநா யகி முழுதும் பெற்ற நாயகி யருமைப் பேரா னந்த
நீதநா யகிகீத சிருத்தநா யகியடியார் வினைவி னீக்கா
வேதநா யகிதுடிசை விசுவநா யகிதுணைத்தாள் வியத்தல் [செய்வாம்.

சபாநாயகர் துதி.

5. கடவுளரு முனிவரருங் கைகுவித்து மெய்சிலிர்ப்பக்
கணங்கொண்டாடப்
படவரவ மணிதிகழப் பவளநெடுஞ்
சடைகுலுங்கப் பருவச்செம்பொற்
குடவிகர்மென் முலையுமைகண் குளிர்ந்திதையங்
களிகூரக்குறைதீ ரின்ப
நடனமிடு ஞானசபா நாயகன்கிண்
கிணிச்சரண நளினம் போற்றி.

சிவகாமியம்மன் துதி.

6. சகலவுல கமும்படைத்த சதுர்முகனைத் தந்தவுந்தித்
தனிப்புத்தேளும்
பகலிரவு திருவிளைகல் பலவுழன்று முணர்வரிய
பயனென்றன்று

புகழ்முனிவ ரடைய வெங்கோன் புரிநடனங்
கண்டுகளிபூத்து நின்ற
சிகரவன முலைக்கருங்கட் சிவகாம வல்லிபதஞ்
சென்னி சேர்ப்பாம்.

இலக்குமி நாராயணர் துதி.

7. காராருந் திருமேனிப் பெருமாளைத் தெய்வமணங்
கமழு மின்பத்
தாராரும் புயசைல மாதவனை மலர் மடந்தை
தழுவு வோனைப்
பாராரும் பதாம்புயனைப் பழமறையின் முடிவிலுறை
பரம ஞானச்
சீராரு மிலக்குமண நாராய ணனைப் பணிதல்
செய்குவாமே.

தக்கிணாமூர்த்தி துதி.

கலிவிருத்தம்.

8. வடவிழ லமர்ந்தரு மறையின் மெய்ப்பொருட்
டிடமதை நால்வருந்தே எர்ந் தொருப்பட
வுடனொரு குறியினா லுணர்த்து மற்புதக்
கடவுளர் திருப்பதங் கருத்தி ருத்துவாம்.

ஆலடி விநாயகர் துதி.

9. கோலடியி னோர்கடவிக் கொண்டு மள்ள ருழுதவயற்
சாலடியின் மணிச்செழுஞ்சூற் சங்கமதிர் தனித்துடிசை
யாலடியின் முளைத்த வரு ளத்திமுக வரசினிரு
காலடியின் மனம் பொருத்திக் கைகுவித்துக் கலிதுரப்பாம்.

சுப்பிரமணியர் துதி.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

10. வயல்வளஞ்சூழ் செழுந்துடிசை மாநகரா
லயத்துளருள் வடிவா யோங்கு

நயவிருந்தீ சுரன்விசுவ நாயகிகண் களிப்பவன்
ஞோர்நடுவட் டோன்றிப்
புயமெனும்பூ தரந்ததும்பப் பொற்கதையு
மணிமுடியும் பூணு மின்னச்
செயநலங்கூர் கிரியதன்மேற் சிறந்துறைநங் குருபரன்றன்
சிந்தை செய்வாம்.

மருதாசலபதி துதி.

11. * கருதமலை சிவபெருமான் கண்களிக்க விளையாடிக்
கலங்கா வெஞ்சூர்
† பொருதமலை யடக்கிமுனம் புரந்தரற்கு முடிசூட்டிப்
புடைசூ ழன்பர்க்
‡ கொருதமலை வகற்றிவர முகந்தளித்துச் சகந்துதிக்க
வோங்கு செல்வ
மருதமலை வீற்றிருந்த வடிவேற்கைக் குகன்மலர்த்தாள்
வணக்கஞ் செய்வாம்.

அனுமக்குமார் துதி.

12. அடலவுணர் கொடுமையினொந் தருந்தவஞ்செய்
திருந்தவர்க ளறிவு தேற
வுடனெடிய மாருதிபோன் றுதித்தருளித் துதித்திடப்
பின் ஞெருநா டன்னிற்
சுடர்பரவு தனதுருவந் தோன்றவந்து காட்சி நல்கித்
துயர்தீர்த் தாண்ட
திடவனுமக் குமர மலைச் செவ்வேள் பொற்
பதநளினஞ் சென்னி சேர்ப்பாம்.

கலைமகள் வணக்கம்.

13. § திவளமல கிரணமதி தினமுமுலாம் பொழில்கடொறுந்
தேன்வண் டூட்டுங்

---

* கருது + அமலை
† பொருத + மலை
‡ ஒரு + தம் + மலைவு
§ திவள் + + அமலவெள்ளிய

|| துவளமல கரிபாடுந் துடிசைவிருந் தீசனிசைச்
சொன்னூன் முற்றப்
பவளமல விதுகோவைப் பழமெனுமெல் லிதழ்க்கருணைப்
பார்வைச் செங்கைத்
தவளமல ராசனமுந் தமிழ்மடந்தை பரிபுரத்தா
டலைமேற் கொள்வாம்.

வயிரவர் துதி.

கலி விருத்தம்.

14. செயிரவ வினைகளைச் சிதைத்துப் புண்ணியப்
◊ பயிரவ னியின்மிகப் பயின்று நோற்றுளோர்
□ கயிரவ முதன்மலர் தூவிக் கைதொழும்
வயிரவ னிருபத மனத்தி ருத்துவாம்.

இரவி துதி.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

15. * எரியனை போலவள ரிளநயன முகமலர
விருள்போய் நீங்கச்
† சிரியனை வளமுதற்பண் சிறைச்சுரும்பர் சிறைத்தியம்பத்
திரைமுந் நீர்சூழ்
‡ பாரியனை யாதிலங்கப் பனிவிசும்பி னெழுந்துயிர்பற்
பலவுங் காக்குஞ்
சூரியனை மறைதிக்கு மாரியனைத் தொழுதுபவத்
தொடர்வு தீர்வாம்.

|| மலகரி = ஓரிராகம்   # தவளமலர் = வெண்டாமரை
செயிர் + அவ + வினைகள் + குற்றம்பொருந்திய பாவக் கருமங்கள்
◊ பயிர் + அவனி   □ கயிரவம் = ஆம்பல்
[illegible]   † சிரியல் + கைவளம் கைவளம் = ஓர் பண்
‡ பாரியல் + கையாதிலங்க

நந்திதேவர் துதி.

16. இந்திரா தியாயா ருங்கை யேந்தவேத் திரக்கோல் வீசிப்
பந்தமா மகுட கோடிப் பருமணி யுகவி லக்கி
மந்திரா லயப்ப சும்பொன் வாயில்காத் துலவு ஞான
நந்திநா யகனை யெந்த நாளினு நம்பி வாழ்வாம்.

தண்டீசர் துதி.

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

17. மலர்கனி யீட்டி மணலினைக் கூட்டி மறைமுதல்
வடிவதிற் காட்டி
நிலவபி டேக நெறியினுக் காக நிறைத்தபாற்
குடங்கள்பின் போக
நலனுயர் முந்தை நாட்பெறு லீந்தை நாவொடு
தோன்றிய தந்தை
சலனமு மனத்திற் சலனமுந் தடிந்த தண்டியைத்
தொழுதிடர் தவிர்வாம்.

திருஞானசம்பந்தர் துதி.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

18. வீடேற விரும்புமன்ப ரீடேற வமணர்கழு
வீழ்ந்து வானி
னூடேறச் சைவநெறி நாடேற மேன்மையெலா
முடனே மாறன்
மாடேற வுயிர்பலவும் வளர்ந்தேறப்
புனலெதிரே வையை யாற்றி
லேடேற வருபுகலி யெந்தைதனைச் சிந்தைதனி
லிருத்தி வாழ்வாம்.

அப்பர் துதி.

19. சிவபெருமா னடியர்செய்கைத் திறம்பெரிதென்
றுலகனைத்துந் தெளிந்து தேறத்
தவமுயலா துளமிருண்ட சயினவஞ்சர் பிணித்துவிட்ட
தனிமாக் குன்றுங்

கவலையிலா வைந்தெழுத்துங் கருதுபுணை யாகவுவர்க்
கடலுந் தொல்லைப்
பவவினையா மெழுகடலும் பரிவொடுநீந் திறைவனடி
பணிதல் செய்வாம்.

சுந்தரர் துதி.

20. * மாதங்க வரன்பரவை மனைத்திருத்த நதியுடை
வழிகாட் டிச்சும் ‖
மாதங்க நறவொழுகு மலர்க்கமலா லயத்துள் வந்து
வாய்த்த செங்கண்
■ மாதங்க யாகவிண்ணு மண்ணுமதித் திடும்படிமுன்
மதவான் வெள்ளை
◊ மாதங்க மெய்தமொழி மதுரகவி நாவலன்றன்
வணக்கஞ் செய்வாம்.

மாணிக்கவாசகர் துதி.

21. சரியாக நாங்கவர்ந்த தன்மையென்றச் சுறுத்துமன்னன்
றன்கொண் டாடப்
புரியாக முனிவர்குழாம் புடைசூழ்ந்து
புகழ்மதுரா புரியி னூடு
நரியாக மம்பகர்ந்த நடையினிலக் கணம்பொருந்தி
நவைதீர்ந் துள்ள
பரியாக வமுதகவி பாடியகா வலனிருதாள்
பணிதல் செய்வாம்.

திருத்தொண்டர் துதி.

கலிவிருத்தம்.

22. வண்டர் பாடும லர்த்தரு நன்னிழ
லண்டர் மாலய னன்புசெ யுங்கறைக்
கண்டர் பாதங்க ருத்திருத் துந்திருத்
தொண்டர் யாரையுஞ் சூழ்ந்துவ ணங்குவாம்.

---

* மாதங்க அரன் } = யானை யுரித்த அரன் ‖ சும்மா + தங்க நறவு
= அர்த்தநாரீஸ்வரன்

■ மா + தங்கமாக ◊ மாதங்கம் = யானை

அவையடக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

23. வேதகீ தமுமிருவர் வியன்சுவைப்பா டலுமகலா
விமலன் காதிற்
பூதவோ தையுமுழைவாய்ப் புன்குரலு நன்குறவுட்
புகுந்த வன்றோ
வாதலா லன்புபற்றி யறியாத சிறியேனிக்
காற்று பாவும்
பேதமா காதுவக்கப் பெறுமெனவே துணிந்திதனைப்
பேசுகிற்பேன்.

கலி நிலைத்துறை.

24. சென்ம நாண்முதற் கனவினும் பேசியே தெரியாக்
கன்ம ஆமனெக் கலைகளுஞ் சொலப்புகுங் கணக்காம்
வெண்ம தாசல வுரிவைபோர்த் தருள்விருந் தீசன்
றொன்மை மான்மியம் பாடநான் றொடங்கிய துணிவே.

பாயிர முற்றிற்று.

ஆகப் பாக்கள் - 24.

நைமிசச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

1. திருவ யங்கிய மார்பினன் வருந்திவெண் டிரைப்பா
லிருநெ டுங்கடல் கடைந்தெடுத் தருளமு தருத்து
மருமை யும்பரந் தணர்மகத் தவிவிருப் பதனன்
மருவி யெங்கணு மலிவது நைமிச வனமே.

2. கடம்பு பாடலங் காகதுண்[1] டங்கருங் காலி
வடங்க[2] டுக்கை[3]பிப் பலந்[4]திமி[5] லஞ்சனி[6] மருதம்
படர்ந்த நாக[7]மா தவி[8]செழுஞ் சண்பகம் பனச[9]
மடர்ந்து விண்முக டளக்குமங் கொருபுறத் தன்றே.

3. கந்த[10] ரஞ்சித றுந்துளிக் கிடையிடை கதித்த
கந்த ரஞ்சித மலர்மனுத் தருத்திரள் காட்டுஞ்
சந்த[11] னந்தலை யுறுக்கதிர்ப் பரியடி தடுக்கச்
சந்த னந்தலை விமிர்ந்துவான் முகட்டினைத் தடவும்.

4. வண்ட லம்புவி சித்திர மலர்த்தரு மண்மேல்
மண்ட லம்புவி யெண்டிசை கமழ்ந்திட வழங்கும்

---

1. காகதுண்டம் = அகில்
2. வடம் = ஆலமரம்
3. கடுக்கை = கொன்றை
4. பிப்பலம் = அரசு
5. திமில் = வேங்கை
6. அஞ்சனி = காயா
7. நாகம் = புன்னை
8. மாதவி = குருக்கத்தி
9. பனசம் = பலாமரம்
10. கந்தரம் = மேகம்
11. சந்து + அனந்தலையுறு (= நித்திரை யில்லாத)

[12] கொண்ட லங்கிய மெனவதிர் தரநயக் குறிப்புட்
[13] கொண்ட லங்கிய வனநடஞ் செயுமயிற் குலங்கள்

5. [14] கொடுவ ரித்திர டமதுபாற் கொடுத்துமான் [15] குருளைக்
கடுப சிப்பிணி யவித்துளங் குழைந்துதா லாட்டும்
படும தக்கயக் கன்றினை மடங்கல்பா ராட்டி
நெடுந யப்பினா லணைத்துடல் புளகெழ நீவும்.

6. பருந்துங் கிள்ளையு மிருந்தொரு பஞ்சரம் பயிலும்
வருந்துஞ் சிற்றெலிக் கராவெயிற் படங்கொடு மறைக்குந்
திருந்துந் தண்ணரு ளாற் புலிப் பறழினந் தெவிட்டப்
பொருந்தும் புண்ணிய வனத்திளம் பசுக்கள்பாற் புகட்டும்.

கலி விருத்தம்.

7. வேத வோதையும் வேள்விசெய் மாதவர்
போத வோதையும் புள்ளிலங் கோதையும்
கீத வோதையும் கேடில்விண் ணோதையு
மோத வோதையு மொல்க வொலிக்குமே.

8. காம ரங்களி னெங்குங்க லந்துராய்க்
காம ரங்களி வண்டினங் காட்டுமால்
நாம வந்தனை நாளுமொ ரீஇச்சிவ
நாம வந்தனை நத்தும்வி லங்குமே.

9. வாவு மந்திய [16] மாதவர்க்கே வற்றி
வாவு மந்தியும் வந்துபு ரிந்திடுந்
தூவு மாபதி தொண்டரி டர்தொ றுந்
தூவு மாபதிச் சோலைகள் பூவையே.

---

12. கொண்டல் + அங்கு + இயம் + என ; இயம் = வாத்தியம்
13. கொண்டு + அலங்கிய ; அலங்கிய = குலுங்கிய
14. கொடுவரி = புலி
15. குருளை = குட்டி
16 மாதவர்க்கு + ஏவல் + திவாவும் + அந்தியும்.

10. தத்தை யின்றித்த வம்புரிந் தேமனந்
தத்தை யின்றித்த ழைப்பவர் வேதகீ
தத்தை யென்றும்ப யின்றுத ருப்பசுந்
தத்தை யின்றுத னித்தனி பாடுமே.

11. வான போகமு வையக வின்பமு
மீன மாகவி கந்துத வம்புரி
ஞான யோகர்ந யந்துறை கின்றவக்
கான மேன்மைக ணிப்பவர் யாவரே.

12. தவமெ னுஞ்செழுஞ் சாலிவி ளைநிலம்
பவமெ னும்பிணி பாற்றும ருந்திட
முவமை யின்பமு தாவரு ளாலய
நவவ ளம்புனை நைமிசக் கானமே.

13. மவுன ஞானம லர்க்குமக் கானிடை
சவுன காதிமு னிவர்த வத்தினாற்
புவியு மாகமும் போற்றுற முன்னைநா
ளவிகொள் வேள்வியொன் றாற்றின ரென்பவே.

14. புனித மாதவர் போற்றியி யற்றுமவ்
வினிய வேள்வியி னைநலங் காணிய
கனிவி னோடுல கத்தினங் கங்குள
முனிவர் யாருமு டுகிமொய்த் தாரரோ.

15. வாத ராயணன் வாய்ப்பயில் கேள்வியும்
போத வோதிப்பு லமையின் மிக்குயர்
சூத மாமுனி யுந்துற வோர்புரி
வேத வேள்வி ரும்புபு மேவினன்.

16. துன்றி வந்தவச் சூதமு னிக்கெதிர்
சென்றி றைஞ்சித்தி ருந்தவு பசரித்
தன்றி ருந்தவர் யாரும்பு ரிந்தபே
றின்றி சைந்ததெ மக்கென வேத்தினர்.

17. போற்றி யந்தப்பு ளிதனை யாசனத்
தேற்றி யன்பினி யற்படி பூசனை
யாற்றி வந்தித்த ருளினி ருந்திடர்
மாற்றி யின்புயர் மாதவர் கூறுவார்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

18. [17]விடையவிரு டவிர்வேத வியாதமுனி
வரனிடத்து மேலாந் தொன்னூ
லடையவுணர் சூதவுனை யல்லதெவர்
கல்விநிலை யளக்க வல்லார்
கடைகடலி னமுதெனநீ காந்தமுதற்
பலகலையுங் கருணை கூர்ந்து
தடையறமு னருளியதாற் சமவுளம்பெற்
றெளியோஞ் சஞ் சலந்தீர்ந் துள்ளேம்

19. அரியசிவ புராணகதை யனைத்துமுன
தருளினிற்கொண் டவற்றுளிங்கு
வரிசைதிகழ் தலந்தீர்த்த மூர்த்தி விசே
டம்பலவு மதித்துத் தேர்ந்தேந்
திரிபுவன மீது முயர் வொப் பின்றிப்
பரமகதிச் செல்வநல்க
வுரியபதி யின்னமும்வே றுளதாயி
னெமக்கு விரித்துரைத்தல் வேண்டும்.

20. என்று தவ வனசவுன காதிமுனி வரர்கடொழு
தேத்தச் சூத
னன்றுமது மனவிழைவி னுனீவிர் கேட்டபடி
ஞானதான
மொன்றுளது பரமரக சியமாமங் கதன்
பெருமை யுணர்கிற் பார்யார்

17 விடயம் என்றது விடையம் என்றாயிற்று.

அன்றுலக மளர்ந்தபிரா னயன் முதலோ
ராலுமுணைப்பரிது மாதோ.

21. நீவிர்வழி பாடுடைய நெறியினரா தலினு
மக்கு நிகழ்த்த லாமவ்
வாவிதிகழ் சிவதலத்தின் மகிமையெனச்
சூதமுனி மனத்தினாடு
தேவியுமை பாகனையோர் முகூர்த்தநினைத்
துடல் பொடிப்பச் செங்கை கூப்பி
யோவியம தொத்திருந்து வியாதனைவாழ்த்
தெடுத்துமற்ற துணர்த்த லுற்றான்.

நைமிசச் சருக்கம்

முற்றும்.

ஆகப் பாக்கள்-45.

நாட்டுச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

1. கயலு லாவுவெண் டிரையென்ப பலவேதங் கரத்தா
லயலெ லாந்தர ளங்கொழித் ததிர்கட லாடைப்
புயல ளாவுபொன் மலைக்குவி முலைப்புவி மகட்கு
நயன மாமணி போல்வது கொங்குநன் னாடு.
2. பலவ கைப்படு தானமுந் தருமமும் பண்புங்
குலவொ ழுக்கமு ஞானமுங் கருணையுங் குழைவு
மிலகு பத்தியு நீதியும் பொறுமையு மென்னும்
நலப யிர்த்தொகை விளைவது கொங்குநன் னாடு.
3. விதியெ லாந்தனித் தனிதரு வதுசிவ னியம
மதியெ லாமுயர் விப்பது மருள்வினை மாற்றிக்

கதியெ லாமுணர்த் திடுவது திரைநெடுங் கரத்தா
னதியெ லாமணி கொழிப்பது கொங்குநன் னாடு.

4. பூம கட்குமற் புதநெடுந் திறலணி புனிதக்
கோம கட்குநெட் டிதழ்விரி பங்கயக் கோவின்
மாம கட்குமின் னமுதுறழ் கவிவலர் வழுத்து
நாம கட்குமோ ருறையுளாங் கொங்குநன் னாடு.

5. சீல மும்பல செல்வமுஞ் செறிவது திகழ்முக்
கால முந்தெரி தவத்தர்வீற் றிருப்பது கமல
சால முங்குமு தமுங்கமழ் தடத்ததந் தரமு
ஞால மும்புகழ்ந் திடுவது கொங்குநன் னாடு.

6. மாத மும்மழை பொழிவது வருடமுப் போகம்
போத வண்மையிற் பலிப்பது குடிதழீஇப் புகழ்கூர்
நீத மன்னவர் நிறைவது பிறையணி விமல
நாத னின்னரு டழைப்பது கொங்குநன் னாடு.

7. மருது கூவிள மிதழி[1]சந் தகில்பனை மரவங்[2]
குருகு[3] பாடலஞ் சண்பகங் குராமகிழ் குடசங்[4]
கருத சோகுபுன் னாகநா ரத்தைதேன் கமுகு
பொருவில் வாழையின் னணசெறி வனசில பொழில்கள்

8. கோங்கு பஞ்சர[5] மருப்பலங்[6] கிகிணி[7]பூங் குருந்த
மோங்கு சிந்துர[8] மாம்பிரஞ்[9] சதாபல[10] முலவை[11]

1. இதழி = கொன்றை
2. மரவம் = குங்குமமரம்
3. குருகு = குருக்கத்தி
4. குடசம் = மலை மல்லிகை, வெட்பாலை
5. பஞ்சரம் = செருந்திமரம்
6. அருப்பலம் = அனிச்சமரம்
7. கிகிணி = காக்கணஞ் செடி
8. சிந்துரம் = புளியமரம், வெட்சி
. ஆம்பிரம் = மாமரம்
10. சதாபலம் = எலுமிச்சை
11. உலவை = ஓடைமரம்

பாங்கு தும்பரம்[12] பதரி[13] கிஞ் சுகந்[14] திமில்[15] பழங்க
டுங்கு றும்பல விளைதுறு முவசில சோலை

9. குல்லை[16] தாதகி[17] கேதகை வலம்புரி[18] குளிர்வெண்
முல்லை மாலதி[19] பித்திகை[20] சாதிதேன் முரல
வெல்லை தீர்மண மெய்திமே லோரெடுத் திசைத்த
சொல்லை யேவிசர்த் துயர்ந்தடர் வனசில சோலை

10. தவழு மாமழை முழவொலி செயமலர் தருதேன்
கவர்ஙி வீழுகக் கணாந்திசை தொறுமிசை காட்டப்
பவள வாயனம் பார்த்துளக் களிகொளப் பரிந்து
துவள்க லாபமென் சிகிநடிப் பனசில சோலை

11. அடர்நெ டுஞ்சினைத் தருமுழு வதுந்தலை யசையாப்
படர்செ ழுஞ்சுவைக் கனிமலர் நறவொடு பருகி
யிடர்த விர்ந்தசொற் புரவலர் நிகர்ப்பவின் னிசைக
டொடரி ளங்கிளித் தொகைமிழற் றுவசில சோலை

12. மலர்க ளுடொறுங் கொய்திட வருமிள மடவா
ரிலகு வாயுரை யின்னிசை செவிப்படுத் திருந்து
குலவு பூவையுங் கிள்ளையும் பேசவுட் கூசிச்
சுலவு மாமிசைக் குயின்மயங் குவசில சோலை

13. தடைப டாதசெங் கோனெறி மன்னவர் தமைப்போன்
றிடைவி டாதொழுக் கெய்திநன் னிதியெடுத் திறைத்து
மிடைவ ரான்முதன் மீனின மெதிர்கொள விளங்கி
நடைத வாப்பரித் திரள்விகர் வனசில நதிகள்.

---

12. தும்பரம் = அத்தி
13. பதரி = இலந்தை
14. கிஞ்சுகம் = பலாசு, முள்முருக்கு
15. திமில் = வேங்கை
16. குல்லை = கஞ்சா, துளசி, வெட்சி
17. தாதகி = ஆத்தி
18. வலம்புரி = நந்தியாவத்தம்
19. மாலதி = மல்லிகை
20. பித்திகை = சிறு சண்பகம்

14. நறைந றுந்துளி நுகர்ந்துதா தளைந்துள் நயப்பாற்
கறைத புஞ்சிறை வண்டிசை மிழற்றுசெங் கழுநீர்த்
துறைதொ றுங்கமஞ் சூலுளைந் தலறிவெண் சுடர்ச்சங்
குறைசெ ழுந்தர ளங்களை யுயிர்ப்பன வோடை.

15. அன்ன நாரைகின் னரமுத லாயபுள் ளனந்தஞ்
சொன்ன வாம்பல தேயமாந் தருமொரு துறைபுக்
கின்ன வாறென வறிவொணா வுரைவிரித் தென்ன
பொன்ன வாமலர் தொறுமொலிப் பனதடம் பொய்கை.

16. சுணங்கு பூத்தட ரிளமுலைக் கயல்விழித் தொடித்தோ
ளணங்க னாரிடை வருந்தமென் கருங்குழ லலையக்
கணங்கொ டாடுமக் காரணத் தாற்செழுங் களப
மணங்க ணாடொறு நீங்குறா தனமலர் வாவி.

17. தூவி ளங்கரும் பார்ந்தெழு பகடுக டோயப்
பூவி ரும்புனல் வாளைகள் வெருண்டுபைம் பொழிலின்
மேவி யின்றுயில் புரிமழை மின்னிட விரைந்து
தாவி மென்கமு கின்கனி யுதிர்ப்பன தடாகம்

18. தாது பூசிவண் டினந்துயில் கூர்செழுஞ் சலசப்
போது சூழரக் காம்பலிந் தீவரம் பொழிதேன்
மீது லாவுசெங் குவளைமென் பானல்வெண் ணெய்தல்
கோது ருதவிம் மலர்பல மலிவன குளங்கள்.

19. அரம்பை மாபலா வருங்கனி யுடைந்துகு மமுது
நிரம்பு பூமலர் னின்றிழி தேறலு மிமிர்ந்து
பரம்பு காரெரும் பாய்ந்துநித் திலமுமிழ் பணில
வரம்பு மேல்வழிந் தோடநெல் வளர்வன வயல்கள்

20. நதிசெ ழுந்தடங் கொழித்தவெண் மணிதிசை நாலுங்
கதிர்பொ ழிந்தொளிர் காட்சிநம் புவிக்கொருக் காலு
மெதிர நின்றிது வென்றுபொன் னுலகினை யிகழ்ந்து
மதிகொ ளிங்கித முறுவல்செய் திருப்பது மானும்.

21. தடங்க ளெங்கணு மோதிம மன்னலார் தண்ணீர்க்
குடங்க ளெங்கணுங் குளிர்வளை கொழித்தவெண் டரள
மடங்க ளெங்கணு மன்னதா னங்கள் பொன் மனையி
னிடங்க ளெங்கணு மங்கல முரசவின் னிசைகள்

22. நிலமெ லாம்விளை செந்நெலுங் கன்னலு நெருங்குந்
தலமெ லாநவ மணியொளிர் தரும்பல தருவின்
பலமெ லாநற வொழுகுமன் புளமெலாம் பரவுங்
குலமெ லாநிறைந் தோங்குநற் புண்ணிய குணமே.

நாட்டுச் சருக்கம் முற்றும்.

ஆகமொத்தம் 67.

கிரிச் சருக்கம்.

கலி விருத்தம்.

1. கூறிய வளம்புனை கொங்கு நாட்டிடை
தேறிய தனிப்பர சிவசொ ரூபமாய்த்
தூறிய மழைமுகில் சுமந்து தோன்றுமால்
வீறிய மணிமுடி வெள்ளி மால்வரை

2. மால்வரை பரசிவ வடிவ மேயதின்
மேல்வள ரைவகை றுயனி லிங்கமு
நால்வரு முணரமெய் ஞான நல்கவன்
றூல்வரு கடவுள்பஞ் சான னங்களே.

3. சுருதியின் றுணுவிது சொன்ன வைவகை
மருளிலிங் கங்களு மவனி யாதியாம்
பெருமையைம் பூதநற் பெயர்க ளேபடைத்
துருகுமன் பினர்பவ மொழித்தங் கோங்குமால்.

4. அரனுரு வெனற்கடை யாள மாகவவ்
வரனெடு வரைதனில் வல்லி பூம்புற்
பரவிய தருக்கள்பற் பலவு நாடொறுந்
தரணிவிண் வியப்புறச் சடைக டாங்குமே.

5. மறைபுகழ் பற்பல மலர்த்த டஞ்சுனை
யுறைசிவ தொண்டர்த முள்ள மாகவே
கறைதவிர் நிலையவாய்க் கருதி மூழ்குநர்
குறைகளை முடித்துடன் கொடுக்கு முத்தியே.

6. கருடர்கின் னரர்சிவ கணத்தர் சித்தர்கிம்
புருடர்விஞ் சையர்சுரர் புயங்கர் மற்றுளோர்
வருடம தெனமலர் தூய்வ ணங்கவின்
றருடனைக் குறிப்பினீந் தளிக்கு மவ்வரை.

7. கடலெழு திங்கடன் களங்க வெம்பிணி
யுடனொளி தரத்தகு மோர்ம ருந்தினைச்
சுடர்நெடு வரையிடை தருவுந் தன்மைபோற்
றிடவன முழைதொறுந் திருந்து மீளுமே.

8. ககனமுற் றிலங்குகற் கடக ராசியைச்
சிகரமற் கடமெதிர் தெரிந்து வாய்வெரீஇ
யுகடவிற் பலவிரு லுடைந்து சிந்து தேன்
புகழ்படைத் தருவியிற் பொங்கு மெங்குமே.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

9. சோதியந் தருக்க ளானுஞ் சுரர்மகு டங்க ளானு
மீதிலங் கொளிக ளானும் வெண்டா ளங்க ளானு
மோதிருங் கனகத் தானு முயர்மணிக் குலங்க ளானுஞ்
சீதறும் பகலு மல்லுந் தெரிதரப் படாதங் சம்மா

10. எக்கணமெனையர் தாஞ்சென் றேத்தினு மனைய ரெண்ண
மக்கண முடியு மாறின் னருள்செயு மமல ஞான

தெக்கண கயிலையாகித் திகழ்தரு மெனில்வா னுடர்
றொக்கண வியலக் குன்றின் பெருமையார் சொல்ல வல்லார்.

11. உரைபுரி வெள்ளிக் குன்றி னுத்தர ஞாங்கர்த் தோன்றித்
திரைகட லுடுத்த பாரெண் டிசைவிசும் பெவையு முய்யப்
புரைதபு வடிவேற் செங்கைப் புனிதனை யினிது தாங்கி
வரைவரு வளமை பெற்று மருதமால் வரையொன் றோங்கும்.

12. வரிச்சிறைச் சுரும்பர் பாட மதுவுமி ழிதழி வில்வந்
தரித்துமென் புனலு மேந்தித் தவழ்பிறை முடிமேற்கொண்டு
விரித்தபை யரவந் தாங்கி மிளிர்தலான் மருத வெற்பு
சிரித்துமுப் புரத்தைவென்ற சிவபிரா னிகர்க்கு மன்றே.

13. காந்தள்பைங் குழலி மென்பூங் கடம்பொடு குரவு வெட்சி
தேந்தழு வியகூ தாளஞ் சுமந்துபொற் சிகிமேற் கொண்டு
வாய்ந்தவள் ளியைம ணந்து வளர்தலான் மருத வெற்பு
வேய்ந்தபொன் னுலகு காத்த வெள்ளிவேற் குமரன் போலும்.

14. சூர்முத லவுணர்ச் செற்றுச் சுரரிடர் முழுதும் போக்கி
வார்முலை வள்ளி தெய்வ வாரணி வதுவை யெய்திக்
கூர்மலி நெடுவேற் செங்கைக் குமரன்வீற் றிருப்ப தென்னிற்
பார்மகிழ் மருத வெற்பின் பரிசெவர் தெரிக்கற் பாலார்.

15. மின்புரை வடிவேற் கந்த வேளுறை சினக ரத்தின்
றென்புறத் தெழுந்து மீப்போய்ச் சேண்முக டுறவி நீண்டு
வன்பணை விரித்து மென்பூ மலர்ந்துபல் வளனு மெய்தி
யன்பர்கள் பரவ நிற்கு மருச்சுனத் தருவொன் றன்றே.

16. அனையபூந் தருவின் வேர்க்க ணகன்சுனை யொன்று தோன்று
மினைவுதீர் மருத தீர்த்த மென்பர்மற் றதையங் கெய்தி
நினைவொடு திளைத்தோ ரெந்த நீசரே யெனினுந் தொல்லை
வினையிருள் விடியப் பெற்று வீடுவந் தெய்து வாரால்.

17. மழைமுகில் வறந்த ஞான்றும் வற்றுறா தனைய தீர்த்தம்
தழைதரு புனல தேனுந் தனையடைந் தவர்வெம் பாவப்

பழையபஞ் சசலத் திற்கோர் பருநெருப் பெனலா மென்ன
விழையினு மினிது நல்கு மேதினி வியப்ப மாதோ.

18. மன்னிய பெருமை சான்ற மருததீர்த் தத்தின் மாடே
கன்னிகை தீர்த்த மென்றொன் றுண்டது கலந்து தோய்வார்க்
குன்னிய வெண்ண மெல்லா முடனுடன் முடிப்ப தன்றிப்
பின்னிரு வினையும் போக்கிப் பேரின்ப வீடு நல்கும்.

19. அறைந்தகன் னிகைதீர்த் தத்தி னயலொரு கந்த தீர்த்தம்
நிறைந்துள வதன்பா லெய்தி நெறிவழா தினிது மூழ்கிக்
குறைந்தசெல் வரும்பொன் வாழ்விற் குபேரனைப் பழிப்பர்பாவ
மறைந்தல ரியைக்காண் டுற்ற வல்லிருண் மானு மாலோ.

20. வகுத்தமூ வகைத்தீர்த் தத்தின் வடபுறத் தனும தீர்த்த
மிகுத்ததா லதன்வி சேடம விரித்தெவர் விளம்ப வல்லார்
1
சகத்திரு டவிர்ந்தோர் போற்றுஞ் சரவணப் பொய்கையொன்
குகற்கிருப் பாமக் குன்றின் கொடுமுடி மிசைக்கு லாவும். [று

21. சண்முக னிருப்பின் மேல்பாற் சரவணப் பொய்கை யென்னு
முண்மைகொ டெய்வ தீர்த்த முவந்துபொன் னுலகு ளோரும்
வண்மணி யுரக ருந்தொன் மறைமுனி வரரும் யாரும்
திண்மையி னெய்தி யாடிச் சிந்தனை முடித்துச் செல்வார்.

வேறு.

22 மருவார் கடப்ப னமர்தருமம்
மருதா சலத்தின் வடபுறத்தே
யொருமால் வரையுண் டதன்பெருமை
யுணர்த்த வெளிதோ வுயர்ந்தநெடுந்
திருமா லனையாய்க் கடல்புடைசூழ்
திண்பார் முழுதுஞ் சிரத்தேந்து
மருமா மணிச்சுட் டுரகபதி
யானும் பகர்தற் கமையாதே.

---

1 சரவணப்பொய்கை = புற்றுக்கண்சுனை.

23. எழுத வரிய பழமறைக
ளெல்லாந் திரண்டோர் வடிவாய்
செழுமை யதுதீ வினையிருளைச்
சீப்ப துளத்தைத் திருத்துவது
தொழுது பணிவார்க் கானந்தச்
சுகந்தேக் குவது சுபமுளது
தழுவு முயர்வொப் பிலதுமுத்தி
தனிநல் குவதத் தனிச்சயிலம்.

24. சித்த ருரகர் தவமுனிவர்
தேவர் கருட காந்தருவர்
மூத்த ரியக்கர் கிம்புருடர்
முதிர்விஞ் சையர்கின் னரர்பிறருஞ்
சுத்த நறுமென் மலர்தூவித்
துதித்து வணங்கித் தொழுதுருகி
நித்த மினிது வலஞ்சூழ்ந்து
நிகழ்வ தனைய நெடுங்குவடு.

25. திருவார் கந்த தீர்த்தமகத்
தியதீர்த் தஞ்சந் திரநதியென்
றருள்கூர் மூன்றே யன்றியுமங்
கனந்த தீர்த்த மமைந்துளது
தருவா னவர்தம் முலகிழிந்து
சகங்கண் டேறச் சமைந்துநின்ற
மருடீ ரேணி போல்வயங்கி
வளர்ந்தோங் குவதம் மணிவிலங்கல்.

26. கடவுட் சுனைக ளிடைதழைத்த
கமல மருகிற் கட்செவிகால்
படர்பொற் கதிர்மா ணிக்கவொளி
பகலென் றிரவும் பரிந்தகலுந்

தொடர்கட் குமுத முற்பலமித்
2
தொடக்கத் தனமுந் தாளுயிர்ப்ப
வடர்கித் திலத்சோ தியைகிலவென்
றங்கெல்லினும் பூத்தணி செயுமால்.

27 சுணங்கு காய்ப்ப வெருமையெனத்
தொனிப்ப விருளைத் தொலைத்தொளிரவ்
விணங்கு பாலாற் கனியாலெண்
ணிகந்த வாயு ளினிதளிப்ப
வணங்கு தீரித் தொடக்கத்த
வான தருக்க ளனந்தமன்றி
யுணங்கு ருச்சஞ் சீவிகளு
முளவா லங்கங் குணர்வின்மிக்கீர்.
3
28 சருகு கனிகாய் தளிர் சகுனந்
தருக்கோ லெவைதற் சார்ந்திடினு
மருமை பெறவே யவைகளைக்கல்
லாக்கா ளிற்கு மரும்புனலும்
பருக முதிய நரைதிரைநோய்
பாறுங் கடவுட் பசும்பிசினு
முருவ மனேக மெடுத்திடநன்
குதவு மருந்து முளவாமால்.

29 இளமை முதிர முதிர்விளமை
யெய்தக் குறைந்த வவயவங்கள்
வளர வூமை செவிடினைய
மாற நெடுநாண் மலமுனைத்

2 முந்தூள் = மூங்கில்.
3 சகுனம் = கிழங்கு.

[4]
தளவ நகையார் புருடரிவர்
தம்மின் மயக்கத் தனங்காண
வளவில் வியப்பு விழைத்திடநன்
காகு மருந்தங் கனந்தமம்மா.

30 மனது கனிந்து வானவரும்
வடிநெட் டிலைவேல் வனசரருந்
தினமு முதிர்ந்த சுவையமுதுஞ்
செழுஞ்செந் தேனுங் கொணர்ந்து கொணர்ந்

[5]
தனக விசும்பி னிராசியுளோன்
றூய துலையிட் டவைநிறுத்துக்
கனக வணிகரெனத் தம்மின்
மாறி யுறவிற் கலப்பாரால்.

31 கடலுண் டெழுந்து புடைபெயருங்
கமஞ்சூற் கடவுட் கரும்புயலைப்
படர்குன் றினமும் மதநால்வாய்ப்
பனைக்கைச் சிறுகட் பருவேழந்
தொடரும் பிடியென் றடுத்தணைத்துத்
தோன்றும் புதிய தொனியுமன்றி
[6]
யடர்சஞ் சலையுங் கண்டுவெருண்
டகன்று தெளியா தையுறுமால்.

கலிவிருத்தம்.

32 வான ரங்கண்ம ழைகண்டு வாம்பொழில்
வான ரங்கண்ம கிழ்ந்தினி தாடுமால்
கான கந்தரு கற்குற மாதர்சொற்
கான கந்தரு வேதமுங் கற்பரால்.

---

4. தளவம் = முல்லை. 5. அனகம் = மாசில்லாத.
6. சஞ்சலை = மின்னல்.

33 மாத ருக்குவ யங்கிய பொன்னகர்
மாத ருக்கும கிழ்செயு மின்னிழற்
பாத வப்புடை பல்வள முந்திறம்
பாத வப்புடை யாறுகள் பாயுமால்.

34 சித்த ரன்பணி சிந்தைய ராகியர்ச்
சித்த ரன்டணி செய்துதி ருந்துவார்
முத்த ரும்புற மொய்ப்பர்க ழைக்குல
முத்த ரும்புற முந்திவி ளைந்துமே.

35 மாத வங்களை வல்லவர் மையலா
மாத வங்களை மாற்றிந டத்துவார்
பூத ரந்தரு விண்ணவர் போற்றுமப்
பூத ரந்தரு பொற்புவி யப்பதே.

36 வனத்தந் தாவள வாணர்க வண்கலால்
7
வனத்தந் தாவள மாபுனத் தோச்சுவார்
கனத்தின் பாரங்க வியச்சு மந்தெழுஉக்
கனத்தின் பாரங்க மழும்பல் காதமே.

37 அந்த ரத்தில லைந்துவ ருங்கதிர்ச்
செந்த னிப்பெருந் தேர்ப்பரி நீணடை
தந்த வெப்பந்த ணிந்தெய்ப்ப கன்றிடச்
சுந்த ரச்சுனைத் தோயமுண் டேகுமால்.

38 முதிர்ப ளிக்கறை முற்றுங்கொ டிச்சியர்
உதிர் புனத்தினை யும்பறன் கோடுகொண்
டெதிரி டித்தவி னெற்றுண்ட முதமம்
மதிபி லித்திட மாப்பிசைந் துண்பரே.

7. வனந்தந் தாவளம் = யானை.

39 குன்ற மேறுங்கு றவர்சி றாரினம்
வென்றி யானைவி றற்புலி யெண்கரி[8]
பன்றி யாதிப றம்பிடித் தோடியே
கன்றி டாதுக ளிப்பதங் கோர்புறம்

40 மாத வத்தும கத்துவ மாதிய
காதகத்தவர் கண்டணு காவகை
கோத றப்பொலி கோத்தும்பி யின்றிரண்
மீத டர்த்துவி லக்குவ தோர்புறம்.

41 மந்தி ரந்தெளி மாமுனி வோர்பல
தந்தி ரங்களை யெண்ணித்த னித்தனி
முந்தி யன்பின்மு டித்தம கத்துவ
வெந்தி ரங்களி லங்குவதோர்புறம்

42 திங்கள் வார்சடைத் தேவனைச் சித்தருந்
துங்க வானவ ருந்துற வோர்களும்
பொங்க வாழ்த்துபு பூசனை செய்தலிற்
சங்க வோதைத ழைப்பதங் கோர்புறம்.

43 சித்தி யத்தைநி னைந்துநி லைப்படு
பத்தி முற்றிப்ப யில்பெரி யோர்பலர்
புத்தி யற்புதம் பூத்திட வட்டமா
சித்தி பெற்றுத் திளைப்பதங் கோர்புறம்.

44 கொள்ளை யாவினங் கூட்டுண்டி சைத்திடக்
கள்ளை வீசுபைங் கற்பக நாடொரீஇக்
கிள்ளை பாய்புனங் கேழ்கொளத் தேனுவும்
வெள்ளை யானையு மேய்வதங் கோர்புறம்.

---

8. எண்கு = கரடி.

45 அரமடந்தைய ரம்மனை கந்துகம்
கரம லிந்தக ழங்குப யின்றுமேற்
பரவு பண்பல பாடியு மாடியும்
இரவு நண்பகல் ஏய்வதங் கோர்புறம்.

46 வாணி நான்முகன் மாநெடு மால்ச்சி
சேணில் வாழிந்தி ரன்பிறர் யாவரும்
பேணி நாளும்பெ ருஞ்சுனை தோய்ந்துதங்
காணி மேவுங்க வினதங் கோர்புறம்.

47 திவள்ப சுங்கதிர்த் திங்கட்கொ ழுந்தினைக்
கவள மென்றுக ரத்தினிற் பற்றிய
வுவகை யங்களி றேங்குவி சும்புறை
தவறில் சிங்கந்த னைக்கண்டொ துங்குமால்.

48 கான வாணர்க லந்தபு னந்தொறும்
வான யாறுவ ரன்முறை பாய்ச்சியங்
கேன லாதியி ரும்பயி ரோம்புபு
மோன ரோடுமு யங்குவர் முற்றுமே.

49 இதணு[9] றைந்தங்கி ளந்தினை காத்திடு
மதர்நெ டுங்கண்ம டந்தையர் புட்குலஞ்
சிதற வண்கவண் சேர்த்தெறி செம்மணி
கதழ்வு றும்பொழிற் காரிருள் சீக்குமே.

50 வேய்க ணைங்கும்வெ டித்தெழு நித்திலம்
பாய்க திர்க்குலி சாயுதன் பைந்தரு
வாய்க லந்தம துமென்ம லர்தொறும்
தோய்க வின்சிறைத் தும்பியி ரைக்குமே.

51 அருவி வீசிய[10] வாலிகள் கற்பகத்
தருவு லாவிளந் தையலர் நுண்ணிடை
மருவு மாடைந னைத்தலு மற்றவர்
உருவெ லாம்வெளி தோன்றநின் றொல்குவார்.

---

9 இதண் = பரண்   10 ஆலி = துளி.

52 கானு லாவுகி ராதர்க லாமதி
மானு மாதிரு வானவி ராசியின்
மீனு நீள்வலை வீசிக்க வர்ந்திடப்
பானு வார்வரைப் பாள்முயல் வார்களே.

53 காடு தோறுங்க ளிமயில் பூந்தருக்
கோடு தோறுங் குலாவு பசுங்கிளி
மேடு தோறும்வி ளைநவ மாமணி
மாடு தோறும்வ ளர்கன கங்களே.

54 சோலை யெங்குஞ்சு ரர்துற வோர்தவச்
சாலை யெங்கும் கங்கட டஞ்சுனை
மாலை யெங்கும ழைக்கண ரம்பையர்
மூலை யெங்குநன் மோனிக ளீட்டமே.

55 காடு மள்ளர்க னற்படுக் குந்தொறுஞ்
சாடு மொள்ளகிற் சந்தந றும்புகை
யூடு தாவலி னெங்கும ழைக்குல
நீடு தாரையும் வித்தம ணக்குமே.

56 பொற்ப திக்கட்பொ லிந்துவ ளங்கெழு
கற்ப கக்களி வண்டுக ளைத்துண
வெற்ப துச்சிவி ளைந்தவி ருலுடைந்
தற்பு தச்சுவை யார்மதுத் தூங்குமே.

57 கனலெ ழுங்கட்க ளிற்றின் குலத்தையும்
புனல ருந்திப்பு கும்புய லாமென
வனம டங்கலு மங்கல மஞ்ஞையி
னினந டங்களி யற்றிக்க ளிக்குமே.

58 சுழல்வி ரிந்திட நீள்சுரர் தாருவிற்
சுழல்ப சும்பொற்சு ரும்பரின் பாணிகேட்
டழல கன்றங்க மர்ந்தகி ராதர்தம்
மழலை யஞ்சொன்ம கார்துயில் வார்களே.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

59 மருளறு கிரேதா யுகத்தினிற் செல்வ மலிசதுர்ப்
புயாசல மென்னு
மருள்கெழு திரேதா யுகத்தின்மெய்ஞ் ஞான
வகத்திய பூதர மென்றுந்
தருமொரு மூன்றா முகத்தினிற் கந்த
சைலமென் றுங்கடை யுகத்திற்
பெருமைகொள் குருவ விருடிவெற் பென்றும்
பெயர்படைத் தோங்குமப் பிறங்கல்.

60 அந்தமால் வரையைச் சிந்தைசெய் திடினு
மன்புறக் காணினு மடுத்துக்
கந்தமா மலர்தூய் வணங்கினும் வாயாற்
கழறினு மிருளெனக் கன்ற
பந்தபா சங்க ளனைத்தையு மாங்கே
பரிதிமுன் பனியெனும் படிதீர்த்
தெந்தநாள் முடிவு மெடுத்துணர்த் தியபே
ரின்பவீ டளிக்குமா லெவர்க்கும்.

61 மந்தரங் கந்த மாதன னீடு
மால்வரை யிமையமே நிடதம்
விந்தமொண் கயிலை யேமகூ டம்பொன்
மேருவி னம்பல வெற்பும்
பிந்தநன் கனைத்தும் பெற்றுமேன் மைய்தாய்ப்
பெரியமா தவர்க்கிருப் பிடமாய்க்
கந்தரஞ் சுமந்து ககனமேற் படுமக்
கல்லகப் பொலிவெவர் கணிப்பார்.

கிரிச் சருக்கம்
முற்றும்.

ஆக மொத்தம் பாக்கள் 128.

நகரச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1 பருவ முழுது மயராமற் பழுதின் முனிவோர் பலர்தவஞ் செய்
குருவ விருடி கிரியெனுமக் குன்றி னொருபால் குணதிசையிற்
பொருவின் மதுர நதிக்கரையின் புறத்தோர் தலமற்புதமுளதாய்
கருது பரம ரகசியமாய்க் காட்சித் தாகிக் கவினுமன்றே.

கலி விருத்தம்.

2 வெற்பற விடித்து மிக வெய்யமுகில் பெய்யுங்
கற்பமள வற்றனக ழித்ததுசெ ழித்துப்
பொற்பளவு கற்பகபு ரத்தையும டக்கித்
தற்பமின்ம னத்தவர்த மைக்கொடுள தவ்வூர்.

3 வேதவடி வாகியவி யப்பதுபு ராணத்
தோதரிய மேன்மையினு யர்ந்தபெரி யோர்தம்
போதமதி னீடுபுகழுண்பதுபு விக்கோ
ராதரவ தாகியுள தன்னகர மன்றே.

4 வானவரு மானிடரு மாதவமு யர்ந்தோ
ரானவரு ஞானிகளு மன்பின்மிகு வோருந்
தானவரு மீரெழுத லந்தொறுநி றைந்தோ
ரேனவரு நாடியினி தேத்துவது மன்றே.

கலி நிலைத்துறை.

5 சூரரு நாகருந் தன் முனி வருமனந் துணிந்து
மரவு மாவுநீர் வாழ்வவு மூர்வவு மற்று
மரவ மேபுரி புள்ளுமா யமரராங் காகிற்
பரமன் மேவுமத் திருநகர்ப் பெருமையார் பகர்வார்.

6 மூவி ரண்டுவே தாங்கமும் புராணமு முதுசீர்
மேவி நின்றவா கமமுதற் பலகலை விதமும்
வாவி தண்டலை மற்றைய பிறவுமாய் வருமேற்
பூவி றைஞ்சுமப் பொன்னகர் வளம்புக லுவதோ.

7 பொருள்வி லைத்தடம் பூண்முலைப் புரிகுழன் மகளி
ரிருளு ளத்தையு மிகழ்ந்துகீ ழாழ்ந்தெதி ரின்றிச்
சுருதி முற்படு கலையொருங் குணர்சிவ தொண்ட
ரருளெ னப்பொலி புனலதன னகரிசூ ழகழி

8 நகர் மடந்தைய ரவயவங் கட்கொரு நாளு
ங்கர டைந்தில மிறக்குது நாமென நினையாப்
புகல ரும்புன லவிழ்ந்தபொற் குவளைபூங் குமுதம்
திகழு மம்புய முதற்செழு மலரகழ் செறியும்.

9 அன்ன லார்புற வடிகணைக் கால்விர லணிநேர்க்
கின்ன வாமுறுப் பினுக்குடைந் தொளிப்பன வென்ன
வன்ன வாமைசூன் முதிர்வரால் களிறுசேன் மற்றுஞ்
சொன்ன பேரக ழிடந்தலை நீட்டியுட் சுருக்கும்.

10 சங்க ரன்றனை வணங்கறி யார்நிலை தவறி
யிங்க ரும்பவ நெடுங்கட லழுந்துவ தென்னப்
பங்க யஞ்செறி திரைப்பெரும் புனலகழ் படிந்து
செங்கண் வெங்கராஞ் சிறையினை ருமலுட் டிரியும்.

11 பவள வாய்ப்பசுஞ் சூட்டெகி னஞ்சிரல் பகண்டை
தவறில் சாரசஞ் சிகரிபோ தாப்பகந் தாரா
வுவண நேமிகா ரண்டமுள் ளாறெடு கலிங்க
மவனெ லாநிறைந் தார்த்தபே ரொலிகட லடக்கும்

12 மீன்ற லைத்தொகை யிடங்கர்சூ லிப்பிவெண் சங்கம்
கான்ற தேநளி னக்குரண் டம்பிற களவுற்
நீன்ற நித்தில மாமணி துறைதொறு மிலங்க
வான்மெற ழிந்ததா ரகையிழிந் திருந்தன மானும்.

13 மடக்கு வெண்டிரை யோதையு மணிவளை யொலியுங்
கடங்க விழ்ந்தவெங் கவட்களிற் றினமடி களனு
மிடங்கர் செங்கயல் வாளைபா யமலையு மிசைக்
தொடங்கு வண்டினத் தொனியுமோ ங்குவதுறை தோறும்.

14 தாழ்ந்து கீழெழு தலங்களு மிடைப்படத் தரையி
னாழ்ந்து நீண்டகன் றலையெறி தருபுன லகழி
வாழ்ந்த மாநகர் வளைந்துசக் கரகிரி மருங்கிற்
சூழ்ந்த தாயவப் பெரும்புறக் கடலெனத் தோன்றும்.

15 எடுத்து ரைத்தவப் பாம்புரி மருங்குசூழ்ந் திலங்க
நடுத்த லைப்பொலி புரிசைகன் னளிர்கட லாடை
யுடுத்த விப்புவி யுள்ளடை தரவளைந் தோங்கி
யடுத்த சக்கர வெற்பையே நிகர்த்துள தன்றே.

16 கரிய வாரிதி முகட்டெழுந் திருட்பகை கடுக்கும்
பரிதி வானவன் பசும்கதிர்த் தேர்புடை படர
வரிய தாயமு தண்டமுங் கீழ்ப்பட வடக்கி
வரிசை யாலுயர்ந் தோங்குவ தன்னகர் மதிலே.

17 நாளெ லாஞ்சுழன் றந்தர நெடுவழி கடந்து
தாளெ லாஞ்சலித் துளவயர் வகன்றிடச் சற்றே
கோளெ லாந்தலைத் தங்கிமேற் றந்தொழில் கொள்ள
வாளெ லாம்படைத் தோங்குவ தன்னகர் மதிலே.

18 குடவ ளைக்குலங் கருவுளைந் தினமணி கொழிக்குங்
கடல்கு டித்தெழு காரிடி மழைமுகிற் கணங்கள்
புடவி மெச்சுமப் பொன்னெடும் புரிசையைப் பொலிவிண்
டடவு வெற்பெனச் சார்ந்துநா டொறும்பொழி தருமால்.

19 தந்தி யாளிகண் டரவங் குடாவடி தரக்கு
மந்தி வானர மான்மரை சூகர மகிட
பந்திசாதக மலகையின் னனபொறி பலவு
முந்தி மாமதின் மொய்த்துலாய்ப் பகையற முருக்கும்.

20 சூல நேமியங் குசங்கதை சுரிகைவாள் பிண்டி
பால நீடிலை வேல்வளை தடிமுதற் படைகள்
ஆல மீயமண் ணனலிரும் புருக்கிவை யாதி
கால னாருமுட் குறமுகந் தெறியுமக் கருவி.

21 மாற்று யர்ந்தபைம் பொன்னினான் மணிகளான் மலிந்து
தோற்று பண்பது சுரர்கடம் பதிக்குமோர் துணையாய்க்
கூற்று மஞ்சுற நிற்பது குவலய முழுதும்
போற்று கின்றதப் புண்ணிய நகர்ப்பெரும் புரிசை.

22 நவம ணிக்கொடி யாடைபற் பலமிசை நாளுந்
துவள நிற்பது சூழ்பெரு நீரது சோலை
நிவர் பொருப்பது நேரல ருயிரினை நேடிக்
கவர் திறத்தது காவலான் மிகுத்ததக் கடகம்.

கலி விருத்தம்.

23 ஆயிரங் கரங்கள் கொண் டவனி மீதினிற்
பாயிருள் சீத்துலாம் பரிதி தேரொடுஞ்
சேயிரு நிலைவழிச் செல்ல விண்ணளாய்
மேயின நவமணி மிளிர்பொற் கோபுரம்.

24 புடமமைத் தெடுத்தபைம் பொன்னிற் பன்மணி
சுடர்விடக் குயிற்றிய தூய பூரண
குடமுடித் தலத்தினிற் கொண்ட கோபுரத்
தடர் துகிற் கொடிகள்விண் ணுறை லைக்குமே.

25 கடனிலை யறியினுங் சகனத் துச்சியி
னிடமளா விடினு நுண் ணிடைம டந்தையர்
மடமன மதிக்கினும் வயங்கு மன்னக
ரடர்சிக ரிக்குயர் வளக்கொ ணாதவே.

26 ஆதியி னிறையுல கனைத்துமுய் பொருட்
டோதிய மறைமுடி பொருங்கு தேறினுஞ்

சோதிகொள் கோபுரத் தொகுதி யுன்னத
மேதினி காணுறு மேன்மைத் தென்பவே.

27 விசும்புறை விபுதரும் வியந்து கண்டுகள்
ளசும்புறு தருகிழ லகன்று லாவிடத்
தசும்புயர் முடிமிசை தரித்துச் சித்திரப்
பசும் பொனின் மண்டபம் பலவ யங்குமே.

28 நறுமலர் புரிகுழ னங்கை மார்களின்
சிறுநுதற் கவின்பெறத் திரியு மாறு போன்
மறுமதிப் பிறைதவழ் வளத்த வல்லிரு
ளறுமணிக் குலத்தின வனந்த மேடையே.

29 களதபு தத்திறற் கண்வ ழுக்குறத்
தளமுயர் வித்துவெண் டரளப் பித்திகை
யிளகொளி விரிப்பநன் கேற்றி மீதுபொன்
வளமைசெய் தனசில வரிசை மாடமே.

30 இந்திர நீலவே திகையி சைந்து மேற்
சந்திர காந்தவெண் டகட்டு வேலைகண்
மந்திர வேதனு மயங்கு றத்தழீ இச்
செந்திரு வேந்துவ சிலபொன் மாடமே.

31 வழுத்துபு பளிங்குமா மணிய ரிந்தன
முழுத்தகட் டுக்குரு முடித்த பித்திகை
யொழுக்கின மரகத வுத்தி ரத்தன
விழுத்தகு வனசில விபவ மாடமே.

32 துகிர்நெடு மதலைக டுறுமிச் சூழ்தரப்
பகிர்வயி டூரியப் பசும்பொற் போதிகை
முகிளிலை கடந்திட முறையி னிற்பன
வகில்கமழ் வனசில வணிகொள் மாடமே.

33 ஒழுகுகோ மேதக வுத்தி ரத்தன
வழுவின்மா ணிக்கமா மதலை சூழ்வன

முழுதுமே பசும்பொனுன் முடிந்து யர்ந்தன
தழுவுவா னினசில தரள மாடமே.

34 நீலவொண் சுவரிள விலாமுற் றத்தின
கோலவொண் பதுமரா கக்கொ டுங்கைய
ஞாலமுங் ககனமு நயப்ப நன்மையுஞ்
சீலமும் பொலிவன சிலபொன் மாடமே.

35 வச்சிர மணியினுல் வகுத்து வாய்தொறு
மெச்சிய மகரதோ ரணங்கள் வேய்ந்துமீ
துச்சியின் மிளிர்குட முறைவித் தும்பருக்
கச்செனு வியற்றிய வனந்த மாடமே.

36 உடுக்களி னேவிய மொப்பத் தோன்றுவ
கடுக்கனி தான்றியங் கனிநெல் லிக்கனி
மடுத்துள புனலின வான்மு கட்டின்மே
லடுத்தன கதிர்திக ழனந்த மாடமே.

37 தவளவில் லுமிழ் செழுந் தரளக் கோவைய
துவடர மிசைப்புனை றுகிற்ப தாகைய
குலவுறு பன்மணிக் கும்பந் தாங்குவ
வவனியி லிணையிலா தனந்த மாடமே.

38 முகிலினைக் குழலென முடிக்குந் தன்மைய
மகிழ்கலை மதிதனை வதன மாக்குவ
பகர்பல வுடுக்களைப் பணியி னேந்துவ
வகனில மதிப்பமற் றனந்த மாடமே.

39 சந்தன நறும்புகை தவழ்த லத்தின
மந்தர மனையன வடவெற் பொப்பனக்
சுந்தர மிடைக்கருங் கச்சிற் காண்பன
வந்தர மளப்பன வனந்த மாடமே.

40 முரசொலி கறங்குவ முனிவர் வாழ்த்துவ
பிரசமென் மலரிளம் பெண்க ளாடுவ

விரசுறு தானைய விருது நீடிய
வரசர்க ளுறைகுவ வனந்த மாடமே.

41 சந்தத மகப்புகை தவழ்வ வெங்கணு
மந்திர மாக்கதை மணப்ப வேதமு
முந்துபல் கலைகளு முழங்கு மாட்சிமை
யந்தணர் நிறைந்துள வனந்த மாடமே.

42 கணிபல மணியின கனகக் குப்பைய
திணிதரு கிரணஙித் திலத்தின் கோவை சே
ரணிசெறி காட்சிய வனைத்து நல்குவ
வணிகர்கண் மாதரு மாடங் கோடியே.

43 வருவிருந் தோம்புவ வாணர் வாழ்த்துவ
விருநிதி தானிய மெங்கு மோங்குவ
வருள்பெறு முதன்மைவே ளாள ரண்ணிய
திருவளர் மாளிகைத் திரள னந்தமே.

44 கஞ்சன முழவியாழ் கறங்கக் காற்சதி
செஞ்சிலம் பொலியிசை திருந்து றத்தமீ இக்
கொஞ்சுமென் மொழியினர் கொங்கைக் காங்கிடை
யஞ்சுற நடனவி லரங்க னந்தமே.

45 வெண்பிறை நுதற்கரு விழிச்செவ் வாயினர்
தண்பசுங் கடலமு தங்கைப் பாமென
வண்பெரு முனிவரு மயங்கி மால்கொளப்
பண்பயில் மாளிகைப் பந்தி கோடியே.

46 உருவொருங் கழிந்தவே ளுரக வேந்திவர்
வெருவுறு மிளையவர் வேண வாமிசப்
பருகமு தெனும்படி படர்ந்த பல்கலை
கருதுபு தெரிதரு கழகங் கோடியே.

47 தீயுமிழ் தருபெருஞ் சினத்தர் திண்ணியர்
வாயுறை யமுதுறழ் வளத்தர் மாண்பின

ராயுநன் னெறியினை ராண்மை மிக்குளா
ராயுத நடைபயி லரங்கக் கோடியே.

48 படைதருங் கனலொளி பயிலு மைந்தர் பூந்
தொடைதொறுஞ் சுரும்பினஞ் சூழ்ந்து மின்னனா
ரிடைதொறு மேகலை யிசைகொண் மாளிகைக்
கடைதொறு வித்திலக் காவ ணங்களே.

வேறு.

49 வடமிடு புளகித வனமுலை மடவார்
நடமனு தினநவி னவமணி நிறைசூழ்
தடமனை தொறுமறி தவழ்மலை யனிலந்
தொடர்பரி மளமொடு சுழல்வுறு மொருசார்.

50 வரிமதர் விழியர மகளிரு மறுகப்
புரிகுழல் வனிதையர் புரிநட மதனுல்
விரிகதிர் முகமலி வெயர்வது தணியத்
திரிமழை முகில்புடை சிறுதுளி சிதறும்.

51 மாவண முதிர்பரி மளநற வுமிழும்
பூவண வணிபல புடைதொறு மலிபைங்
காவண நிரை நிரை கவினுற வளர்நீ
டாவண வர்வயி னழகுறப் பொருந்தும்.

52 பைவரு பணியணி பரமன திருதாள்
கைவண மலர்கொடு கனிவொடு பரவா
வைவகை யிருளற வமைதியின் மிகவாழ்
சைவர்க டிரள்செறி தருமனை பலவே.

53 கோபமு மதுவிகர் குணவகை பலவுஞ்
சோபமு மறவுயர் துறவணி புனையாத்
தீபம தெனமதி தெளிவுறு தமிழத்
தாபதர் நிரைநிரை தரைதொழ மலியும்.

54 இந்திரன் முதலுள விமையவ ரெவருஞ்
சிந்திட விரைவொடு திசைதிசை முடுகித்
தந்திர மருவலர் தமையடு குதிரைப்
பந்திக ளிடையிடை பலசெறி தருமே.

55 வேலையி னறல்கவர் வியன்முகி லெனவேக்
காலையு மதிர்வன களியன மலையின்
மாலையு மிழிவன மழகளி றுகள்சூழ்
சாலைகள் பலசெறி தருநிரை நிரையே.

56 கற்பவை யெனவுள கலைமுழு வதுமோர்
சிற்பரின் முடிவுறு செழுமணி யிரதம்
பற்பல முகின்மிசை படிவன வரைபோ
னிற்பன வவைகளி னிலையள விலவே.

57 தருமனு முதுகிடு தகையன பணியா
மருவலர் உயிர்கவர் வலியன கடல்போல்
விருதுகள் பலவுடன் மிடைவன சுடர்வேல்
நிருபர்கள் கனதளம் நிறைநிறை நிமிரும்.

58 கடல்படி முகில்பொரு கடதிட களிறுந்
தடவரை களினுயர் தமனிய ரதமும்
தொடர்பல கதிபெறு துரகத வினமும்
படரொலி மறுகிடை பகலிர வகலா.

59 கடிமண வினைபுரி கனமணி முரசும்
படிபுகழ் விழவணி பயில்பல வியமும்
கொடிசெறி மறுகிடை குலவுவி னுலகும்
வெடிபட வதிர்வன விதிகளின் முறையே.

வேறு.

60 கற்பு மேன்மையுங் கல்வி யொழுக்கமும்
பொற்பு நீடுபு கழும்பொ றுமையும்

அற்பு நீதியு மன்னகர் வாழ்முலை
வெற்பு மாதனை விட்டக லாதவே.

61 பொறையு நீதியும் போதமுஞ் சீலமும்
நிறையு மானமு நீள்பல கல்வியின்
முறையு மூக்கமு யற்சியி னல்லறத்
துறையு மாடவர் தோழமைப் பாலதே.

62 செழித்த மைந்தருஞ் சிற்றிடை மாதரும்
வழித்தெ றிந்தம ணக்கள பங்களாற்
கொழித்த சோதிக்கு லமறு கோங்கலைப்
பழித்த யானைப்ப தங்கள் வழுக்குமே.

63 பாடு வாரும்ப ணைமுழ வார்க்கநின்
றூடு வாரும லர்க்கள பம்பணி
நாடு வாருந யந்துயி ரொன்றெனக்
கூடு வாருமக் கோநக ரெங்குமே.

64 பாட கப்பொற்ப ரிபுர மார்த்திடச்
சூட கங்கடு லங்கம டந்தையர்
நீட கங்கொணி லந்தொறு நின்றுலா
ஆட கஞ்செய்பந் தம்மனை யாடுவார்.

65 பொன்ம டந்தையும் பூவல கேத்துசெஞ்
சொன்ம டந்தையுந் துங்கமி குஞ்செய
நன்ம டந்தையு ஞானம டந்தையா
மென்ம டந்தையு மேவுவ தன்னகர்.

66 குருவ மாமுனி குன்றமொப் பாகவத்
திருவு லாவிய தெய்வந கரமு
மருவு காரணை மாண்பினு கந்தொறும்
பொருவில் பேர்கள்வெவ் வேறுபொ ருந்துமே.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

67 எடுத்தகிரே தாயுகத்தி லினியகணே
சுரபுரமா யெழில்பெற் றோங்கு
மடுத்ததிரே தாயுகத்தி லகத்தியநல்
லூராகு மப்பா லின்பங்
கொடுத்ததுவா பரயுகத்திற் கூறுகந்த
புரியெனப்பேர் கொள்ளா நிற்குந்
தொடுத்தகலி யுகத்தகிலந் தொழுந்துடிசை
வளம்பதியாய்த் துலங்கு மவ்வூர்.

நகரச்சருக்கம் முற்றும்.

ஆகப் பாக்கள் - 195.

மூர்த்தி தெரிசனைச்சருக்கம்.

அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

1 அற்புதமா மந்நகரு ளாதிநடு
வந்தமின்றி யகண்டா காரத்
தற்பரமா யுயிர்க்குயிராய்ச் சமரசமாய்
நிருமலமாய்ச் சகச வீடாய்க்
கற்பனைதீர் மனோதீதக் காட்சியாய்
நின்ற முக்கட் கருணைமூர்த்தி
யுற்பனவே தமுந்தொழவெவ் வுலகமு முய்ந்
திடவிலிங்க வுருக்கொண் டுற்றார்.

2 அலகில்பல வேதமுந்தொல் லாகமமும்
புராணமுமா றங்க நூலுங்
குலவுபிற கலைத்தொகையுங் குணிக்கவொண்ணாத்
தனிப்பொருளாய்க் குளிர்மென் கஞ்ச

மலரயனு நெடுமாலும் வருந்தியினந்
தேடியெய்ப்ப வளர்ந்த சோதி
யுலகுயிருய்ந் திடவிலிங்க வுருக்கொளினங்
கவனருள்யா முரைக்கற் பாற்றோ.

3 அடியினெழு தலங்கடந்த வப்புறமே
பொற்பதமா யகன் மூதண்ட
முடிவுநதி தவழுமணி முடியாயெண்
டிசையுமெட்டு முரண்கூர் தோளாய்ப்
படிபுகழ முச்சுடரும் பார்வையாய்
எங்குநிறை பரம மூர்த்தி
யொடிவிலரு ளாலிலிங்க வுருக்கொடுதோன்
றியகருத்தா ருரைக்க வல்லார்.

4 மறைமுடிவாய்ப் பிரணவசின் மயவொளியாய்
மணிலிங்க வடிவாய் நின்ற
விறைவனது பெருமைதனை யெவர்தொகையிட்
டுரைப்பரெனி லெம்மா லாமோ
தறையினட ரிருடொளிக்குந் தபனனெனப்
பவவினைக டவிரச் சிறிக்
குறைவிரவ வாழ்வுபெறு குணத்தீரெம்
மறிவளவிற் கூறக் கேண்மின்.

கலி விருத்தம்.

5 தேனலர் கஞ்சச் செல்வனு நேமித் திருமாலுந்
தானக போலக் குஞ்சர வேந்துந் தருநீழல்
வானவ ருந்தொன் மாதவர் யாரும் வழிபட்டக்
கோனரு ளென்றும் பெற்றும னத்தின் குறைதீர்வார்.

6 தாளம தங்கஞ் சல்லரி பேரி தவில்சின்னங்
காளமி டங்கர்த் துந்துபி சங்கங் கடல்போலு
மேள மனந்தஞ் சூழ்ந்துதழங்க மிடைவிண்ணோ
ராள வரும்பெம் மானடிபூசித் தருள்கொள்வார்

7 காவிரி கங்கை சந்திர பாகை கவினோர்கோ
தாவிரி துங்க பத்திரி மற்றுந் தருதீர்த்தம்
வீவிரி ஞானச் செல்வர் கொணர்ந்தே விமலேசன்
பூவிரி கொன்றைச் சென்னியி னாட்டிப் பொலிவாரால்.

8 பானல்ச ரோசம் பைங்குமு தம்பொற் பலபூவார்
மானத வாவித் தீர்த்தம னத்தின் மகிழ் தூங்க
மேனகர் மன்னுந் தேவர்கொணர்ந்தே விடைவல்லோன்
தூநதி வேணிச் சென்னியி னாட்டித் துயர்தீர்வார்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

9 காசிப னங்கி ராதன் கௌதமன் மார்க்கண் டேயன்
கோசிகன் பரத்து வாசன் குருமுனி வாம தேவன்
மாசறு புலத்தி யன்சீர் வசிட்டனா ரதன்வி யாதன்
பேசிவர் முதன் மற்றுள்ள பெரியமெய்த் தவத்தோர் யாரும்.

10 பலனுயர் கடவுட் டீர்த்தம் படிந்தெழுந் திடங்க டோறு
மலர்கதி ருருத்தி ராக்க மாலிகை மலியத் தாங்கி
நிலவுமிழ் பூதி மேனி நிறைத்தெழுத் தைந்து முன்னிப்
புலன்முழு தகத்த டக்கிப் பொங்குபே ரன்பு தோன்ற.

11 அல்லிசெங் கழுநீர் கஞ்ச மலரிபுன் னாகங் கொன்றை
மெல்லிய வில்வந் தும்பை வெட்சிபூங் கரந்தை வன்னி
மல்லிகை முல்லை சாதி மயிலைசெவ் வந்தி யாத்தி
சொல்லிய விவைபோன் றுள்ள தூய்மலர் பலவுங் கொய்து.

12 பொற்புறு கடவுட் காய பூசனைத் திரவி யங்கள்
பற்பல வகையு மீட்டிப் படிவிசும் பிறைஞ்சா நிற்பச்
சொற்புகழ் படைத்த தெய்வத் துடிசையம் பதிபுக் காங்கே
வெற்புறழ் சிகரச் செம்பொன் விமானமந் திரத்துண் மேவி.

13 குணதிசை நோக்கிச் செம்பொற் கோபுரச் சிகரத்துட்
டுணர் மலரயன் மாலேத்தச் சுயம்புவாய்த் தோன்றி நின்ற
பணவர வணியினானைப் பன்மு றைவலஞ்சூழ்ந் தாற்று
மணமலி யருணபாதம் வரன்முறை தாழ்ந்தி றைஞ்சி.

14 ஆகம நெறிவழாம லருச்சனை புரிந்து போற்றி
மாகமு நெடிய பாரும் மதித்திடும்படி யட்டாங்க
யோகமு மனேக சித்து முறுதிமெய்ஞ்ஞான வாழ்வு
மேகநன் மனமும் பெற்றா ரெண்ணிலந்நகர்க் கீடுண்டோ.

15 கடவுளர் பரவு மந்தக் கண்ணுத லால யத்தின்
வடபுற மதினோர் பைம்பொன் மணிநெடு மந்தி ரத்துட்
டடமலி புவன மூன்றுந் தருபரா சத்தி ஞானச்
சுடர்விரி வடிவா யெங்குந் தொழுதிடத் தோன்றி னின்றாள்.

16 முழுமதி முகமு முல்லை மூரலும் பவள வாயுங்
கொழுமலர் கமழு நீலக் குழலுந்தன் கருணை நோக்குந்
தழுவுபல் லுயிர்க ளீன்றுந் தளர்வுறாத் தனமுந் தேவ
ரொழுகொளி மகுடபந்தி யுரிஞ்சுகிண் கிணிப் பொற்றாளும்.

17 ஆதிநாள் வழுவா தெண்ணான் கறம்வளர்த்திய செங் கையுஞ்
சோதிமே னியுமி லங்கத் தூயபன் மணியா ரங்கள்
மீதுநீ டழகு காட்ட மென்சிறு சிலம்பு தண்டை
யோதிடா வணிக ளின்ன வுருத்தொறும் பொலிவுற் றோங்க.

18 கட்புலத் துலக னைத்துங் கண்டுளா முருகி யேத்தி
தட்புது மலர்க டூவித் தாழ்ந்தரு ளெய்தி வாழ
விட்புய லுருவி நீண்டு விளங்குமவ் விமானத் தூடு
பெட்புற நின்ற வன்னை பெருமையார் பேசற் பாலார்.

19 அடுபுலி யுரித ரித்த வரனுமை யிருவ ருக்கு
நடுவழ கொளிப ரப்பு நவமணிச் சினக ரத்துட்
டொடுகதை கரம்பெற் றோங்கச் சு ர்முடி சென்னி மின்ன
நெடுவடி வேலோன் தெய்வ நீலமா மயின்மீ துற்றான்.

20 அத்தியை யுரித்துப் போர்த்த வமலனை யகண்ட ஞான
சத்தியை நடுவட் டோன்றுந் தனிக்கதைக் குமர வேளைப்
பத்தியி னினைத்தோர் கண்டோர் பாடுநர் பணிவோர் யாரு
நித்திய சுகம்பெற் றென்று நீணிலந் துதிக்க வாழ்வார்.

21 குருவமா முனிவன் வெற்புங் கூறுதொன் னகரும் வெவ்வே
றருமைநா மங்கள் வாய்ந்த வமைதியே போல வங்கட்
பொருவிலா துறைந்த முக்கட் புனிதனு மிமைய மாது
மருவுபே ருகங்க டோறும் வகைவகை வழங்க நிற்பார்.

22 கடவுடான் முதல்யு கத்திற் கணேச்சுர நாத னப்பாற்
றொடர்திரே தாயு கத்திற் றொழுமகத் தீசனன் பிற்
படர்துவா பரயு கத்திற் பகர்நணு வுடைய மூர்த்தி
மிடல்கெழு கடையு கத்தில் விருந்திச னெனப்பேர் பேவும்.

23 குணவுமை தலையு கத்திற் கோமள வல்லி பின்ன
ரணவிரண் டாமு கத்தி லருந்தவச் செல்வி யன்பு
நணுகுமூன் றாமுக த்தில் நாயகச் செல்வி யன்றி
யுணர்வரு கடையு கத்தில் உருப்பெருவழகியாமே.

24 வரைக்குமர் நகர்க்கு மாதி வரதர்க்கு முமைக்கு மிந்தத்
தரைக்குளின் னிமித்த நாமஞ் சார்ந்தன வாக வேத
முரைக்குமென் றருளாற் சூத னுணர்த்தலு முளம்பூ ரித்துத்
திரைக்கட லமிழ்திற் காது தேக்கிய முனிவர் சொல்வார்.

25. அறிவினி லுயர்ந்தோய் நின்பே ரருளினா லடியே மெல்லாஞ்
செறியிரு டவிரப் பெற்றேந் தேற்றியக் கிரிக்கு மூர்க்கு
மறிபுனை கரத்தி னார்க்கும் வரிவிழி யுமைக்கு மப்பேர்
குறியுகந் தோறும் வெவ்வே றற்றது கூறல் வேண்டும்.

26 என்றுரை மிசவ னைத்து ளிருந்தவ மியற்றி யைந்தும்
வென்றுறை முனிவர் யாரும் வேண்டலு மிசைந்து வாழ்த்தி
தன்றனை விழியா லந்தத் தண்புனல் பொழிய வன்பிற்
றுன்றுடல் பொடிப்ப வீசற் றொழுதிவை சூதன் சொல்வான்.

மூர்த்திதெரிசனைச் சருக்கம் முற்றும்.

ஆகப்பாக்கள் - 221.

கணபதி பூசைச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1 தனைவழுத் தினர்க்குத் துன்பந் தவிர்க்கவும் வழுத்தா தார்க்கு
வினைவிளைத் திடவும் வல்ல விநாயக மூர்த்தி கொண்ட
நினைவெவர்க் கறியலாகும் நிகழ் கிரேதா யுகத்திற்
புனைபொழிற் றுடிசை மூதூர் புக்கிவை புரிவ தானான்.

2 எழுபெருங் கடலுமாந்தி யெழுந்த நீர்த்தாகந் தீர
முழுதுலக யின்று சற்றே முதிர்பசி தணிய வெண்ணில்
விழுமிய வரைகள் கொண்டு விரைந்து பந்தாட வல்லார்
குழுமிய வுடுக்கள் தம்மைக் கோத்தணி குணத்தின் மேலோர்

3 வடவையை யவித்து முன்போல் வளர்க்கவும் வலியர் வானிற்
கடலெழு முகிலை நீலக் கச்சென மருங்கிற் சூழ்வோர்
சுடர் மதிக் கதிர்கள் பற்றிச சுழற்றிவிட்டாடுந் தொல்லோர்
படர்பல வண்டமும் பொற் பணிகளிற் பரிக்கு நீரார்.

4 பொறிவழி மனத்தை யென்றும் போக்குறார் புனிதர் சைவ
நெறிநெடும் பயிர் தழைக்கு நிலப்பெரு வேலி யன்னோர்
நறியசெஞ் சிகையர் கூற்று நடுங்கவிண் ணேறு முட்கச்
செறிபுவ னமுங்கம் பிக்கச் சிறிதுவாய் திறக்குஞ் சொல்லார்.

5 அறைகழ லிடுபொற் றாளர் ஆனை யைங்கர முளானை
மறைபுகழ் குகனை யன்றி மற்றெவர் தமையுஞ் சற்று
மிறைவர்க ளெனக் கனவி னிடத்தினும் மதித்திடா தோ
ருறைகண வீரரன்பி னொடுதொழு துவந்து சூழ

6 தோன்றிய முக்கட்செல்வத் தும்பிமா முக வேரம்பன்
வான்றிகழ் மாடகூட வளமலி துடிசை மூதூர்
ஏன்றிடு சினகரத்து டிருந்த தந்தையைத் தன்றாயை
யான்ற தோரன்பி னாலங் கருச்சனை புரிதலுற்றான்

7 உதித்தவச் சினகரத்தினுத்தர ஞாங்கரெய்திக்
கதித்த பேருவகை யான்முற் கயமுகத் தெந்தைதோய
நதிப்புனல் கருத லோடு நளிர்வரை தோன்றிச் செம்பொன்
னதிர்த்தெழு திரையின் வீசி யருவி யொன் றெழுகிற்றம்மா.

8 குருவமா முனிதவஞ்செய் குன்றிடைப் பிறந்து பொங்கித்
திருவுலா மணியும் பொன்னுந் திரைக்கையாற் றிசைக்கணுந்திப்
பெருகுகா விரிதண் கங்கை பிறவுள தீர்த்தம் யாவு
மருகவா னவனி யேத்த வன்னதி பரந்த தன்றே.

9 தண்டடந் துறைக டோறுஞ் சங்கின மலறி யீன்ற
வெண்டர ளங்கள் பொங்க விளைபசும் பொன்னு மின்ன
முண்டகங் குவளை யாம்பன் முதற்பல மலரு மொய்ப்ப
வண்டரின் னிசைமி ழற்ற வந்ததக் கடவுள் யாறு.

10 மலையிழி யோதை வாளை வரால்கய லுகழுஞ் சும்மை
யலையெழு தழனி சூற்சங் கலறிய வாரவாரந்
தலைநிமிர் தருக்கள் சாயத் தள்ளுபே ரரவ மின்ன
நிலைதெரியரியவாக நிகழ்ந்ததத் தெய்வநீத்தம்.

11 அலைதரு மமுதுந் தேவர்க் கரும்பசி தணித் ததிந்த
மலைதரு மமுதம் யார்க்கும் வன்பவ விருளை மாற்றி
யுலைதரு பிறப்பி றப்பு மொழித்துவீ டளிக்கு மென்னக்
கலைதரு மறிஞர் போற்றுங் கவினதக் கடவு ணீத்தம்.

12 வருபுன லிடைபொ லிந்த மலர்மக ரந்தம் பூசித்
தருநறை தெவிட்ட வுண்டு சாதரி விளரி கொல்லி
கருதுபஞ் சமங்காந் தாரம் கௌசிக நட்ட பாடை
விருதிடு குறிஞ்சி யின்ன பண்ணளி மிழற்று மோர்சார்

13 சலசமென் மலர்க டோறுந் தனித்தனி தணியன் மாந்தி
மலகரி தோடி பூரி வராளிமோ கனக்கல்யாணி
பிலகரி வசந்த நாட்டை சண்முகப் பிரியை யின்ன
பலபல விசைகள் பாடி வண்டுகள் படிக்கு மோர்சார்.

14 நளிர்திரை வையை யூடு ஞானசம் பந்த னிட்ட
தெளிதமிழ் வேத கோசத் திரளெனக் குரவை கெண்டை
களிறு பேய்ச்சளை விலாங்கு களிவரா லுளுவை வாளை
யொளிரின வனந்த மீன்களு கண்டெதிரேறு மோர்சார்.

15 புகழ்வள மினைய பெற்றுப் பூருவ நோக்கிப் போந்து
மிகவிறை தருமவ்வாறு விநாயக தீர்த்த மென்னப்
பகருலக னைத்தும் போற்றப் பட்டதால தன் விசேடம்
நிகரிலது ணர்த்தக் கேண்மின் கெடுந்தவம் புரிந்து வென்றீர்.

16 ஆடுந ரனைய ரேனு மனையரப் பொழுதிற் றூனே
நீடுறு வாழ்நாட் செல்வ வினைத்தமற் றெவையும் பெற்று
நாடுறை போகந் துய்த்து நமனை வென்றும்ப ரெய்திப்
பீடுறை யின்ப மூழ்கிப் பின்புவீ டெய்து வாரால்.

17 அத்தகு தெய்வ தீர்த்த மாங்குவந் தடைத லோடுங்
கொத்தலரிதழி தும்பை குவவு செங் கோடு ரத்தங்
கைத்தல மூக்கணுல் வாய்க் கயமுகக் கருணை மூர்த்தி
யுத்தம கணங்களோடு முனை விதி முறை நீராடி.

18 பவளமால் வரையி னூடு பனிக்கட லுதித்த திங்கள்
தவளவான் நிலவ னேகந் தழைந்துள தன்மைத் தென்னக்
கவளமா வதனத் தெந்தை கவின் கொடன் வடிவிற்சோதி
திவளவா னந்த நீறு தெய்வநூன் முறையிற் றீட்டி.

19 பன்முக வுருத்தி ராக்கம் படிவங்க டோறும் தாங்கித்
தன்மல ரிதயத்தூடு தாதையைந் தெழுத்து மேத்தித்
தொன் மரபினிற் கணங்கள் சூழ்வரத் துடிசை மூதூர்
மன்மணிக் கோவி லெய்தி வலங்கொடு வணங்கிப் பின்னர்.

---

* பேய்ச்சாளை யென்பது பேய்ச்சளை என்றாயிற்று
பேய்ச்சாளை = ஓர் மீன்.

20 பூரி துந்துபிதடாரி பொருதுடி மதங் கந் தாளம்
பேரி சந்திரிகை பம்பை பெருந்தவில் நாக சின்னம்
தாரியங் குறடு மொந்தை துத்தரி காளந் தாரை
வாரியம் பல கணங்கள் வாரியின் முழங்கா நிற்க.

21 இன்னிசை மகர வீணை யேந்தி மாடக முறுக்கி
மன்னிய சுருதிதாக்கி வார் நரம் புறழ்ந்து மெய்யிற்
றுன்னிய குற்ற நீத்துச் சுவையமு தொழுகிற் றென்னப்
பன்னிய சில கணங்கள் பரதநூன் முறையிற் பாட.

22 வண் மணி விளைபால் வேலை வயிறுளோந் தினிதினீன்ற
வெண்மதி மறுகிக் கூனி வெள்குற விசும்பி னேற்றித்
தண்மலி கின்ற தெய்வத் தரளவான் கவிகை கோடி
யுண்மகிழ் சில கணங்கள் உரிமையி னொடு நிழற்ற.

23 திருந்திழை பாகன் சென்னித் தெய்வமா நதித்த ரங்கம்
பொருந்திரு பாலுங் கீழ்மேற் போய்வரும் புதுமை யென்ன
வருந்தவில் சில கணங்கள் மாதவப் பயனங் கெய்தத்
தருந்த ரளங்கள் சூழ்வெண் சாமர மிரட்ட மன்னோ.

24 விடமிகு புழைப்பற் பேழ்வாய் வெய்யவெங் கனற்கட் சீற்றப்
படவரியரவு கௌவப் படுகதி ரெனுஞ் சாந் தாற்றி
அடல்கெழு சில கணங்கள் அம்பலத்திருவர் காண
நடமிடு முக்கட் பெம்மான் ஞாங்கர்நின் றிசைக்க மாதோ.

25 வசைதவிர் கவிகை யால வட்டம்பா வாடை குஞ்சம்
தசமுதல் விருத னந்தந் தூயபல் கணங்க ளேந்தத்
திசைதிசை தோறு நந்தா தீபங்கள் வயங்கா நிற்க
மிசைமதி தவழுஞ் சென்னி விநாயக னினைய செய்வான்.

26 திருக்கிளர் விமானத் துற்ற சிவபிரா னருகிற் சென்றாண்
டருக்கிய முதல நேர் கொண்டணிந்த பூவாதி நீத்துத்
தருக்கிய கயமுகத்துத் தானவற் செற்ற தோன்றன்
மருக்கமழ் கொன்றையானை மஞ்சன மாட்டா நின்றான்.

27 காவதந் திசைகடோறுங் கமழ் மணங் காட்டா நின்ற
பூவருத யிலந்தெய்வப் புண்ணிய வடிவான் மிக்க
ஆவருங் கைந்து பஞ்ச வமுதொடு நறுநெய் தீம்பா
லோ வருந்தயிர் தேன் கன்னலுடைத் தினிதெடுத்தசாறு.

28 மதுரமென் கனிபிழிந்து வடித்தெடுத் திட்டசாறு
புதுமைதங்கிள நீர்சீதப் புனித சந்தனக்குழம்பு
முதுநறுந்த பனமின்ன முறைமுறை முதனுண்மாயோன்
சதுமுகன்றேடிக் காணுத் தனிப்பெருங் கடவுட்காட்டி. [லாம்

29 புண்ணிய வெண்ணீ றென்னும் பொலிந்தொளிர் மேனியெல்
தண்ணிய பரிமளப்பூச் சந்தனந் தளைக்கச்சாத்தி
யெண்ணிய மறைகட்கின்னு யெட்டுரு விறைவன் சுங்கை
யண்ணிய முடிமேல் வெண்முத் தக்கதை யணிந்திட்டப்பால்.

30 தனையினி தின்றெடுத்த தந்தை பூணரவமெல்லா
மினைவுற வரிவண்டிட்ட மின்னமுதிசை மிழற்றப்
புனைமல ரலங்கற்சாத்திப் புலியிடை மருங்கிற் சேர்பக்
கனையிருடுரக்குஞ் செம்பொற் கதிர்மணிக் கலைவேய்ந்தன்றே.

31 பாரதவேத மேருப் பருப்பதத் தெழுது மெந்தை
போரடரிப் முறித்த புனிதனெண் பணிகணுணத்
தாரணி முதலீரேழு தலத்தரும் விலைகண்டோராச்
சீரணி நவமணிப்பொற் செழுங்கதிர்ப் பணியுமிட்டான்

32 கான்மத கரடநால்வாய்க் கரியுரி போர்த்தமேனி
மான்மத மாதியாய மணந்தழைத் துலவச்சாத்தி
மேன்மைகொள் கருணை கூட்டு மிதம்பல கறிதழீஇத் தீம்
பான்மலி போனகங்கள் பண்புறநி வேதித்திட்டான்.

33 வெள்ளிலை பாகுதூபம் வியன்சுடர் சிவிறிமுத்தின்
றெள்ளிய கவரியாடி சிறந்தமற் றெவையும் யார்க்கு
முள்ளிய பொருள்களெல்லா முதவுவாற் குதவி மேன்மேற்
றுள்ளிய பல்லியங்கள் சூழ்பெருங் கடலினார்க்க.

34 வலங்கொடு வணங்கிநின்று வாயுரை தழுதழுப்பத்
துலங்குமெய் புளகமெய்தத் தூயவானந்த வெள்ளம்
நலங்கிளர் கருணைசெய்ய நயனங்கடொறு நின்றோட
விலங்கல் வில்லாளிதன்னை விநாயகமூர்த்தி வாழ்த்தும்.

35 புத்தியாய் மனமாய் மேலாய்ப் புலன்களாய்ப் பொறியோளாங்
சித்தியாய் மவுனானந்தத் தெளிவதாய்ச்செகத்தாய்த்தூய [தாய்ச்
சத்தியா யகண்டாகாரத் தற்பரவடிவாயின்ப
முத்தியாய் வயங்குஞ்சோதி முக்கணெம் முதல்வபோற்றி.

36 போதனை யுவரிசூழ்ந்த புவிமுழுதளந்த செம்பொற்
பாதனை யொருநாற் கோட்டுப்பனைக்கைமும் மதவெள்ளானை
நாதனை வானுளோரை நாகரைப் பிற்றை நல்கி
வேதனை தவிர்த்துக் காக்கவெளிநின்ற விமலபோற்றி.

37 விரிதிரையுவரி நாப்பண் மேதினி சுமக்குஞ்சென்னி
வரியரவணைதுயின்ற மாயனு மலருளோனுந்
தெரிவருமகந்தைநீங்கச் செங்கனலுருவா யோங்கிப்
பரிவருள் புரிந்தன்னோரைப் பாலித்த பகவபோற்றி.

38 தனிவட நிழலமர்ந்து தடைபடாக் கேள்விச்சான்ற
முனிவர்கணால் வருக்கு முன்னைநாண் மோனஞானங்
கனிவுற வுணர்வித்தன்னோர் கருத்தினைத் திருத்தியாண்ட
பனிமதி வேணிவெள்ளிப் பருப்பதத்திறைவபோற்றி.

39 அரியயன் முதன்மற்றோர்க்கு மஞ்சுறாவ வுணரோடுந்
திரிபுர மெரித்துநின்ற சிறுநகைச் செல்வபோற்றி
வரிசிலை குழையவாங்கி மலர்க்கணை தெரிந்து பூட்டிப்
புரிசமர் விளைத்த காமற்பொடித்தனி புனிதபோற்றி.

40 ஒரு முனிக்காகக் கூற்றை யுதைத்தபொற்பாத போற்றி
யிருவருக் கெண்ணமுற்ற வெடுத்த கூத்தெந்தை போற்றி
யருளினர்ச் சித்தமா யோற்காழி நல்கபல போற்றி
மருமலர்க் கடவுட்சென்னி வாங்கியகரத்த போற்றி.

41 ஐயனே போற்றி யன்பர்க் கன்பனே போற்றிவேத
மெய்யனே போற்றி ஞான விமலனே போற்றிமேலாந்
துய்யனே போற்றி யேக சொரூபனே போற்றிசூலக்
கையனே போற்றி யாதிக்கடவுளே போற்றி போற்றி.

கலிநிலைத் துறை.

42 என்ன வின்னன பற்பல துதியெடுத்தியம்பி
யன்ன நன்னடை யுமையொரு பாகனின் னருளாற்
றன்ன தெண்ணமுற் றுறப்பெறீஇ விடைகொடு தாழாக்
கன்ன மும்மதக் களிற்றுமா முகத்தனிக் கடவுள்.

43 மந்தி ராலய நீங்குபு கணங்கள்சூழ் வரவே
நந்தி யாலயப் புறத்துள ஆர்தியை நடத்திப்
புந்தி மாமகிழ் கூர்ந்துதொல் விருக்கையிற் போந்தங்
கிந்தி ராதியர் தொழுதுவாழ்த் தெடுப்பவீற் றிருந்தான்.

44 பருக்கு மொய்ம்பொரு நான்குபெற் றுயர்கண பதியன்
றுருக்கு மன்பினர்ச் சித்தலா லத்தல மூவகை
பெருக்க கின்றசீர்க் கணேசுர புரமெனப் பெயர்பெற்
றிருக்கு மங்கெழு கிரிசதுர்ப்புயாசல மென்பார்.

45 அருள் செயும்பிரான் கணேசுர நாதனென் றவனி
கருத கின்றனன் கன்னியாய்க் காட்சிதந்த மையாற்
றிருவணங்குமை கோமள வல்லியாய்த் திகழ்ந்தாண்
முருகுயர்ந்தபூம் பொழில்வனப் பெருந்தவ முனிவீர்.

கணபதிபூசைச் சருக்கம் முற்றும்.

ஆகப்பாக்கள்-266.

அகத்திய பூசைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

1 மற்று மோதுதுங் கேண்மினீர் சந்தனவனங்கள்
சுற்று வான்பொதி காசலத் தமர்ந்தமெய்த் துறவோன்
முற்று சீர்த்திரே தாயுகத் தரன்பதி முழுது
முற்று வேதநூற் படிதொழ வினைத்தன னுளத்தில்.

2 அகத்தெழுந்தபே ரன்புதூண் டிடமணியருவி
மிகப்பொலிந் தொளிர் தென்பொதி காசலம் விடுத்துச்
சகத்தருஞ் சிவதலந் தெரிசித்திடச் சார்ந்தான்
மகத்து வம்பெறு தவத்தின்முத் தமிழ்முனி வரனே.

3 கரந்தை யஞ்சடைக் கண்ணுதற் காரணக் கடவுள்
விரந்த ரும்பொலி சினகரத் தலம்பல நேடிப்
பரந்த வன்புளங் கனிந் தெழத்தமிழ் முனிபணிந்து
வரந்த ரும்பருப் பதந்தொறும் போய்வர மதித்தான்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

4 சதுரகிரி திரிகூடா சலஞ்சோலை
மலையினிய சாமி வெற்பு
முதுவர்திகழ் விராலிமலை பிரான்மலைதென்
பரங்குன்ற முகிலி னோடு
விதுவுலவு திரிசிரபூ தரம்பழனி
மலைபன்றி விலங்கல் காவின்
மதுபமுறல் சிவமலைபொன் னூதிமலை
சென்னிமலை வட்ட வோங்கல்.

5 அலகுமலை கொல்லிமலை கபிலைமலை
தோகைமலை யருணவெற்பு

நிலவுதவழ் தனிகைமலை வேங்கடமா
மலையினைய நீந்திப் பின்று
மிலகுதவ முனிவரரை யெதிரேற்று
விருந்தூட்டி யிடர்செய் நீதி
யலதியற்றும் வில்வலனோ டசமுகன்வாழ்
குடகுமலை யடவி சேர்ந்தான்.

6 அலகிறவ முனிவரரை யிடருறுத்து
மவுணர்களை யாண்டு கொன்று
சிலபகலவ் விலக்கிலிடை சிறந்துதவ
மிருந்துபின்னர் சிர்சா லட்ட
குலகிரிக ளொனுகிட தங் குலவுகந்த
மாதனமே மகூடம் விந்தம்
இலகியமந் தரங்கயிலை யிமையமுற்று
நீலகிரி யிடைப் புக்கானேல்.

7 வள்ளியவெதன் னமுந்தகலை மதிதவழ்தண்
டலைகடொறு மகிழ்வு கூர்ந்து
துள்ளிமழை முகிலினங்கள் அடைகிடக்கு
நீலவெற்பிற் றுறவோ ரேத்தப்
புள்ளிவண மயிலகவு பொதிகைமுனி
யிருந்துசின்னாட் போக்கிப் பின்னர்
வெள்ளிநெடு வரைகுறுகிப் பஞ்சலிங்
கங்களையும் விதியாற் றாழ்ந்து.

8 அதிசயங்கள் பற்பலகண் டகங்களித்து
வெள்ளியங் குன்றதனை நீங்கி
விதிமுகுந்த னமரர்தொழ விளங்குகின்ற
மருதகிரி விரைவிற் போந்து
கதிர்ததும்பு சினகரத்திற் கருணையுருவா
யமர்ந்த கந்த வேளை

முதிருமன்பி னொடு வணங்கி
முன்னாட்சின் னாளவணம் முறையினுற்றான்.

9 தன்புனித குருவாய சண்முகவேள்
கருணைபெற்றுத் தமிழ்நூல் வல்லோன்
பின்புவள மலிமருதப் பிறங்கலைவிட்
டெழுந்து சென்று பேணினோர்கட்
கின்புதவி வளர்குருவ விருடிகிரி
தனையடைந்தங் கெவரு மேத்த
மின்புயனோய் தெய்வவன மொன்றுகண்டு
நன்றிதென வியந்துற்றானல்.

கலி விருத்தம்.

10 சலதர முறங்குபூந் தருக்க ளாயிடை
மலர்பல சிதறுபு வளர்த ளிர்க்கையாற்
சிலகனி நீட்டிமேற் சென்னி சாயத்தன்
பலனுயர் முனிவரற் பணிதல் போலுமே.

11 விதுப்புனை தனதுதொல் வெற்பிற் றோன்றுபு
புதுப்புனல் படிந்துபூம் பொடிக டோய்ந்ததால்
மதுப்பொழி லடைமுனி மனங்க ளித்திடச்
சதுர்ப்புய கிரியிடை தவழ்ந்து லாயதே.

12 மயிலின மாடின வண்டி சைத்தன
பயில்கிளி பூவைகள் பரிந்து பாடின
சயிலவெள் ளருவிகள் தரளஞ் சிந்தின
குயில்பசுந் தமிழ்முனி குறுக லோடுமே.

13 கருணையி னுருவமாங் கலச மாமுனி
யருநெறி நீந்திய வயர்வெ லாந்தவிர்
பொருதிரை படிந்துபூம் பொழிலு றங்குகார்
வருதுளி சிதறபு மகிழச் செய்தவே.

14 தன்னிக ரிலாதவச் சதுர்ப்பு யாசல
மன்னிய தவமுனி வரர நேகர்க
டுன்னிநர் தொழுதயல் சூழப் போற்றபு
வின்னிசை முதிர்தமி ழிருடி தங்கினான்.

15 தங்குபைந் தமிழ்முனி சதுர்ப்பு யாசலம்
பொங்குபுண் ணியவனப் பொலிவு கண்டுநா
மிங்கொரு சிலபக லிருத்தல் வேண்டுமென்
றங்கரு நெடுந்தவ மாற்றன் மேயினான்.

16 பெருமையிற் பல்பெயர் பெறுமப் பூதரத்
தருவியிற் சுனைகளி லாடி நாடொறு
மிருளறச் செய்கட னியற்றி யிவ்வகை
யொருமைமுத் தமிழ்முனி யொழுகி னோற்றனன்

17 இன்னண நாடொறு மிருக்குங் காலையில்
துன்னெறி யசுரரைத் தொலைத்த பாவமே
மன்னிய தமிழ்முனி மருங்கிற் றோன்றலால்
அன்னவ னிறைவனை யமர்ந்து போற்றவே.

18 தவநெறி யிடைவிடாச் சரத மாமுனி
பவமறு துடிசையம் பதிபுக் காங்கமர்
சிவபெரு மானையுந் தேவி தன்னையும்
உவகையி னொடுதொழு தொருங்குற் றனரோ.

19 உளமகிழ் வொடுகுறித் துள்ப தந்தொறும்
வளர்தமிழ் மணங்கமழ் மலைய மாமுனி
யிளமுலை யுமைபுணர் ஈசன் பூசையும்
தளர்வகல் விரதமுஞ் சாதிக் கின்றநாள்.

20 அருளுயர் சிவநிசி யடுத்த தாயிடைத்
தெருளுயர் முத்தமிழ்த் தெய்வ மாமுனி
வெருளறு துடிசையின் மேவி னின்றமெய்ப்
பொருளினை யருச்சனை புரிதன் மேயினான்.

21 பனகம தணிபரம் பரன மர்ந்துள
சினகர முழுவதுந் திகழ்வு றும்படி
யனசமுத் தமிழ்முனி யலங்க ரித்திடத்
தனதரு கிருந்தவர் தமையங் கேவினான்.

22 உம்பருந் துதித்திட வுயர்ந்த மெய்த்தவக்
கும்பசம் பவனருட் கொண்டு மற்றவர்
பம்பரம் பொருதனப் பாவை பங்குளான்
செம்பொன்மந் திரமணி செயத் தொடங்கினார்.

23 மங்கல மிணங்குசா வணங்கள் வானுற
வெங்கணு நிறைத்தனர் இனிய கன்னலும்
பொங்கமென் கதலியும் பூக தங்களும்
துங்கவன் பொடுதிசை தொறுநி றுத்தினார்.

24 மிசைவிசித் திரநெடு விதான மிட்டனர்
பசையுடைப் பலதருப் பழங்க டுக்கினர்
வசையறக் கமழ்மண மாலை நாற்றின
ரிசையுமெய்த் தவத்தின ரெங்குமீண் டியே.

25 தாதுறு நறும் பொழிற் சதுர்ப்பு யாசல
மீதுதன் பெயர்பெறீஇ விளங்க வாயிடைப்
போதுறு மொருகலை பொலிக வென்னுளத்
தோதுபைந் தமிழ்முனி யன்னி னானரோ.

26 குடமுனி நினைதலுங் குழுகு பென்னவத்
தடநெடு வரையினோர் சலசப் பூஞ்சுனை
யிடரறு தீப்புன லிடையி டைச்செழுஞ்
சுடர்மணி யொளிவிடத் தோன்றிற் றெண்டவே.

27 மானத வாவிவான் மறைந்து வெள்குறச்
சானவி முதனதித் தடங்க டற்செலப்
பானலு நளினமும் படர்ந்த வச்சுனை
யானது பெருமைபெற் றவட்பொ லிந்ததே.

28 படிபவர் பழவினைப் பற்ற றுப்பது
வடிவமா குறைகளை மாற்ற வல்லது
மிடியிரு டவிர்ப்பது விபவ மீவது
கடிதில்வேண் டியபதங் காட்டத் தக்கதே.

29 அறந்தனை விளக்குவ தாதி யோர்கள் பிற்
பிறந்திற வாவகைப் பேறு நோல்வது
துறந்துளோர் யாவருந் துதிக்குந் தூயது
சிறந்ததவ் வகத்தியத் தீர்த்த மென்பதே.

30 செந்திரு மலர்கொளத் தீர்த்தத் திற்படிஇச்
சந்தன மலைமுனி தவத்தர் சூழ்வரச்
சுந்தர நெடுமதிற் றுடிசை யெம்பிரான்
மந்திர மெய்தியிவ் வகைசெய் தானரோ.

31 கூந்தலாம் பனைச்சரம் குலுங்கக் கோத்தனர்
சாந்தமா தியகொடு தளமெ ழுக்கினர்
சேந்தமா மணிமதிற் சித்தி ரித்தனர்
பாந்தளேந் தியநெடும் பார்வி யக்கவே.

32 தோரண நிரைத்தனர் தூய பாலிகை
பூரண குடங்கள்பல் புடைய மைத்தன
ராரண முழுவது மறியொ ணாமுதற்
காரண னுளத்தினிற் கருணை கூரவே.

33 பரிந்துசெம் பருத்திவெண் பஞ்சி னூற்றிரி
புரிந்திளஞ் சுரபிநெய் போதப் பெய்தெழில்
விரிந்தநந் தாமணி விளக்க மெங்கணுந்
தெரிந்தமா தவத்தினர் திகழ வேற்றினர்.

வேறு.

34 இந்த வாறணி யெங்குநி றைத்தபின்
அந்த நாதன ருச்சனைக் காம்பொருள்

சந்த நாடணித் தாபத னேவலான்
முந்த நாடிமு னிவர ரீட்டுவார்.

35 பதம திற்பொலி பச்சிளா நீர்செழும்
கதலி முற்றிக்க தித்தெழு மாப்பலா
வுதவு முக்கனி யோங்கு தெங்காய்த்திர
ளிதமு றக்குவித் திட்டன ரீட்டியே.

36 தக்க தாம்பசுத் தந்திடு மைந்துசீர்
மிக்க நான்முறை மேவவ முதினெய்
தொக்க பாறயிர் தூங்குமிருன்மது
செக்கர் வேழத்தி ரட்செழுஞ் சாறரோ

37 வீறு கொண்டுவி ளைந்தப ழம்பிழி
சாறு நன்குடைச் சந்தனத் தின்செழுஞ்
சேறு மான்மதந் தெய்வந றுவிரை
நீறு பூம்பனி நீர்புழு கீட்டினார்.

38 நன்மு றைத்தப னங்கள மைத்தனர்
மின்மணிப்பணி வெண்டுகி லாதிய
தொன்ம றைத்துற வோர்க டொகைப்படத்
தன்ம மிக்கவத் தானவி ரப்பினார்.

39 மடலை நீவிம றுக்கவர்ந் தூண்டுறாய்ப்
படலை சேரளி பாடும்பல மலர்க்
குடலை கோடி கொணர்ந்தனர் கோவில்வாய்
நடலை தீர்முழு ஞானமு னிவரே.

40 வேண்டு கின்றவி யன்பொருள் யாவு நேர்ந்
தாண்டு நின்றவ ருந்தவர் தந்திட
வீண்டு மன்பினி ருடிகள் வேந்தராய்ப்
பூண்டு றைந்தவர்ப் பூசிப்ப தாயினான்.

41 ஆதியாகிய வாகம நான்முறை
சோதிஞாயிறு தோன்றுறு காறுமின்

பாதியானைப்ப ணிந்தருச்சித் தெதிர்
கோதிலாவக் குறுமுனி போற்றினன்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

42 அரவணி சடையாய் போற்றி
யனன்மழுப் படையாய் போற்றி
வரமலி கொடையாய் போற்றி
வரிப்புலி யுடையாய் போற்றி
சுரர்பணி விடையாய் போற்றி
தும்பையந் தொடையாய் போற்றி
பரவுநன் னடையாய் போற்றிப்
பாவர்பா லடையாய் போற்றி

43 அருட்குரு பரனே போற்றி யணிசசி தரனே போற்றி
மருட்களை வரனே போற்றி மவுனசங் கரனே போற்றி
தருக்கணி யுரனே போற்றி சகலமந் திரனே போற்றி
திருத்திகொ ளரனே போற்றி சிவசுணே சுரனே போற்றி

44 அடல்கெழு வெஞ்சூர் மாது அசமுகி பெற்ற மைந்தர்
திடமுடன் செய்த சூதின் திறமறிந் தவரைக் கொன்ற
விடலிகர் பாவந்தீர்த்த விமலனே போற்றி வெள்ளை
யிடபம தூர்ந்தோய் போற்றி யீசனே போற்றி போற்றி.

45 ஈசனே போற்றி யெங்க ளிறைவனே போற்றிப் பாவ
நாசனே போற்றி யாதி நாதனே போற்றி யன்பர்
நேசனே போற்றி ஞான நிமலனே போற்றி வேத
வாசனே போற்றி முக்கண் வரதனே போற்றி போற்றி.

கலிவிருத்தம்.

46 எனப்பல துதியெடுத் திசைத்தி றைஞ்சுபு
கனப்பணி யணிபரன் கருணை கொண்டுதன்
மனக்குறை முடித்துயர் மலைய மாமுனி
தனக்கியல் சகாயமெய்த் தவரோ டேகினன்.

47 போயமுத் தமிழ்வலான் புனைசந் தாசல
மேயமெய்த் தவர்க்கெலாம் விடைதந் தாங்கொரீ இத்
தூயமுத் தருவிக டென்றித் தென்றிசை
யேயவெற் பிருக்கைபுக் கினிதுற் றனரோ.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

48 கலசமுனி பூசித்த காரணத்தாற்
சதுர்ப்புயவோங் கலுமப் போதிவ்
வுலகிலகத் தியகிரியென் றோங்கியதூ
ரகத்தியனல் லூரென் றுற்ற
விலகுபெரு மானுமகத் தீசுரனே
யாகினனவ் விறைவி தானுங்
குலவுமருந் தவச்செல்வி யெனப்பெயர்பெற்
றிருந்த னண்மெய்க் குணத்தின் மிக்கீர்.

அகத்திய பூசைச் சருக்கம் முற்றிற்று.
ஆகப்பாக்கள் - 314.

கந்தமாமுனி பூசைச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1 பந்தபா சாடவியைப் பறித்துணர்வாங்
கனற் கொழுத்திப் பரமானந்தச்
சந்தநீள் பயிர்விழைத்த சதுர்ப்புயா
சலத்தமர்ந்த தவத்தோர் தம்மிற்
கந்தமா முனியென்பான் கனிந்துதுவா
பரயுகத்திற் கருத்து முற்ற
முந்தமா லயனணுகா மூர்த்திதனைப்
பூசிக்க முயன்றா னன்றே.

வேறு.

2 பரிதியெழு முனமெழுந்து பரிமளப்பூஞ்
சுனைமூழ்கிப் படிவ மெங்குந்
துரிதமறத் திமிரமறச் சுடருமிழ்வெண்
டிருநீறு துலங்கப் பூசி
விரிகதிய மதியுமணி வேணியரன்
விழிமணிகண் மீது பூண்டு
தெரிசுருதி நெறிமுறையிற் செய்கடனெ
லாமுடித்துச் செயல்வே றின்றி.

3 தண்டுகமண் டலமேந்தித் தருப்பைமுருக்
கிலைச் சுருக்குந் தழைப்பத் தாங்கி
மண்டுதர பந்தனமு மந்திரமுப்
புரிநூலும் வயங்கா நிற்க
விண்டுமுத லாயபல விண்ணவரும்
பண்ணவரும் விரும்பிப் போற்றித்
தொண்டுசெயுந் தொறுங்கருணை சுரந்துவள
ரெம்பெருமான் றுடிசை சார்ந்து.

4 பிறையனைய தனிக்கோட்டுப் பேழைவயிற்
றைந்துகரப் பெறு முத்தானக்
கறையடிநால் வாய்ச்சிறுகட் கயவதனப்
பெருமானுங் கடலன் றுண்டு
மறைவுடைய கிரவுஞ்ச மதந்தணித்து
விந்தவெற்பின் வலியை மாற்றித்
தறைபுகழ்வில் வலன்வாதா பிகளையுயிர்
கடிந்துயர் முத்தமிழ்வ லோனும்.

5 பண்டணுகி யாகமநூற் படியருச்சித்
தேத்த வருள் பாலித்தின்பங்
கொண்டமரு மெம்பெருமான் கோபுரவி
மானநெடுங் கொடிசூழ் செம்பொன்

மண்டபவாலய மதிலை மரபினெதிர்ந்
துட்புகுந்து வலமாய் வந்து
தொண்டர்புகழ் கந்தமுனி தொன்முறையிற்
பணிந்து தொழத் தொடங்கினானால்.

6 அருமறையி னெறிதவரா தாலயத்தை
யலங்கரித்திட் டபிடேகங்கள்
பெருகிடுசீ வேதனங்கள் பிறவமுறை
முறைநடத்திப் பேரானந்தத்
துருவமுழு வதும்பொடிப்ப வுள்ளமுநெக்
குடைதர வாயுரை தள்ளாடக்
கருணைவிழி யருவிபொங்கக் கனிவினொடு
சிரந்தனிற் பூங்கரங்கள் கூப்பி.

7 அணிந்தகணே சுரபுரப்பொன் னாலயத்து
ளருவுருவாயகில வாசை
தணிந்தவர் நெஞ் சுலவுமருந் தவச்செல்வி
யுடனமர்ந்த தலைவன் றன்னைப்
பணிந்துபணிந் தெழுந்துமுறைப் படிநின்று
கொண்டாடிப் பலகாற் பாடித்
துணிந்துபல சுருதியுணர் தூயகந்த
மாமுனிவன் றுதிசெய் கின்றான்.

8 ஆணாகிப் பெண்ணாகி யலியாகி
யுருவாகி யருவு மாகிப்
பூணாகிப் பொன்னாகிப் பொறியாகிப்
புலனாகிப் புந்தி யாகிச்
சேணாகி வளியாகித் தீயாகிப்
புனலாகிச் செழும்பா ராகிக்
கோணாகி யொழுங்காகிக் குலவியெங்கு
நிறைந்த முக்கட்குழக போற்றி.

9 மாலாகி யயனாகி வயங்குமுருத்
திரனாகி மறைக ணான்கின்
மேலாகி யொளியாகி வெளியாகி
யிருளாகி விரிந்த னேக
நூலாகி யுரையாகி நுகர்வாகிப்
பெரிதாகி நுண்மைத் தாகிப்
பாலாகிச் சுவையாகிப் பரந்துயிர்க
டொறும்பரந்த பரம போற்றி.

10 கணபதிபூ சனையுவந்து கருணைபுரி
தந்தமுதற் கடவுள் போற்றி
குணமலைய முனிவனுளக் குறைதவிரக்
காட்சிதந்த கோமான் போற்றி
மணமுலவு கருங்குழற்கோ மளவல்லி
யிளமுலை தோய் மார்ப போற்றி
புணர்துரித விருள்விடியப் பொலிந்து
நின்ற பரஞ்சோதி போற்றி போற்றி.

11 என்றுதுதித் துளங்க னிவுற் றெழுந்த
கந்த மாமுனிவ னிவ்வாறாகத்
துன்றுதினந் தொறுமந்தத் துடிசைநகர்ப்
பெருமானைத் தொழுது தொல்சீர்க்
குன்றுநெடு வனத்தமர்ந்து கொடியதவ
முறைவந்துங் குறைப் பாடின்றி
நன்றுபெற வொழுகினால் ஞாலமதித்திடும்படி
யன்னாளி லோர் நாள்.

கலிவிருத்தம்.

12 அனகசித்தி யருள்பிர தோடமாந்
தினமடுத்தது தேர்ந்துதி ருந்திய
வனநகத்திடை வாழ்கந்த மாமுனி
தனதுளத்திலித் தன்மை நினைத்தனன்.

13 துன்பு தீர்பிர தோடமெ னுந்தினத்
தன்பு கூர்ந்தரற் கர்ச்சனை யாற்றுபு
முன்பு கோடிமு னிவருந் தேவரு
மின்பு வாழ்புவெற் றேயிருந் தாரரோ.

14 ஆத லாலின்ற ரனையர்ச் சிப்பதிற்
காத லாமலை வைசவரு மென்றெழூஉப்
போத மாதவன் போற்றுமவ் வெற்பினோர்
சீத நீர்ச் செழுந் தீர்த்தமுண் டாக்கினர்.

15 மாத வத்தின்வ லிமையி னப்பெரும்
பூத ரத்திற்பொ லிந்தொளிர் பூஞ்சுனை
நீத சுற்றுஞ்செ ழுங்கந்த தீர்த்தமென்
றோத முற்றுமு யர்ந்தது லகினே.

16 அன்ற டுத்தவ கத்திய தீர்த்தமும்
பின்ற மைத்தபெருங் கந்த தீர்த்தமும்
குன்ற தற்கிரு நோக்கவொ ளும்படி
நன்ற ருட்கொடு நாளுந்து லங்குமே.

17 சான்ற கேள்வித்த னிக்கந்த மாமுனி
யான்ற தாந்தன ருந்தவத் தவ்வயிற்
தோன்று பூஞ்சுனை தோய்ந்தெழுந் தாற்றுவ
லூன்று பேரன்பு டன்முடித் தானரோ.

18 வடிவெ லாமுழு மந்திர ஞானவ்வெண்
பொடிவி லாவெழப் புங்கவன் கண்மணி
முடிவி லாதிட முற்றுந்த ரித்துள
மிடிமை தீர்குசை மெல்விரன் மின்னவே.

19 தசவு டைத்திரி தண்டங்க மண்டலந்
திகழ்க ரத்திற் சிறந்து பொலிந்திடச்
சுசவு னப்பினைத் தோலுப வீதமும்
புகழு ரத்தின்பு றத்திற்பொ ருந்தவே.

20 உதர பந்தன மொப்பின்றி யோங்கிட
பதம டைந்தவர் பாவவற் சீரிய
வதன சந்திர வண் கருணைக்கதி
ரிதமு றும்படி யெங்குமி லங்கவே.

21 பத்தி பொங்கிப்ப ழுத்துத்த தும்பிட
நித்தியந்தவ நேர்கந்த மாமுனி
சத்தியம்பிகை தன்னொடெங் கோனமர்
துத்தி யங்கொடு டிசைபுக் கானரோ.

22 புக்கமாமுனி பொன்மதிற் கோவில்சார்ந்
தக்கராவணிந் தம்பிகை யோடுறை
முக்கணுதலை முன்னி வலங்கொளாப்
பக்க மேவியிப் பான்மை செய்வானரோ.

23 ஓதுமா கமத்துள்ள விதிப்படி
நீது றுதசெ ழுநீரு மாலியப்
போது மானனம் போற்றி விலக்குபு
மாது பாகனை மஞ்சன மாட்டினன்.

24 பலனு யர்ந்தப லவபி டேகமு
நிலவு ணர்ந்தசீ வேத்திய மும்புரிந்
தலர்கள் சிந்திய ரன்றிருத் தாள்களை
மலரு மன் பொடு வாழ்த்தியர்ச் சித்தனன்.

25 பூசைமுற்றும் புரிந்து பணிந்தெழுந்
தாசைமிக்கவ கங்கைசி ரத்தமைத்
தீசனைத் துதித் தின்னருள் பெற்றனன்
மாச றப்பிர தோடமதித்தரோ.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

26 தொழுதமுனி வரன்றுடிசைச் சுயம்புவைப்பின்
னரு நெடுநாட் டுதிக்குந் தோறும்

ஒழுகுபழ மறையு நண்ணு வுடையநா
யகனெனவு முமையா டன்னை
யெழுபுவனிக் குந்தலைவி யென்பதுநா
யகச்செல்வி யெனவும் போற்றிப்
பழுதுதவிர் பெறுவரங்கள் பற்பலவும்
பெற்றிருந்தான் பரிவான் மிக்கீர்.

27 அந்தமுனி நெடுந்தவஞ் செய் தமர்ந்துளதா
லவ்வுகத்தி லினைய வோங்கல்
கந்தசயி லந்தலமுங் கந்தபுரி
யென்பரன்றேன் கனிவு கூர்ந்து
முந்தமொழி துதிநாம முக்கணனு
மம்பிகையு முறையிற் பெற்றார்
தொந்தவினைக் கடல்கடந்து துறையடைந்து
முறையறிந்துட் டுறவு பூண்டீர்.

கந்தமாமுனி பூசைச் சருக்கம்
முற்றிற்று.

ஆகப்பாக்கள் 341.

குருவவிருடி பூசைச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1 தொடையடுத்த புதுச்செழுந்தேன் றூங்கவரிச்
சுரும்பிமிரத் துவளுஞ் சோலைப்
புடையுடுத்துப் பற்பலபேர் புனைந்தோங்கித்
துடிசைதனிற் பொலியு மவ்வெற்

பிடைமிகுத்த துறவினரு ளினியகுணத்
தினன்குருவ விருடி யென்பான்
கடையுகத்திற் சிவபெருமான் காட்சிபெறத்
தவம்புரிவான் கருதினனால்.

2 ஆதிதனிற் கணேசுரநா யகனாகிக்
கயமுகவற் கருளி யப்பாற்
சோதியகத் தீசனெனத் தூயதமிழ்
முனிபரவத் தோன்றிப் பின்ன
ரோதிமனத் துலவுநண்ணு வுடையபரஞ்
சுடராகி யுறுதி யன்பிற்
றீதில்குணக் கந்தமுனி தெரிசிக்க
வரங்கணல்கித் திகழு மூர்த்தி.

3 மங்களகோ மளவல்லி வயங்குமருந்
தவச்செல்வி வரங்க ளன்பர்க்
கங்கருணை யகச்செல்வி யாகியண்ட
ரண்டமுழு தாண்ட நாக
கங்கணியோர் பாகமுடைக் கருணைநெடுங்
கடலின்பக் களிஞா னத்தேன்
பங்கமுறா மணியெனுமப் பரஞ்சுடரை
விரும்பிமனப் பத்தி தூண்ட.

4. அன்றுசதுர்ப் புயாசலமா யதன்பினகத்
தியகிரியா யப்பான் மேன்மை
யொன்றுகந்த சயிலமதா யோங்குமந்தத்
தெய்வமலை யூடு வாழுங்
கன்றுதவி லாதகுணக் கருணையெழிற்
குருவமுனி கனிவி னோடு
சென்றுபரி சுத்தநெடுந் தீர்த்தமதிற்
படிந்தெழுந்து செய்கை தீர்ந்து.

5 அகத்தியதீர்த் தத்தினரு கமைந்தபன்ன
சாலைநண்ணி யாதி வேத
விகற்த்தியவா றிருந்துமன நெகிழ்ந்துகுண
திசைநோக்கி வினைவொன் றுக்கிப்
பகுத்தவிடை யானந்தப் பற்றறுத்து
நாசிநுனிப் பார்வை கொண்டு
வகுத்துளமுத் தீயினடு வயங்கியரன்
கமலபத மதித்துப் போற்றி.

6 மந்திரவைந் தெழுத்தினையு மனத்தெழுதி
மூலவனல் வளர்ந்தங் கோங்கச்
சந்திரனு மிரவியுமோர் தன்மையினின்
றுள்ளியங்கத் தளர்வு நீங்கப்
பந்திவிர லுகிர்கடரை படர்ந்துசுற்ற
நெடுஞ்சிகைக்கட் பறவை யிட்ட
முந்திவிறை கூடெடுப்ப முடிவரிய
கொடியதவ முயற்சி பூண்டான்.

7 பலபகலிப் படிவருந்திப் பகர்குருவ
முனிநோற்கும் பான்மை தன்னைத்
தவமுழுது மினிதேத்தத் தழைத்தகணே
சுரபுரத்திற் றரள மூரற்
றிலகநுத லருந்தவச்செல் வியினெடுவீற்
றிருந்தருளுஞ் செக்கர் மேனிக்
கலகவரிப் புலியுடைமுக் கட்பிறைச்செஞ்
சடைக்கருணைக் கடவு டேர்ந்தான்.

8 தேர்ந்துபரஞ் சோதிதவஞ் செயுங்குருவ
முனிக்கினிய சேவை நல்க
வார்ந்தபுன லருவிதிகழ் வான்கயிலை
போன்றிலங்கு மால்வெள் வேற்றிற்

கூர்ந்தவரி விழிக்கனிவாய்க் கோமளவல்
லியினோடுங் குறைபா டின்றி
யார்ந்தசிவ கணங்கள்பணிந் தரகரவென்
றேத்திமலிந் தருகிற் சூழ

9 பவதிமிர படலமுடை படவெழுவெண்
ணீற்றினொளி பரவ நால்வாய்க்
கவளமத கரடதடக் கரியுரித்த
போர்வைமிசை கவினத் தூய
திவலையெறி நெடுந்தரங்கத் தெய்வமந்தாகினி
தவழ்பூஞ் செக்கர் வேணித்
தவளநிற மதிக்குழவித் தனியமுத
கலைநிலவு தழைத்துத் தோன்ற.

10 அணியறுகு கரந்தைமத்த மக்கெருக்கென்
பாமயிலை யாத்தி தும்பை
திணிகொணர மடங்கலுகிர் சிக்கரிய
கொக்கிறகு தெய்வ வன்னி
மணியுடைய பெருங்கோல மருப்புவில்வ
மீன்கண்முதன் மற்றுந் தத்தந்
தணிவறுமித் தவப்பயனாற் சார்ந்துருக்க
டொறும்பொலிந்து தயங்கா நிற்க

11 செறியவரிச் சிறையறுகாற் செழுஞ்சுரும்பு
ஞிமிறு வண்டு தேனினொன்றும்
வெறிகமழ நறைகருதி விளர்முத
லிசைபயில விரியா நின்ற
நறியபசுங் கோட்டிதழி நாண்மலர்மா
லிகைதுவள நவைதீர்ந்துள்ள
மறிகமழ்கு லந்துடியிவ் வகையனபற்
பலவுமங்கை வயங்கி யோங்க.

12 கடினவிட முள்ளெயிற்றுக் கவைநாக்கட்
செவிப்பகுவாய்க் கதிர்மா ணிக்கச்
சுடிகைவரி யுடற்சீற்றத் தொல்பணியே
பல்பணியாய்த் தோள்கை யாதி
வடிவமுழு தினுமமைந்து வயங்கவய
மாவினுடை மருங்கிற் பொங்க
முடிவில்சுரு திகளெவையு முறையிடவெண்
டலைமாலை முயங்கா விற்க.

13 உயர் தருவெண் கைலைமலை யுச்சியிறோ
ரைந்துமதி யுதையஞ் செய்த
வியல்பதெனும் படிவதன மிலங்கவருண்
மடைதிறந்தா லெனவி சால
நயனமலர் பொலியவிரு நாற்புயமுங்
குலகிரிக ணடுங்கி நாணச்
செயவலிமை யொடுததும்பித் திரண்டோங்கப்
பரிபுரங்க டிருத்தாண் மின்ன.

14 அந்தரதுந் துபிமுழங்க வமரர்பிரான்
கவரிபுடை யசைத்துப் போற்ற
வந்தணுகி நிதிக்கோமான் மதிக்கவிகை
தாங்கநெடு வருணன் வாயு
விந்தைநவ மணிச்சிவிறி வீசிடப்பற்
பலவிருதும் விண்மீ தோங்கச்
சிந்தை மகிழ் வொடுதொழுது திசைமுகன்பொற்
காளாஞ்சி செங்கை யேந்த.

15 மழையனைய திருமேனி மாதவன்கட்
டியங்கூறி வழுத்திச் செல்லப்
பழையமறை தும்புருநா ரதர்பாட
வரம்பையர்கள் பரத மாடத்

தழைபுதிய பரிமளசீ தளமலர்க
ளுய்ச்சுரர்கந் தருவர் நாகர்
விழைமவுன சித்தர்முத்தர் விஞ்சையரே
னையரெவரு மிடைந்து போற்ற

16 அருளினகத் தீசுர நாயகனெதிர்வந்
திடுதலுமகண் டசல மீது
மருவியமெய்த் தவக்குருவ மாமுனிவ
னெழுந்து துள்ளி வணங்கித்தாழ்த்
திருமுடியிற் கரங்குவித்துத் தேகமெலாம்
புளகரும்பச் செழும்பூங் கஞ்ச
விருநயனப் புனல்பாய விதயநெகிழ்ந்
திடத்தொழுதங் கேத்தி னின்றான்.

கலிவிருத்தம்.

17 மலரடிதொ ழுங்குருவ மாமுனியை நோக்கி
னிலவணிசெ ழும்பவள நீள்சடைம கேச
னுலகினுயர் னின்றவமு வந்தனமு னக்கிங்
கிலகியவி ருப்பெவனி சைத்திடுக வென்றான்.

18 வரதனிது கூறுதலு மாமுனிவ னன்றோன்
சரணநளி னந்தொழுது சாமியடி யேனிற்
பரவுமியல் பிற்றடைபடா தொழுகி மேலாம்
விரதநெறி னின்றுகதி மேலவரு மென்றான்.

19 மாதவனயப் பினைமகிழ்ந்து விடைவல்லோன்
பூதர மிதற்கொரு புடைக்குண திசைக்கண்
மேதகு கணேசுர புரத்தினிது மேவி
யேதமில் குணத்தினமை யேத்துதி பணிந்தே.

20 நின்னதுபொ ருட்டொருநெ டும்புனித தீர்த்த
மன்னுநம தாலயம ருங்குவட கீழ்பால்

அன்னதிடை மூழ்கிநமை யர்ச்சனைபு ரிந்தே
நன்னெறிவி ழைத்தமர்தி ஞானமதி வல்லோய்.

21 இவ்வகைந டத்திவரி னெண்ணியவை யெல்லாம்
அவ்வகைப லிக்குமஃ தன்றியும னத்திற்
கவ்வையணு காதுகதி கைவருமெனத் தான்
செவ்வருளி ஞேதியிறை சேணிடை மறைந்தான்.

கலிநிலைத்துறை.

22 கருணை யாலிது கழறிமுக் கட்பெருங் கடவுள்
பெருமை வானவர் சூழ்தரச் சென்றதன் பின்னர்க்
குருவ மாமுனி யுய்ந்துளே னென்றுளங் குளிர்ந்து
சுருதி நூன்முறை யன்றுதொட் டிவைசெயத் துணிந்தான்.

23 விடிவ தற்குமுன் னெழுந்துநீ ராடிநூல் விதியாற்
கடிதி னிற்புரி கடனெலா முடித்துவற் கலைதான்
வடிவு டைச்சிறு மருங்குடுத் துயர்ந்தசின் மயவெண்
பொடித ரித்திறை விழிமணி யிடந்தொறும் பூண்டு.

24 சிந்தை யூடெழுத் தைந்தையும் பதித்துருச் செபித்து
முந்தை மாதவ வணியெலா முறைமுறை தாங்கு
விந்தை தீர்கிரி நீங்கியத் துடிசையி னேர்போய்
யெந்தை கோவில்புக் கிறைஞ்சியர்ச் சித்துவாழ்த் தெடுத்தான்.

25 எம்மை யானகத் தீசுரன் றனையுமவ் விறைபா
லம்மை நாயகச் செல்வியை யுந்தொழு தருள்பெற்
றும்மை மாதவ முயர்முனி மகிழ்பொழு தாங்கோர்
செம்மை நீர்நெடுந் தீர்த்தமெய் தியதரன் செயலால்

26 கயிலை யங்கிரி மிசையெழு திங்களுங் கனிவு
பயிலு மன்பினிற் றிரண்டொரு புனலதாய்ப் பாந்த
டுயில்செ ழுஞ்சடைச் சுயம்புவி னருட்படி சுடர்பொன்
னெயில்வ ளைந்தமங் கிரத்தகத் தெழுந்திலங் கியதே.

27 உருக்கு றைந்துளோர்க் கவைகளுண் டாக்குவ துடற்கட்
செருக்கு றும்பிணி தீர்ப்பது சிறந்திகழ்த் துவது
கருக்கொ டும்பவங் களைவது கனிவுநல் குவது
தருக்கை யிந்திரன் பதத்தினு மமைப்பதத் தடமே.

28 மனநெ டுந்துயர் வறுமைக டவிர்ப்பது மயக்கஞ்
சினமு திர்ந்தகா மந்தணித் தறிவுதேற் றுவது
கனவி னும்பகை காட்டிடாத் திடத்தது கதித்த
தனத னும்பணி செல்வமுந் தருவதத் தடமே.

29 சிவமெ லாமெனத் தெளிப்பது திசையெலாந் தெரிய
நவமெ லாம்விளைத் திடுவது நலமெலா நல்கி
யவமெ லாமொழிப் பதுவயி ராக்கிய மகலாத்
தவமெ லாம்பெறத் தகவெலாம் புணர்ப்பதத் தடமே.

30 வேண்டு கின்றமற் றெவற்றையும் விரைந்துநல் குவது
நீண்டு யர்ந்தபங் கயமுதன் மலர்நிரம் புவது
சேண்டு லங்கொளி மணிவளை திரண்டொதுங் குவது
தாண்டு வெண்டிரைப் புனலது சீதியதத் தடமே.

31 வலனெ லாநிறை வானினும் புவியினு மலிந்த
தலனெ லாமுயர் நதியெலாந் தவமெலாந் தரும
நலனெ லாநெறி நடையெலா முறைமுறை நல்கும்
பலனெ லாங்கணத் தருள்வதத் தடம்படி பவர்க்கே.

32 அன்ன தாகிய தீர்த்தமங் கமர்தரு மமலன்
றன்ன தாகிய சந்நதிக் கிடப்புறந் தழைக்க
வென்ன தாகிய தவப்பய னிதுவென விறைஞ்சி
முன்ன தாகிய வதனைவாழ்த் தெடுத்தனன் முனிவன்.

33 தினந்தொ றும்புகழ் திகழுமத் தீர்த்தமே படிந்து
மனங்க னிந்துமுக் கணனையம் பிகையொடு வணங்கி
யினந்த ரும்பல மலர்கடூய் வணக்கியிம் முறையி
னனந்த னின்றுதாங் கவனிமீ தொழுகின னறவோன்.

34 தலம திற்சிவ பூசையுந் தன துமா தவமும்
நலனு றப்புரிந் தொழுகுமம் முனிவனோர் நாளின்
மலர்க டிக்கைமா லிசைமுடி யரனடி வணங்கிப்
பலவ கைத்துதி தொடுத்தவின் றினையன பகர்ந்தான்.

35 மைய நீரடி யவர்க்கெளி யவனென மறைகூ
றைய வேழையே னினதுகூத் தினில்விருப் பானே
னுய்யு மாறருள் புரிந்திட வேண்டுமென் றுருகிக்
கையி னுற்பினுந் தொழுதுதாழ்ந் தேத்தினன் களிப்பால்.

36 அன்பர் சிந்தனைப் படிவரு மூர்த்தியா தலினற்
பொன்ப டர்ந்தபூண் முலையுமை பங்குடைப் புனிதன்
றுன்ப மின்றிய முனிவனை மகிழ்ந்தருள் சுரந்தங்
கின்ப விங்கித நடமிடத் திருவுள மிசைந்தான்

37 படியு மாகமுந் துதித்திட மதிப்பிறை பணிசேர்
முடியு நான்மறை நூபுரஞ் சூழ்ந்தொலி முழங்கு
மடியு மாகவக் கோவண வுடையுநீ டங்கைத்
துடியு மானுநன் மழுவுமாய்த் தோன்றினன் சுயம்பு.

38 தொல்லை நாளிரு துறவிக டொழுதிடத் தூய்தாந்
தில்லை மாமணி மன்றுளா டியதனிச் செல்வன்
வல்லை நேர்வெளி வந்துதற் புகழ்முனி மனத்தி
னெல்லை தீர்மகிழ் வெய்திடும் படிநட மிடுவான்.

39 தாரு காடவித் தவமுனி மடந்தையர் தளர்ந்து
பேர வாவுற வன்றணி பெருமித வேடம்
பாரெ லாமதித் திடக்கொடு நவமணி மதித்த
சீரு லாஞ்சின கரச்சபா மண்டபஞ் சேர்ந்து.

40 வடிவு டைக்கர மசைத்தில கெங்கணு மயங்கத்
துடிமு ழக்கியுள் ளானகத் தின்னிசை தொடர
வடிபெ யர்த்தவின் றாடினன் முகூர்த்தமொன் றமலன்
கடிம லர்த்திர டுய்த்தொழு திருடியுங் களித்தான்.

41 அடிய னேன்பொருட் டாடினை போதுநின் றருள்கக்
கொடிய காலனைக் குமைத்துளோ யெனச்கரங் கூப்பி
நெடிய மாதவன் வேண்ட லு நடமதை நிறுத்தி
யொடிவி லாவர முனிக்களித் திலிங்கமுற் றுறைந்தான்.

42 தொன்மை நீதியாற் குருவமா முனிதினந் தோறும்
பன்மை நீங்கிய பான்மைமா தேவனைப் பணிந்தும்
பொன்மை வார்முலைப் பூவையம் பிகைபதம் புகழ்ந்துந்
தன்மை யாலுயர் வரம்பெறீஇத் தவம்புரிந் தமர்ந்தான்.

43 முடிவ ரும்பிரான் றுடியதிர்த் தாடிய முறையாற்
றுடிசை யம்பதி யாயதத் தொன்னகர் துறைநூற்
படிப யின்றுள குருவமா முனியமா பண்பான்
மடிவி கந்தவன் னவன்பெயர் படைத்தவம் மலையே.

44 கருவ மாறனைப் பொடித்தகண் ணுதல்சின கரத்தி
னருக தாகிய தீர்த்தமும் வரன்முறை யதனாற்
குருவ மாமுனி தீர்த்தமென் பெயர்கொடு குலவுந்
தருவெ லாமலி நைமிச வனப்பெருந் தவத்தீர்

குருவவிருடி பூசைச் சருக்கம்

முற்றும்

ஆகப்பாக்கள் 385.

சந்திரார்ச்சனைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

1 ஆதி நாளினி லப்பெருந் தலத்தினை யணுகிப்
பூதி தோய்திரு மேனியன் பொன்னடி போற்றி
மாதி ஞலயர் மதிபவ மொழித்தமை வகுப்பாங்
காதி ஞலது கேண்மின்முக் காதலுங் களைந்தீர்.

2 கலைகள் பற்பல பெற்றுளான் கடவுளர் பலரு
நிலைப டைத்துவாழ்ந் திடவமு தருள்பவ னேடி
யலைக டற்றுயி லரியரன் முதவினே ரறியாத்
தலைவ னற்புத முடியில்வீற் றிருக்குமெய்த் தவத்தோன்.

3 தருவுந் தேனுவு மணியுநன் னிதியமுஞ் சலசத்
திருவுந் தோன்றுபாற் கடலிடை யமுதுடன் செனித்தோன்
வெருவுங் கூற்றுறழ் விழியிரு பதினெழு மின்னார்
மருவும் பானித களபசி தளநெடு மார்பன்.

4 எண்ணி னுந்தொலை யாத்தவ வத்திரி யென்பான்
கண்ணி னுங்கனன் முகத்தினு முதித்துளான் கடல்சூழ்
மண்ணி னும்பல திசையினும் பகலவன் வலஞ்சூழ்
விண்ணி னும்பிறி தொப்பிலா னெவரினு மேலான்.

5 ஆய திங்கள்வா னவனொரு நாண்மதி யயர்ந்து
தூய தங்குரு பனைமுலைத் துணைகடோய்ந் தமையான்
மேய வெம்பழி மீதெழப் பிறர்நக வெள்கித்
தீய டைந்ததோர் பெருமகினுங் கனாந்தனன் சிந்தை.

6 எவனி னிப்புரி குவதிதற் கென்றுளத் தெண்ணி
யவன லக்கணுற் றப்பொழு தவற்கெதி ராகப்
புவன முற்றுநற் புகழினை நாட்டிய புனிதத்
தவமு னிப்பெறு நாரத மாமுனி சார்ந்தான்.

7 அன்ன மாமுனி யம்புலிச் செல்வன தருகுற்
றென்ன வாறுநீ யிங்ஙனந் துயருளந் திருத்தல்
பன்ன லாவதோ வல்லதோ வென்றமுற் பரவி
தன்ன தாயசெய் திகளெலா முணர்த்தினன் றனித்து

8 மதியின் வாய்மையால் வகையறி மகதியாழ் வல்லோன்
விதியி ஞனிகழ்ந் துளதினி மெலிவதி லென்னும்
அதிர்ம கோததி யகத்தமு துடனவ தரித்த
கதிர்கொள் சோமவின் னலைவிடு கெனவவன் கழறும்.

9 வழித ருஞ்சுவை யமுதுற ழின்னிசை வல்லோன்
இழிவு றுஞ்செய லறிகிலா தெளியனே னேற்றப்
பழித விர்த்திடு பரிசருள் புரிகெனப் பழிச்சி
யொழிவ ருங்கலா நிதியினு வலுமவ னுரைப்பான்.

10 மூடு கின்றவெம் பனித்திரள் கதிரவன் முகங்கண்
டோடு கின்றமை போற்சிவ பூசையா லுடைந்து
நீடு கின்றபா தகமெலா மிமைப்பிடை நீங்கும்
வாடு கின்றதென் மற்றது கேளென வகுத்தான்.

11 ஆவ ருந்திரை யுவரிசூழ் புவிமிசைத் தூய
நாவ லம்பெருந் தீவிடைக் கொங்குநன் னாட்டி
லோவ ரும்பர சிவதல மொன்றுள துயர்ந்து
தேவ ரும்பிறர் யாவரும் பணிந்திடத் திகழும்.

12 அத்த லத்தினி லுளமகத் துவமவ னன்றி
யெத்த லத்தினு மில்லைமற் றதுசொலற் கெளிதோ
பத்த ருக்கிடர் தீர்த்தருள் புரிவது பரம
முத்தர் சித்தமே யொத்தது முத்திநல் குவதே.

13 அற்பு தப்பிர ணவவடி வாயுயர்ந் தரனைக்
கற்பு மிக்கவம் பிகையொடு தரிப்பதெக் காலும்
பொற்பு றப்பொலி வதுபவ வினையெலாம் போக்கி
நற்பு லத்தினை நல்குவ தன்னெடு நகரே.

14 படர்யு கந்தொறும் பல்பெயர் படைக்குமப் பதியின்
குடபு லந்தனிற் குன்றமொன் றுளததுகூறின்
வடநெ டுங்கிரி மந்தரங் கைலையெவ் வரையுந்
தொடரு மன்பினிற் றுதித்திடக் கதித்துவிண் டொடுமால்.

15 தருக்கள் பற்பல தழைப்பது தடஞ்சுனை நதியிப்
பெருக்க முற்றது பிழைபவ மொழிப்பது பெரியோர்
நெருக்க மிக்கது நிதியது மணியது நெடிய
மருக்க தித்ததண் டலைபுடை சூழ்வதம் மலையே.

16 தலங்க ணேசுர புரமெனும் பெயரதத் தலத்தி
னிலங்கு மூர்த்தியுங் கணேசுர நாதனே யிறைவி
நலங்கொள் கோமள வல்லியாங் குடதிசை ஞாங்கர்
அலங்கு நீர்நெடு வரைசதுர்ப் புயாசல மாமால்.

17 போற்று மச்சதுர்ப் புயாசல மணைந்துதண் புனறோய்ந்
தேற்று பத்தியி னொடுகணே சுரபுரத் திருந்த
நீற்று நெற்றிகாட் டத்தனை நீவிதந் தொழுதான்
மாற்று மிப்பவம் வரங்களும் வளம்பல வழங்கும்.

18 ஆகை யாலவ ணடைந்தது புரிதியென் றறைந்து
வாகை யாழ்முனி யெழுந்துதன் னிருக்கைபோய் வதிந்தான்
பாகை நேர்மொழி யுரோகணி கேள்வனப் படியே
யோகை யாலுயர் சதுர்ப்புயா சலங்கடி துற்றான்.

19 வண்டு சூழ்பொழிற் சதுர்ப்புயா சலவள மனைத்துங்
கண்டு வான்மதிச் செல்வனங் குலவுபக் காலை
விண்டு தேடிய பதத்தின னருளினன் மேன்மை
கொண்டு தோன்றிய தோர்நதி திரைமணி கொழிக்க

20 நீடி வானளா வியதடங் குவட்டினென் னிலமு
நாடி நாடொறும் புகழ்தரப் பெருகுமந் நதிகண்
டாடி னானதி லாரண விதிதழீஇ யமரர்
வாடி டாவகை யருந்துதந் திருந்ததண் மதிக்கோன்

21 நதிந றும்புனல் படிந்தெழுந் தாரண நவின்ற
விதிய மைந்துசெய் வனவெலா முடித்ததி விரைவிற்
கதிர்பொ லிந்துள கலாநிதி வானவன் கனக
மதில்வ ளைந்திடு துடிசைமா நகரிடை வந்தான்.

22 வருகு பேரனவ் வயிற்பொலி சினகர மருவி
யுருவி னனுயர் கோமள வல்லியோ டுறைந்த
சுருதி நாயகன் றன்னைமும் முறைவலஞ் சூழ்ந்து
பெருகு ஞானமன் றாடிய பதமலர் பேணி.

23 தாழ்ந்தெ ழுந்துமீன் றஞ்சலி புரிந்தருச் சனைக
ளாழ்ந்த வன்பொடு முடித்துட லிடைப்புள கரும்ப
வாழ்ந்த கோமள வல்லியோ டிறைவனை வழுத்திச்
சூழ்ந்த தாரகா பதியொழு கினன்றினந் தோறும்.

24 பலதி னங்களிப் பான்மை யினொழுகலும் பரமன்
மலர்த ருந்திரு வருளினாற் பெரும்பவ மாறி
புலவு தண்கதிர் வானவன் றன்னுல குற்றான்
புலன டங்கவென் றுளங்குவிந் தருந்தவம் புரிவீர்.

25 வளர்ச துர்ப்புயா சலத்தினன் றுடுபதி மருவி
யுளம திததுமூழ் குதலினங் குதித்தவா றுலகிற்
றளர்வொ ழிப்பதோர் சந்திர நதியெனத் தழைத்த
திளமை மிக்குளாள் பங்கனை யேத்துத லொழியீர்.

சந்திரார்ச்சனைச் சருக்கம்

முற்றும்

ஆகப்பாக்கள் 410.

சுந்திரமூர்த்தி பூசனைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

1 இன்னு மத்தலத் தனேகர்பூ சித்தன ரெனினு
முன்னு மெய்த்திருத் தொண்டருட் சுந்தர மூர்த்தி
துன்னு பத்தியிற் றுதித்தமை யெடுத்தினிச் சொல்வா
மன்னு முத்தியின் மனஞ்செலுத் தியதவ வலியீர்.

2 மதியு மன்புமுண் மையும்பொறு மையும்பெரு மையும்பண்
ணிதியு மின்பமு நித்திய வேள்வியு நெறியுங்
கதித ருந்தவ குணங்களு மலிந்திடக் கவினு
நதிவ ளம்புனை திருமுனைப் பாடிநன் னாடு

3 சுவைமு திர்ந்தன சுருதியு மாகமத் தொகையு
மவைவி ளைந்தவா றங்கமும் புராணமு மருநூ
லெவையு மின்புற வியல்வது நிகரில தென்று
நவைத விர்த்தொளிர் திருமுனைப் பாடிநன் னாடு.

4 அலர்த டம்பொழிற் றிருமுனைப் பாடிநா டாய
குலம டந்தைதன் குளிர்கதிர் முகத்திடைக் குலவுந்
திலக மென்றுல கேத்திடப் பொலிவது சிறந்த
நலமெ டுந்திரு நாவலூ ரெனுமொரு நகரம்.

5 அந்த மாநக ரமலவே தியர்குல மதனி
லெந்த மேன்மையு மிசைந்துள சடையனார்க் கின்பச்
சந்த வாணகைக் கற்புயர் ஞானியார் தம்பான்
மைந்த ராயவ தரித்தர னருட்படி வளர்ந்தோர்.

6 உயரு நம்பியா ரூரரென் றொருபெய ருடையோர்
நயன பங்கயப் பரவைசங் கிலியெனு நல்லார்
குயத லம்பிரா னருண்முறை தழுவுநற் குணத்தோர்
தயவு மன்புமெய்த் தருமமு முருவெனத் தக்கார்.

7 அரியு நான்முகத் தவனுமன் றடிமுடி யறியாத்
துரிய ஞானமெய்ச் சோதியும் பரவைபாற் றூது
பிரிய மோடுசென் றிசைத்திடப் பெருப்புனன் மடுவூ
டுரிய தாயவம் முதலைவாய்ப் பிள்ளைமீட் டுதிக்க

8 ஆறு மன்றிடை வழிவிடக் கடவுள்வெள் ளானை
யேறு சென்றெதி ரிறைஞ்சுறச் செங்கலு மினிய
வீறு கொண்டுபொன் னாகிட வியன்றமிழ்ப் பதிகங்
கூறு மன்பினர் சுந்தர ருளத்திது குறித்தார்.

9 மதிய ணிந்தசெஞ் சடைப்பிரான் றலந்தொறு மருவிப்
பதிக மன்பொடு பாடியன் னவனருட் பரிசாற்
கதிந லம்பெறல் வேண்டுமென் றடியர்தங் கணத்தோ
டெதிரி கந்தவச் செந்தமிழ்ச் சுந்தர ரெழுந்தார்.

10 உளங்க ளிங்தெழுந் தருளிய நம்பியா ரூரர்
களங்க நெஞ்சினர் காணொ மதிமுடிக் கடவுள்
வளங்க லந்ததண் ணருள்சுரந் திடவவண் வதிந்து
விளங்கு கின்றமெய்த் தலம்பல வழுத்துவான் விரைந்தார்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

11 கனநாவ லூர்கடவூர் கழுக்குன்றங்
கலயநல்லூர் கச்சூ ராரூர்
புனவாயல் வெண்காடா லங்காடு
பனங்காட்டூர் புத்தூர் நீடூர்
பனையூர்கா கீச்சரங்கே தீச்சுரங்கே
தாரநனி பள்ளி புன்கூர்
வினைதீர்வஞ் சைக்களநள் ளாறுபூவ
ணந்துறையூர் வெண்ணை நல்லூர்.

12 ஐயாறு வடுதுறைசோற் றுத்துறைகோ
ழிலிவாஞ்சி யங்கா ரோணம்
பொய்யாத விடைமருதூர் காளத்தி
யேகம்பம் புகலூர் கோவல்
கையாத குருகாவூ ரொற்றியூருந்
திருவானைக் காகோ லக்கா
மெய்யார்கற் குடியதிகை மழபாடி
முதுகுன்ற மிளிர்பைஞ் ஞீலி.

13 கழுமலக்கோத் திட்டைவரத் துறையெதிர்கொள்
பாடிவெண்பாக் சங்கா ணப்பேர்
சுழியல்வலம் புரமாத் தூர்கறையூர்
மறைக்காடு தூய வீழி
மிழலைவலி வலமுல்லை வாயல்கழிப்
பாலைமுடி விண்ணோர் போற்றும்
பழுதில்புறம் பயந்திணையூர் வெஞ்சமாக்
கூடல்கருப் பறிய லூரே.

14 மேற்றளிசீ பருப்பதநன் னின்றியூரே
கொடுமுடிதீ வினைத்துன் பத்தை
மாற்றுமுரு கன்பூண்டி மற்றுளபற்
பலதலமு மரபிற் சென்றே
யாற்றினொடு பிறைமுடித்த வமலனடி
தொழுதுதமி ழனந்தம் பாடிப்
போற்றியதற் பின்னர்நெடும் புக்கொழியூ
ரவிநாசி புகுந்து மன்னோ.

15 அவணுறையு மிறைவனல ரடிபரவித்
தமிழ்ப்பதிக வலங்கல் சாத்தி
யுவகையொடு திருவருள்பெற் றுப்பரிய
வப்பதியை யொருவி ஞான
சிவவிரத வடியர்குழாந் திரண்டுமொய்ப்பச்
சுந்தரரிந் திரனொ டொல்க
நவவளமை மலிதுடிசை நன்னகரின்
றிசை நோக்கி நடக்கலுற்றார்.

வேறு.

16 துடிசையம் பதியை நோக்கிச் சுந்தரர் சென்ற காலை
நெடியவின் ணேக்குஞ் சோலை நெருங்கிய வடவி சார்ந்து
கடிமிகக் கொண்டு தேர்ந்து கைலையங் கடவுட் போற்றிக்
கொடி வழி பார்த்துச் சென்றார் கோவணன் றோழன் மாதோ

17 கதிரவன் நுழைய வொண்ணக் காட்டிலே போகுமாறு
நதியணி கடவுட் டோழன் நம்பியா ரூரன் காண
எதிரதியாரு நேரா தெம்பிரான் றன்னை நோக்கித்
துதியெடுத் தியம்பலும்மே தொண்டருக் கெளிய னன்று

18 சொல்லருங் கிராத வேடந் துணைவியுந் தானுங் கொண்டு
மெல்லவே நடந்து வந்து மேதினி புகழ வன்று

ஒல்லுநர் தம்மை நோக்கி யுயங்குத லொழித்தி யென்று
வல்லுரந் தன்னி னல்ல வழிதனைக் காட்டி யாங்கே

19 தொல்வினை தீர்க்கு மூரர் துடிசை யம்பதியி னெல்லை
ஒல்லையே வந்து சேர வும்பருக் கரிய னன்று
வல்லவை யோடும் வானில் மறைதலும் வாகனாழ்ந்து
தொல்மறை பாடியாடித் துடிசையை நண்ணினாரால்.

கலிவிருத்தம்.

20 நண்ணிய சுந்தரர் நயந்து நன்னரிற்
கண்ணிய துடிசையங் கடவுள் கோவில்புக்
கெண்ணிய குருவமா முனிவற் கெய்துமத்
தண்ணிய தடம்புனற் றமரொ டாடியே.

21 புரிவன நெறிமுறை புரிந்து புந்தியிற்
றெரிவரு மைந்தெழுத் தையுஞ்செ வித்துமேற்
பரிவுறு தொண்டர்தம் பக்க மொய்த்திட
வுரியுடை யமலனை யுவந்து நண்ணியே.

22 மும்முறை வலங்கொடு முதல்வன் றாண்மலர்
தம்முடி திகழ்தரத் தாழ்ந்தெழூந்துகைச்
செம்முள ரிகள்குவிந் திடச்சி லிர்ப்பின்மெய்
விம்முற நயனநீர் வெள்ளம் பொங்கவே.

23 கனலிடு மெழுகினுங் கரைந்து தந்திரு
மனனெகிழ் வுறவக மகிழ்வு மீதெழப்
புனலணி சடைமுடிப் புங்க வன்றனை
யினமொடு முறைமுறை யேத்தி னானரோ.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

24 துனிதவிர் துரியா தீதச் சுகசன காதி ஞான
முனிவரர் கருத்தைத் தேற்றி முகிலினந் தவழ்பொற்கோட்டுப்

பனிமலை மடந்தை வாம பாகமுற் றிடம ணாந்து
நனிதிறல் புனைசெவ் வேலை நல்கிய நம்ப போற்றி.

25 விழிதனி லுதித்த வென்றி வீரனை யேவி மேனாட்
பழிபடு தக்கன் சற்றும் பயமிலா தியற்றி னின்ற
கழிபெரு மகஞ்சி தைத்தோர் கணைத்தவன் சிரத்தை மாற்றி
யிழிவுறு தகரின் சென்னி யிசைத்தவெம் மிறைவ போற்றி.

26 படவரா யலைபி ணித்துப் பண்ணவர் கடைந்த ஞான்றக்
கடலினூ டெழுந்து பொங்கிக் கனலையுங் கக்கி நேர்ந்த
விடமெலா மொருங்கு சேர்த்து மிடற்றிடை யடக்கி யிந்தப்
புடவிவா னவைக்கு மச்சம் போக்கிய புனித போற்றி.

27 பதிவுறு மன்பாற் சங்கம் பதுமமென் றுரைக்கா னின்ற
நிதிமுத லாக வின்ப நிறைபெருஞ் செல்வ மெல்லா
மதிமுக மலர்ந்து மேனாண் மரகதன் றனக்கு நல்கி
முதிரருள் சுரந்து காத்த முக்கணெங் கடவுள் போற்றி.

28 கதித்துள முதலு கத்திற் கணேசுர நாத னென்று
மதித்திரண் டாமு கத்தில் வளரகத் தீச னென்று
மதித்தபின் னுகத்தி னண்ணு வுடையகோ னென்று மும்பர்
துதித்திட வமர்ந்து ஞான சுகந்தருந் தூய போற்றி.

29 குணிகிரே தாயுகத்திற் கோமள வல்லி யென்று
மணிதிரே தாயு கத்தி லருந்தவச் செல்வி யென்றும்
நணியமூன் றாமுகத்தி னுயகச் செல்வி யென்றும்
பணிசுரா தியர்து திக்கும் பாவையங் கமர்ந்தாய் போற்றி.

30 பெருமையாய்ச் சிறுமை யாகி பேதமா யபேத மாகி
யருமையா யெளிமை யாகி யாதியா யநாதி யாகிக்
கருமையாய்ச் செம்மை யாகிக் காண்பவாய்க் காணு வாகி
யிருமையா யொருமை யாகி யிலக்கிய வெந்தை போற்றி.

31 திரிகுண மாய்க்கு ணாதி யதீதமாய்த் தெளிவாய் வேறாய்த்
துரிதமா யதற்கப் பாலாய்த் தூரமா யணித்தாய்த் தூய்தாய்ப்
புரிவதாய்க் கருத்தா வாய்ச்செய் பொருளுமாய்ப் பூதமைந்தாய்
விரிசரா சரங்க ளான விமலமா தேவ போற்றி.

கலிவிருத்தம்.

32 என்று பற்பல வின்றுதி கூறுபு
நின்று சித்தநெ கிழ்சுந்த ரர்தமை
யன்று மெச்சிய திர்குரன் றும்மதக்
குன்று ரித்தவெங் கோனிஃ துணர்த்தினன்.

33 தென்னி சைந்தசெ ழுந்தமிழ்ச் சுந்தர
நின்னி னன்பரிந் நீணிலத் தில்லையா
லன்ன முண்டிங்க யர்வுயிர்த் தன்னதின்
பின்னர் நின்செயல் பேணுசென் றேதியே.

34 அருள்வ ளங்கலு மத்தமிழ்ச் சுந்தர
னிருபுயம் புழுகெய்தம ணங்களித்
துருகு மன்பினு றைந்தன ரும்பர் சூழ்
தரும ரன்றிருச் சன்னிதி முன்னரோ.

35 அருளி நப்பன தன்பின ருகுசூழ்
தருக ணங்கட மைவிழித் திவ்வயின்
மருவு சுந்தர ணாதிமற் றியாவர்க்குந்
திருவி ருந்தவை செய்கவென் றேவினன்.

36 நன்று நன்றென ஞானக ணாதிபர்
மன்று ளாடிம லர்ப்பதந் தாழ்ந்தெழீஇச்
சென்று மற்றவன் சீருளான் மயல்
வென்ற வாற்குவி ருந்திடன் மேயினர்.

37 ததிபொ ரிந்தன சர்க்கரை பெய்தன
முதிரை தந்தன முற்றிழு துய்த்தன
கொதிந றும்பயங் கூட்டிச்ச மைத்தன
வெதிரி கந்தன வெண்ணில வன்னமே.

38 கடிய தானமுட் கானமு ருங்கையி
னெடிய காயட காதிய நெய் சுவைப்
பொடிவி ராயபொ ரித்தபு ளிக்கின
முடிவி லாதமு திர்கறி பாகரோ.

39 சுதையி னுஞ்சுவை தோய்ந்திடு பாய்ச
மதிர சம்பணி காரம னேகர
முதிர்கு ளஞ்செறி மோதக மாதிய
பதம மைந்துள பல்சிற்று ணவுமே.

40 இன்ன வாறவ ணெய்திய போனகஞ்
சொன்ன நூன்முறை சுந்தர ராதியோர்க்
கன்ன நாளின மிழ்தின ருத்தினார்
நன்னர் கூறிமெஞ் ஞானக ணேசரே.

41 அனநு கர்ந்தபி னன்புறு பாகிலை
வனந றுந்துணர் வாசனை யாதிமற்
றனைய வுந்தர வேற்றும கிழ்ந்தனர்
வினைய சுந்தரர் வேறுற்று ளாரொடும்.

42 மீட்டு மன்புவி னைந்துந டத்திடப்
பாட்டு யர்ந்திடு பைந்தமிழ்ச் சுந்தரர்
பூட்டு கொன்றைச் சுயம்புவின் முன்புபோய்
மாட்டு நின்றுவ ணங்கிவ ழுத்துவான்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

43 மருந்திட்ட மென்மொழியு மதிமுகமுங்
கனிவாயும் வடிவேற் கண்ணு

முருந்திட்ட வெண்ணகையு முகிற்குழலும்
பரியளப்பூண் முலையுந் தாங்கி
யிருந்திட்ட வுமைதழுவு மெங்கோவே
யெளியேனை யினிது கூவி
யிருந்திட்ட நின்பெருமை வேதமுந்தே
றுவெனின்யான் விளம்பற் பாற்றோ.

44 எண்ணரிய வெவ்வுலகு மெவ்வுயிருந்
தன்னிடத்தே யிருந்து தோன்றத்
தண்ணளியின் மவுனவசோ சரவிசுவ
சுருபமதாய்த் தழைத்து நின்ற
பெண்ணமுது நின்னிடமே பெறுவளெனி
னுனதியல்பார் பேச வல்லார்
வண்ணமணி மாடநெடு மதிற்றுடிசைச்
கோவில்கொண்டு வளர்பி ரானே.

45 இருவ்வினையி னிவ்வுடல மெடுத்தேனைத்
தடுத்தாட்கொண் டினிது காத்தாய்
கருதியவை யெவையவையக் கணத்தேநேர்ந்
தளித்துநின்றாய் கடைய னேற்குப்
பொருபசியி னொடுபவமும் போயொழியத்
தூயமுதிப் பொழுது நீயிட்
டுருளினைநின் றனக்கினிநா னாற்றுவதெக்
கைம்மாறோ வறியே னெந்தாய்.

46 எனநெடிது துதித்தருள்பெற் றிறைவனிடத்
தினில்விடைகொண் டின்ப மோங்கச்
சினகரம தொருவியன்பர் திரள்சூழத்
தாரைதிருச் சின்ன மார்ப்பப்
பனவர்குல திலகனெழுந் தாதிபுரிப்
பட்டீசர் பதஞ்சே விப்பான்

மனவுறுதி யொடுமுடுகி வதனமுழு
மதிபொலிய வழிச்சென் றூரால்.

47 இசைகெழுசுந் தரர்க்குவிருந் திட்டமையால்
விருந்தீச னெனவோர் நாமந்
திசைமுழுது முணர்தரவச் சிவபெருமாற்
கெய்தியது செங்கை கூப்பிச்
சுசிமுறையி னொடுவிசுவ சொருபவுமை
யிடத்தவெனச் சொலியத் தொண்டர்
சசிதரனை வழுத்தியதால் விசுவநாயகியெனும்
பேர் தரித்தா ளம்மை.

48 இவையறிந்து கோடிரென விருடிகட்குச்
சூதனெடுத் தியம்ப வன்னோர்
சுவைமுதிர்ந்த கடலமிர்தந் துய்த்தாரிற்
களித்துமுடி துளக்கி யின்னு
நவைதவிர்ந்த வினையதல மகிமையுள
தேலவையும் நவில்கென் றேத்தச்
சிவை யிடங்கொண் டவன்றுடிசைச்
சீர்த்தியையம் மூர்த்திபின்னுந் தெரிவிப்பானுல்.

சுந்திர மூர்த்தி பூசனைச்சருக்கம்

முற்றும்

ஆகப்பாக்கள் 458.

வச்சிரவாகு பாவ விமோசனச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

1 பூத லத்திற்க ணேச்சுரர் பெருமையார் புகல்வார்
பாத கத்தொழில் வேடனு மனையதொல் பதிவந்
தேத மற்றன னென்னலு முணர்த்துகென் றேத்திச்
சூத னைத்துற வோர்தொழ வவனிது சொல்வான்.

2 மதிக்கு நம்புவி வளம்படைத் துள்ளதோ வலாரி
யுதித்தி டுந்தல மறிந்திவண் வருதுமென் றுறத்துக்
குதித்தெ ழுந்தன போற்றுறை தொறுமணி கொழிக்கு
நதிப்பெ ரும்புனல் வாளைபாய் மகதநன் னாடன்.

3 கந்த ரத்தினுக் குங்கொடை பயிற்றிய கரத்தான்
மந்த ரத்தையும் பழித்தகன் றுயர்ந்தபொன் மார்ப
னந்த ரத்தெழு மதிச்செழுங் கவிகையா னதிக
சுந்த ரத்தின்மன் மதனையு மிகந்தவுத் துங்கன்.

4 முதிர்செ ழுங்கலை முழுமதி தொழுதகு முகத்தான்
புதிய குங்கும களபகே யூரதிண் புயத்தான்
கதிர்த தும்பிய நவமணிக் கனகவா பரண
னதிர்த ருங்கழ லிலங்குதா ளரசர்கட் கரசன்.

5 கலைவி ரம்பிய கேள்வியி னுயர்ந்துளான் கருதார்
மலைவ னந்தொறு மறைந்திடப் பொருதிறல் வலியான்
அலைநெ டுங்கடலனையபல் படையினா னறத்தின்
னிலைப யின்றசெங் கோலினா னளப்பரு நீதியான்.

6 கூற்றி னுங்கொலை பயின்றுறை குற்றுடை வாளன்
பாற்றி னஞ்சுழல் புலால்கமழ் பரிதிவேற் படையான்

போற்றி யெண்டிசை யிறைதர முறைபுரி புகழான்
மேற்றி சழ்ந்தபொன் முடியினா னெவரினு மிக்கோன்.

7 மன்னு பானுவின் குலத்துணன் வச்சிர வாகு
வென்னு நாமகன் னிலங்கிய வேந்தனிந் திரன்போற்
றுன்னு கேசரி சுமந்தபீ டிகைமிசை தோன்றிப்
பன்னு கேள்வியர் சூழ்தரப் படிபுரந் திருந்தான்.

8 சுரத மங்கைய ராடலும் பாடலுந் துவன்றப்
பரவு மந்தணர் வாழ்த்தமற் றவரெலாம் பணியத்
தரள மண்டபத் தமர்ந்துதொன் முறைபுரி தரும
வரச னங்கொரு ஞான்றுவேட் டையில்விருப் பானான்.

9 மடங்க லாதன மிழிந்துதன் மந்திரத் தெய்தித்
திடங்கொள் வேறொரு சித்திரத் துகிலிடை சேர்த்து
விடங்க ணீடுகச் சசைத்துடை வாள்புடை விசித்துத்
தடங்கு லாவுபொன் மார்பினிற் கவசமுந் தரித்தான்.

10 ஆர மங்கதங் கண்டிகை குண்டல மணைஞான்
வீர கங்கண நவமணி விரலணி பிறவு
நேர ணிந்துபொற் றடமுடி கவித்தொளி நிலவ
வாரி சம்பொரு பதத்ததிர் தொனிக்கழல் வனைந்தான்.

11 குனி நெடுஞ்சிலை யேந்திவெற் புறழ்புயங் குலுங்கத்
துனி வழங்குவெங் கணைநிறை தூணியுந் தூக்கி
நணிவ யங்குகுந் தங்கதை நாந்தகங் கணிச்சி
தனியு டம்பிடி முதற்பல படைகளுந் தரித்தான்.

12 வேட்ட மென்பதற் காமணி யணிந்துடன் விரைந்து
வாட்ட மின்றிய மன்னர்கோன் மந்திர மொருவிச்
சூட்ட லங்கலும் தோண்மலிந் திடப்பணி துலங்கக்
கோட்ட ருங்குவ டனையவிர் தேர்மிசைக் கொண்டான்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

13 தறிசித றும்படி விளைவன
வந்தர தலமுந டுங்குவன
மறிகட லுண்டெழு முகிலும
யர்ந்துள மறுகமு ழுங்குவன
நெறியினெ டும்புவி யதிரவ
னந்தனு நெழியவி யங்குவன
செறிபகை கொன்றன திரள்கொ
டெழுந்தன திடமத குஞ்சரமே.

14 மடநெடு நெஞ்சமு மிணையல
வென்றிட மறுகியி யங்குவன
கடல்வளை யுப்புவி மிசையெழு
நுண்டுகள் ககனத லம்புகுத
நடமிடு பண்பின வடலினு
யர்ந்தன நவையற முந்துவன
சுடரணி கொண்டன வருகுது
வன்றின துரகம னந்தமரோ.

15 தடநெடு வெற்புறழ் கடினபு
யத்தினர் சமரமதிற் பெரியர்
தொடர்தரு பற்பல படையணி
பொற்பினர் தொனிகொளி டிக்குரலர்
விடமுடை யப்பெரு மறலியு
முட்கிட வெகுள்பவர் கச்சுடையர்
வடவையெ னத்திசழ் பொறிநய
னத்தினர் வயவர்கள் சுற்றினரே.

16 சார்தரு மிப்படை சூழம
திக்குடை தாவினி ழற்றிவர

வார்துவ சத்திரள் பீலிசு
    ருட்டிகள் வானமு கட்டுலவ
நேர்துதி கட்டியர் கூறபு
    முற்செல நேயவு வப்பினொடு
சீர்திகழ் வச்சிர வாகுபொருப்
    புறழ் தேரைந டத்தினனே.

17 திடநெடு முரசுக டுடிதவில்
    குழல்பணை சிறுபறை முருடுறுமி
குடமுழ வதிர்குரல் வளைவயிர்
    திமிலைகள் குளிர்திரை பரவுமெழு
கடலினு முறைமுறை குழறிட
    லிறைதரு கதிர்மதி முகமிலக
மடல்விரி பொழில்புனை மகதர்க
    ளதிபதி மணிரத முடுகியதே.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

18 சிகர குங்கும களப கொங்கையர்
    திரள டங்கலு மயலதாய்
மிகவ ருந்திட மகர குண்டல
    மிசைகு லுங்கணி மவுலிதார்
புகழ்த ரும்பத மணிபொ லங்கழல்
    பொலிவு றும்படி முடுகுதேர்
மகதர் தம்பதி நகர்த ணங்தொரு
    வனம டைந்தன னினிதரோ.

19 அடவி புக்கபி னதனிடைப்படு
    வரிவ யப்புலி கரடிமான்
விடமெ னத்தகு சினமதக்கரி
    விளைமு சுத்தடி கலையமா

கடமை மற்கட முயல்கி ருட்டிகள்
கவரி மற்றுள பலவுநேர்
படர்வ ளிப்புகு சருக தொத்துடல்
பதறிடக்கணை சிதறினன்.

20 சிலைதொ டுத்ததி பதிவிடுத்திடு
செறிகனற்கணை மழைகளா
லலைவு பட்டன மிசை
விசைத்தன வடிதெறித்தன வழகுகூர்
தலைக ளற்றன குருதிகக்கின
தசைகள் கொட்டின குடர்கள்சூழ்
குலை வெளித்தள நிலைபதைத்தன
கொடுவ னத்துறை மிருகமே.

21 எயு மிரதந டாவி மகதரி
ராசன் மறலியி னேர்தலான்
மேயு மிருகம னேக வகையுயிர்
வீடி மறுகின கானினூ
டாய பொழுதினில் வாளி
புதைதரு மாகமுடனொரு சூனநீ
டுய தவதுரு வாசமுனிவளர்
சூழல் குறுகிய தோடியே.

கலிவிருத்தம்.

22 கணையினொடு விசைத்தெழுந்து கடிதோடித் தணைந்தவினம்
பிணை துருவி மகதர்பதி பிறைவரிவிற் கொடுவரனு
மிணையரிய துருவாச னெதிர்வடவை யெனச்சீறிப்
பணைமுழவு புயத்தவனை பார்த்தொருசொற் பகர்ந்தனனே.

23 அறக்கொடியோய் நமதுதவ வடவியிதென் றறியாம
லுறக்கணைகள் பலசிதறி யுளமிருக மனைத்துமுயி

ரிறக்கமுடு கிளையதனா லின்றேயின் னாருகெனத்
துறக்கவிபு தரும்பணிசேர்த் துருவாச முனிசபித்தான்.

24 தவமுனியிப் படிமுனிந்து சபித்தலுமுட் டளர்ந்துவெரீஇ
யவனடிதன் முடிசூடி யையவறி யாமையினா
லிவணனாகினேன்பிழையொன்றிதுபொறுத்தல்வேண்டுமென
புவனபதி தொழுதழவப் புனிதனிவை புகலுவனால்.

25 தவறறிது பெரியரிடு சாபமத னாற்சிலநாட்
பவவெயினா யுழன்று பரமசிவ தலமணுகி
யவனுபய பதம்பணியி னகலுமிதென் றிருடிசொலக்
கவலையொடு விருபனன்றே கானகவே டுவனானான்.

26 அன்றுமுதல் வேடுவனா யாருயிர்கொன் றடவிதொறுஞ்
சென்றுகொங்கு நாட்டிலகத் தியகிரிபுக் கதனருகே
நின்றபுன முருங்கைவன நேர்ந்துபசி தாகமெழக்
கன்றியந்த வடகுநெடுங் காய்பறித்துத் தின்றபின்னர்.

27 விதிமுறையாற் றுடிசைநகர் மிளிர்மணிமந் திரம்புகுந்து
மதிமவுலி விருந்தீசன் வளர்விசுவ நாயகிநற்
றுதிமுருக னிவர்சரணந் தொழுதிடலுந் தொல்லைவினை
கதிர்முனிம மெனவொழியக் காவலனா கினனம்மா.

28 பின்னருமங் கவர்சரணம் பெரிதுதொழு துளங்கனிந்து
மன்னவன்முன் போன்மகத வளநாட்டிற் சிலநாளுற்
றன்னநடை யுமைபாகத் தரனருளா லவன்பதம்புக்
கின்னலற வினிதமர்ந்தா னிவையுணர்மி னிருந்தவத்தீர்.

29 இதுகாறு மிந்துநெடுஞ் சடைமுடியா னமர்துடிசைப்
பதிவிரவி விதிமுறையாற் பணிந்தெழுந்து பரமசிவ
கதிபெற்று வாழ்ந்தவர்கள் கணக்கிலையாம் கழறினாமேற்
சதிபதியின் பூசனையால் வரும் பலத்தைச் சாற்றுவோமால்.

வச்சிரவாகு பாவ விமோசனச் சருக்கம்.

முற்றும்

ஆகப்பாக்கள் 487.

சிவபூசைச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1 சுருதிமுற் கலைதொ குத்த துரகமே தாதி யாகத்
தருமமுப் பத்தி ரண்டு தானமூன் றிவற்றை நாளும்
பருவமுற் றியற்றி னோர்க்காம் பலனெலாம் பரமன் றன்னைக்
கருதியர்ச் சித்தோர் சேவை காண்பவர் தமக்கு மெய்தும்.

2 காசிகே தார முன்னுங் காரண தலங்க டம்மிற்
றேசினோ டிருந்து பன்னாட் செய்தவம் பலன்கள் யாவும்
மாசிலா மனத்து டீசன் மலரடி வழுத்தி நீறு
பூசினோர் தமக்கு மெய்து மெனநனி புகலும் வேதம்.

3 களவினை மறவார் பொய்யைக் கனவினு மொழிவார் கள்ளை
யளவற நுகர்வா ரூன்றின் றலைவதே தொழிலாக் கொள்வா
ரிளமுலை மாதரன் றி யிலைக்கதி யென்பா ரேனு
முளமதி லரனை யோர்போ தன்னினு முய்வர் மன்னோ.

4 அகங்கனிந் தமரபக்கத் தட்டமி தன்னி லெண்ணை
சுகந்தரு மிழுதுந் திங்கட் சுடர்முடிக் கடவுட் காட்டின்
மகம்பல புரிந்து ஞான வழிபயின் மறையோர் கட்குப்
பகர்ந்துள முறையிற் கோடி பசுத்தரு பலனுண் டாமால்.

5 கார்த்தில தயில மன்று கமழ்பதத் தினிலு ருக்கி
வார்த்திடு கபிலை நன்னெய் வானவர் வழுத்து முக்கண்
மூர்த்திபொன் முடிமீ தாட்டி முறைபுரி பவர்பல் காலஞ்
சீர்த்திரு வினராயந்தச் சிவபதத் திருந்து வாழ்வார்.

6 திருமலன் றனக்கன் பால்வெண் ணீற்றபி டேகஞ்செய்தோன்
றருநெடுஞ் சுரர்க டம்மிற் சந்திர னாக வாழ்வான்

திருவுளங் கனிவு கூறச் செழுந்தயி ராட்டா னிற்போன்
மருவுறுந் துளபத் தாம மாதவ னாவான் மன்றே.

7 திதியது தன்னி னின்பத் தேனபி டேகஞ் செய்வோன்
மதிதவழ் கைலை மீது வனருருத்திரனே யாவன்
விதிமுறை வழுத்திச் சுத்த மென்புன லபிடே கிப்போன்
றுதிதிகழ் வருணனாகிச் சுகந்திளைத் திருப்பா னன்றே.

8 வரந்தரு சோமவாரம் வைகறை தனில்வ ழுத்திச்
சுரந்துள செருத்தற் றெய்வச் சுரபிநன் குதவு தீம்பால்
கரந்தையம் பவள வேணிக் கண்ணுதற் கபிடேகிப்போன்
பரந்ததொல் வினைய றுத்துப் பரமமுத் தியிற்சேர் வாரால்.

9 அருடரு மமர பக்கத் தட்டமி யாதிவார
மருவுறு தினத்தின் முக்கண் வரதனுக் கிளநீ ராட்டித்
திருவடி பரவா னிற்போன் சிறைச்சுரும் பிமிர்பூந் தெய்வத்
தருநிழ லமரர் போற்றச் சசிபிரா னாகி வாழ்வான்.

10 தரைபுக ழமரபக்கச் சதுர்த்தசி தன்னிற் றூய
விரைகமழ் தயிலந் தேனெய் விளைதரு கருப்பஞ் சாறு
வரைகுனி சிலையாய்க் கொண்ட வள்ளலுக் கபிடே கிப்போன்
நிரைசிகர் பவங்க ளீத்துச் சிவபதத் தினிது வாழ்வான்.

11 கனிவுறு மன்பி னோடுங் கார்த்திகை யெனச்சொன் மாதந்
தனில்வளர் பிறையி னேகா தசியடை வாம தேவற்
கினியபுத் துருக்கு நெய்பா லிசைந்தபி டேகஞ் செய்வோர்
பனிதவிர்த் துறவினோடும் பரகதி யடைந்து வாழ்வார்.

12 வெள்ளெருக் கலரிதும்பை வில்வநா யுருவி வன்னி
யெள்ளலற் றுயர் தருப்பை யெழின்மது மத்த நெய்தற்
றெள்ளிதிற் சொன விவற்றாற் சிவபிரான் றனையர்ச்சிப்போர்
கள்ளிணர்ப் பொழில்சூழ் தெய்வக் கைலைவீற் றிருப்ப ரன்றே.

13 மடுத்தலை தழைத்த நெய்தன் மலர்களா யிரத்தான் மாலை
தொடுத்தரன் றனக்க ணிந்து துதிப்பவ ரெவரென் றாலுங்
கடுத்திடு சீற்றத் துப்பிற் காலனைக் கடிந்து பாசந்
தடுத்துயர் பரம முத்தி சார்வது சரத மன்றே.

14 மலர் கிடைத் திலவேன் முன்னர் வகுத்தவற் றிலைகாய் பல்புல்
குவவனப் பயிரின் பன்னங் கொடுசிவ பூசைசெய்யிற்
பலனளித் திடுமி வற்றைப் பார்க்கினு மிகத்தி யான
நலனுடைத் தென்ப ரென்னு நான்மறை நடையி னின்றோர்.

15 வடுவகி றனைய வொண்கண் மலையிள மயிலோர் பாகக்
கடுமணி மிடற்று வள்ளல் கடுக்கைமா முடியின்மீது
நடுநிசி தனிலோர் மத்த நாண்மலர் சாத்தி னாலு
நெடுநில மதிக்கவின்ப நிறைசிவ பதவி நேரும்.

16 பெற்றுள வன்னை தந்தை பிராமணர் மகவு மாதர்
பற்றுறு பரிக ருப்பப் பசுமுதற் கொன்ற பாவ
முற்றுமெய்ப் பிரதோடத்தின் முக்கணெம் பெருமான் றன்னைச்
சிற்றுணர் வின்றிச் சேவை செயினுமாண் டகலுமன்றே.

17 சுரபிநெய் தயிர்பால் செந்தேன் றூவெணெ கருப்பஞ் சாறு
திரனிள நீர்ப டீரத் தேய்வைபூங் கனிவர்க் கத்தி
னிரதமும் பிரதோ டத்தெம் மிறைவனுக் காட்டு வோர்கள்
வரமுயர் பரமலோகம் மருவிவீற் றிருந்து வாழ்வர்.

18 பற்றெலா மறுத்தீர் கேண்மின் பகர்திர யோதசிக் கட்
கற்றைவார் கதிர்மார்த் தாண்டன் கடல்புகுவ தற்குமுன்பின்
பெற்றதோர் யாமந் தானே பிரதோட கால மென்னச்
சொற்றதா லுலக முய்யச் சுருதியின் றுருதி யம்மா.

19 தெளிதரு மனத்த ராகித் திகழ் சதுர்த் தசியினூடு
குளிர்சர மஞ்சரிப்பூங் கொழுந்தினுற் குழுமித் தேனுண்

டளிமுர விதழி யானுக் கர்ச்சனை புரியு மன்பர்
விளிவறு சிவபே ரின்ப வீடுசென் றுறைவ ரன்றே.

20 பழுதகன் றிடவோர் மாதம் பரமன் சன்னதியிற்றூய
விழுதுருக் கிலியதூப மெண்ணெயின் விளக்கிட்டேத்தித்[தெப்
தொழுதுளங் களிப்பப்பெற்றோர் தொல்வினைத் தொடக்கறுத்
பொழுதினிஞ் சிவசாலோகம் பொருந்திவாழ்ந் திடுவர்மாதோ.

21 பாயிர வாகமங்கள் பகர்ந்துள படி வழாமற்
சேயிர வியின்பற் கொன்ற சிற்பரனெதிர் திவாவோ
டேயிர வினுநெய்த் தீப மிடுபவர் சதுர்யு கங்க
ளாயிர முடியுங் காறு மச்சிவ் பதத்தில் வாழ்வார்.

22 மலர்வகை செயல் பறித்திவ் வரன்முறை தொடுத்தல் சாத்தி
யலவணி வேணியானை நெகிழ்ந்து தோத் திரித்தல் கோவி
லலகிடல் மெழுக நீபம மைத்தன்மெய் யடியர் தம்மைப்
பலமுறை போற்ற லென்னப் பத்தியெண் வகைத்தா மன்றே

23 எண்வகைப் பத்தி யென்னு மிவற்றினை யெவர்பெற்றாலு
மண்வயி னனையர் பாவ வாரிதி யெளிதி னீந்தி
விண்வரு மிமையோர் யாரு மிடைந்துவாழ்த் திடவிரைந்து
தண்வளர் கைலாயத்தைச் சார்ந்துவீற் றிருப்பர் மாதோ.

24 மருவில விலத்தின் வீழ்ந்த வரிச்சினை யளிது தைந்த
பருவமி லரும்பா யுள்ள பண்பற மிகமலர்ந்த
பொருபழு துடைய வின்ன பூவொழித் தினிய பூவா
லருள்சிவ பூசை செய்வோ ரடைவரே பரமமுத்தி.

25 சொற்றுள தினங்க டம்மிற் றொகுத்தபன் முறையுந் தேர்ந்து
பொற்றுடி சையினின் றோங்கும் புனிதனைப் பூசித்தன்றோ
முற்றுதி யயன் மால் போகி முதற்சுரர் முனிவர் நாகர்
மற்றுறை பிறரு மேலாம் வரம்பல பெற்று முய்ந்தார்.

26 தவழுதிர் கமலை வாணி சசியு முன் றுடிசை சார்ந்து
குவவிள முலைக் கயற்கட் கோமள வல்லிதன்னை
யுவகையின் வழிபட்டன்றே வுயர்ந்துமாலயன் வலாரி
யிவருற முகங் கவான் பெற் றிருந்தன ருலக மேத்த.

சிவபூசைச் சருக்கம்

முற்றும்

ஆகப்பாக்கள் 513.

வாழ்த்துச் சருக்கம்.

கலிவிருத்தம்.

1 எனத்துடிசை மான்மியத்தை யினிதுவிரித் தெழிற்சூதன்
கனத்ததிரைக் கடலமிழ்திற் கட்டுரைப்பக் களிகூர்ந்து
சினத்தகனை மதனைவென்ற திடசவுன காதியர் நன்
மனத்தினொடு பரமனடி வழுத்திநெடுந் தலத்தமர்ந்தார்.

2 பூமேவு கடல்வாழி புயல்வாழி புவிவாழி
காமேவு சுரர்வாழி கருதுசைவ நெறிவாழி
தேமேவு தமிழ்வாழி சிவதொண்டர் மிகவாழி
மாமேவு துடிசைநகர் வாழியருள் வாழியவே.

3 துடிசைநெடுங் கதையிதனைச் சொலக்கேட்போர் வாசிப்போர்
படியினுணர்ந் தெழுதிவைப்போர் பாடமுற்றோருரைபகர்வோர்
மிடிதவறும்படி துதித்தோர் மிகவாழி யகனுலகில்
வடிவுபெறு குலோத்துங்கன் வாழிசெங்கோல் வாழியவே.

வாழ்த்துச் சருக்கம்

முற்றும்

ஆகப்பாக்கள் 516.

துடிசைப் புராணம் முற்றும்.

சருக்கம், பாயிரமுள்பட 15 பாக்கள்—516.

சிவமயம்.

திருத்துடிசைப் புராணச் சுருக்க வசனம்.

நைமிசச் சருக்கம்.

இலக்குமி நாயகனார் கடைந்த பாற்கடல் அமுதுண்ட தேவர்களும், அந்தணர்களும் நீங்காது பொருந்தி கடம் பாதிய விருக்கமும் அமைந்து வான முகட்டை யளப்பன வாக நிவந்த சோலையை யுடையதுப்; முகிற்குலங்கள் இய மென முழங்க, மயில்களடமாடலும், மான்குருளைக்கிரங்கி வேங்கை பாராட்டலும், யானைக்கன்றினைச் சிங்கம் நட் புக் கோடலும், பருந்துங்கிள்ளையு மொரு பஞ்சரத்திரு த்தலும், எலிக்குலம் அரவின் படத்தொதுங்கி வாழ்தலும், வேங்கைப்பறழ் ஆவின் பாலுண்ணவும், இன்னனபெரு மைகள் வாய்ந்ததும்; வேதகோட்டமும், யாகம்செய் முனி வரர் மந்திரார்த்த வோதையும், பறவைமிருகங்களின் துழ னியும், சிவநாம சங்கீர்த்தன முழக்கும் உடையதும்; கவி க்குலம்மாதவர்க்கு ஏவற்புரியவும், சிவனடியார்களுக்குப் பூங்காவனங்கள் மலரைத் தருதலும், தேவபோகமு மிணை யலவெனத் தன்பாட்டுத் தவம்புரிவோர் பெருமையினை மிகுந்த வளமாகக் கொண்டதுமாயுள்ளது **நைமிசாரண்யம்.** அவ்வாரணியத்தில் சௌனகர் முதலிய முனிவரர் முற்

காலத்தில் வேள்வியொன் றியற்றினர். அக்கால் சூத புராணிகர் வரலும், அவரை எதிர்சென்று வணங்கி இருக் கையிலிருத்திப் பின்னர் எமது தவப்பயின் இன்று பலித்த வென நைமிசாரணிய வாசிகள் அனைவரும் வியந்து, வா ரும், சூதபுராணிகரே! ஸ்காந்தமாகிய புராணசரிதமனை த்தும் நும்மாற்செவியுற்று மலரகிதராயினேம், ஆயினும் பற்பல சிவதலங்களினும் தலம், தீர்த்தம், மூர்த்திகளிற் சிறந்த சிவதலமொன்றுளதாயின் அதனை இன்னே விரித் துரைத்தல் வேண்டும்' என விண்ணப்பம் செய்ய சூதபுரா ணிகரும் சொல்லத் தொடங்கினர்.

மூர்த்திதரிசனச்சருக்கம்.

காசிபர் அங்கிரர், கௌதமர், மார்க்கண்டர், கோசிகர் பரத்துவாசர், அகத்தியர், வாமதேவர், புலத்தியர், வசிட்டர், நாரதர், வியாதர் முதலான தவத்தினர் க்ஷேத்திரயாத்தி ரையை விரும்பி கங்கையாதிய புண்ணிய தீர்த்தங்களிற் படிந்து சிவதலந்தொறும் சென்று, தரிசித்துப் பின்னர் கொங்குநாட்டி லிடத்துத் திருத் துடிசைத்தலத்தை யணுகி, சிவபூசாதிதிரவியங்களுடன் செம்பொன் னாலயத் துட்புகுந்து சுயம்புமூர்த்தியாய் விளங்கும் சிவலிங்கப்பெ ருமானை யருச்சித்து, வலம்வந்து, வணங்கி, விதிமுறையே துதித்து, தந்தந் தவநிலையையுஞ் சித்திநிலையையுங் கைக் கொண்டன ரெனில் அத்தல வியப்பை எம்போலியராற் கூறுமளவின தொன்றோ? அன்றியும் அத்தவர்கள் அச்

சிவாலயத்திடப்பாங்கரில் வதிந்து பூர்ணமதிமுகமும் முல்லைநகையும், செம்பவள வாயும், கரியவழகமும், கருணை நோக்கமும், எண்ணிறந்த வுயிர்களை யீன்றும் தளராதமுலையிணையும், ஏனையசத்திமார்களின் மகுடபந்தியை உராஞ்சும் கிண்கிணி யணிந்த தாளும், எண்ணான்கறம் வளர்த்த செவ்விய கைகளும், உருப்பொலிந்து சோதிசொரூபமாய் விளங்கும் உமாதேவியாரையும், மத்திய சினகாத்துள் மயில்வாகன ரூடராக விளங்கும் முருகக் கடவுளையும் தரிசித்துத் தம் இருக்கையைச் சார்ந்தனர்.

கொங்கேழ் தலத்துமிக்க திருப்பேரையூர்க்கு எல்லைகளான பஞ்சகிரிக்குள் ஒன்றான சத்திகிரி யென்னும் வடசாரலில் வயங்கிய அம்மலையானது முதல்யுகத்தில் **சதுர்ப்புயாசல** மென்றும், அத்தலம் **கணேசுரபுரம்** என்றும், சிவபெருமான் உமாதேவியார் **கணேசுரநாதர்** என்றும் **கோமளவல்லி** யென்றும்; இரண்டாம்யுகத்தில் **அகத்திய நல்லூர்** என்றும் **அகத்தீசர், அருந்தவச் செல்வி** என்றும்; மூன்றாம் யுகத்தில் **கந்தபுரி**யென்றும், **நண்ணவுடையார், நாயகச் செல்வி** என்றும்; கடையுகத்தில் **குருவிருடி வெற்பெ**னவும், **திருத்துறைசை** யெனவும், **விருந்தீசர், விஸ்வநாயகி** எனவும் பெயர்பெறும். அம்மலை இக்காலத்தில் **குருடிமலை** யென வழங்குகிறது. அருணகிரிநாதர் குன்றுதோறாடற்பதிகத்துள் " கருடன் மிசைவிரு......" என்னும் கவியால் உணர்த்தியவாறுணர்க.

கணபதி பூசனைச் சருக்கம்

மனோவாக் காதியாற் றம்மை வந்திப்பவருக்கிடரைத் தவிர்க்கவும், வணங்காதவருக்கு விக்கினங்களைத் தரவும் வல்லோராகிய கணேசுரக்கடவுள் கிருதயுகத்தில் திருத்துடிசைத்தலமடைந்து, சப்தகடல் நீரைத் தாகத்திற்குண்டும், எண்ணிறந்த புவனங்களை யருந்திச் சிறிது உதராக்கினியை அவிக்கவும், அட்டகுல வரைகளைப் பந்தாட்டயர்ந்தும் தாராகணங்களை முத்தணியாகப் பூணவும், வடவாமுகாக்கினியை அவிக்கவும், வளர்க்கவும், எழுமேகத்தை அரைக்கச்சாகவும், சந்திராதித்தர்களைப்பற்றிச் சுழற்றவும் சைவநெறிப்பயிர் தழைப்ப வேலியாயும், செஞ்சிகைகளையுடையனவாய இயமனும் வின்னேனும் உட்கும் சொல்லையும், வீரக்கழல் பூண்டதாளினையும், ஐங்கரன் முருகக்கடவுளையன்றி ஏனையதேவரை வணங்காத நிலையினையுமுடைய சிவகணங்கள் புடைசூழ. அழகிய சினகரத்துள் அமர்ந்த தந்தையும் தாயையும் அன்பொடு வணங்கி அருச்சனை புரிவதற்கேதுவாய் அவ்வாலயத்தின் வடபாங்கரில் ஓர் நதி பெருகி வருமாறு நினைத்தலும், அந்தக்கணமே இருகரைகளிலும் பொன்முதலிய மணிகளைவாரன்றி, அலைகளொதுக்கி சங்கினங்கள் முத்துக்களை யுயிர்ப்ப, தாமரை, குவளை, ஆம்பலாதிய மலர்கள் பூப்ப, சாதாரி, விளரி, கொல்லி இவைபோன்ற பண்கள் பலவாய் வண்டினங்கள் மிழற்ற, சம்பந்தராலிட்ட ஏடு எதிரில் ஏறுவதான வையை நீத்தம்போல் வரால் மீன்களும் சேல் மீன்களும் எதிரே ஏறிச்செல்வதாய்ப் பெருகி குருவிருடி வெற்பின் கண்ணின்றும் எழுந்து விநாயக

தீர்த்தம் எனப் பெயர்கொண்டு, மூழ்குநர் துயர் யாவும் அகற்றி, இயம வாதனையைத் தவிர்த்து, போக மோக்ஷத்தையும் தரப்போந்த அந்நதிப் புனலில் ஐங்கரக்கடவுளும் கணங்களும் படிந்து, நிலாக் கற்றையானவை பவளாசலத்தில் சுற்றிக்கிடந்து வயங்குவன போன்ற வெண்ணீறு புனைந்து உருத்திராக்கமுந்தாங்கி, சிவகணங்கள் தேவதுந்துபியை முழக்கவும், சிலகணங்கள் யாழினை மீட்டவும், சில கணங்கள் ஆலவட்டம் பாவாடைகுஞ்சங்கள் ஏந்தவும் கோவிலிற் சென்று புகுந்து சிவலிங்கப் பெருமானைப் பஞ்ச கௌவியம், நெய், தயிர், பால், தேன், கரும்பிரதம், இளநீர் கந்தம், விபூதி இவைகளால் அபிஷேகம் செய்து நறுமலர் அலங்கல் சாத்தி அளத்தற்கரிய பட்டாடை, அணிகளால் அலங்கரித்துச், சிவபிரானையும் உமாதேவியாரையும் தீப தூபநைவேத்திய உபசாராதிகள் நிரம்பச்செய்து, இதயங் கனிந்து பலவாறு தோத்தரித்து வணங்கி, தங்குறைதீர்ந்து கணங்களோடும் தமது இருக்கையை அடைந்தனர்.

விநாயகக்கடவுள் தருதலால் அந்நதி விநாயகநதி எனவும் கணேச்சுரநதி எனவும் அத்தலம் கணேச்சுரபுரம் எனவும், அவரால் பூசிக்கப்படலால் கணேச்சுர நாதர் எனவும், உமாதேவி கன்னிப் பருவத்தினளாய்க் காட்சி தந்ததால் கோமளவல்லி எனவும் பெயர் வழங்கியது.

அகத்திய பூசனைச் சருக்கம்.

கேண்மின் நைமிசவாசிகளே! தமிழ் மணமும் சந்தன மணமும் கமழ்கின்ற பொதிகை முனிவர் இரண்டாம் யுகத்

தில் சிவபெருமான் விளங்கிய தலந்தொறும் சென்று சேவிக்க நினைந்து பொதிகையை விடுத்து அருமையான சிவ தலங்கள் யாவும் சேவித்துப் பின்னர் பருப்பத வடிவமாயுள்ள தலங்களையும் காண விழைவுற்று சதுரகிரி, திரிகூடம் சோலைமலை, சுவாமிமலை, விராலிமலை, திருக்கழுக்குன்றம், திரிசிரா மலை, திருவாவினன்குடி, வராகமலை, சிவமலை, ஊதிமலை, சென்னிமலை, வடமலை அலகுமலை, கொல்லிமலை, தோகைமலை, திருவருணை, திருத்தணிகை, திருவேங்கடம், அட்டகுல வெற்புக்களில் ஏழு வரைகளையும் தரிசித்துப் பிற்பாடு எட்டாவதான நீலகிரி மலையினைத் தரிசிப்பான் கருதி வந்து கொண்டிருக்கும்போது இடையில் குடகுமலை அடவி சார்ந்தார். அவ்வடவியின் கண் அசமுகியின் பிள்ளைகளான வில்வலன், வாதாபி என்னும் இரண்டு அசுரர்கள் வதிந்து கொண்டு அவ்வழியே ஏகும் முனிவரர்களை உபசரித்து ஏற்று விருந்தூட்டிக் கொலைபுரிந்து வருவதை அறியாதவராய் அவ்வசுரருடைய வஞ்சகமொழிகளை நம்பி அவண் தங்கினர். உடனே வழக்கப்பிரகாரம் வில்வலன் என்னும் அசுரன் ஆடாய் மேய்ந்து கொண்டிருக்கும் தன் தம்பியாகிய வாதாபியைப் பிடித்துக் கொன்று சமைத்து முனிவரர்க்கு விருந்துசெய்தார். முனிவரர்கள் சாப்பிட்டவுடனே வில்வலன் "வாதாபி!" என்று கூப்பிட்டால் "ஏன்" என்று அம் முனிவரர்களுடைய வயிற்றைப் பீறிக்கொண்டு வெளியில் வருவது வழக்கம். பிறகு இருவருமாய்ச் சேர்ந்து கொண்டு வயிறு பீறுண்டு இறந்து கிடக்கும் முனிவரரை விலாப்புடைக்கத் தின்பது வழக்கம். அது போலவே, அகத்திய முனிவர் சாப்பிட்டவுடன் வில்வலன் என்னும் அசுரன் வாதாபியை அழைத்தான். உடனே வாதாபி குமுறிக்கொண்டு

வயிற்றிலிருந்து வெளிப்புறப்பட ஆரம்பிப்பதற்கு முன்ன மே எல்லா சங்கதிகளையும் ஞானதிருட்டியால் அகத்தியர் உணர்ந்து "வாதாபி ஜீரணோபி" என்று விபூதியால் வயிற்றைத் தடவினார். உடனே உள்ளிருக்கும் அசுரன் உயிரிழந்து ஜீரணமாய்விட்டான். இது சங்கதியறிந்த வில்வலன் முனிவரரை எதிர்க்க அவர் அவனைப் பார்த்த மாத்திரத்தில் சாம்பராய்விட்டான். பிறகு குடகு மலையைக் கடந்து நீலகிரி வந்து அங்கிருந்து பஞ்சகிரிகளில் ஒன்றாகிய சத்திகிரியாகிய குருவ விருடிகிரியை அணுகவே அவ்வசுரர்களைக்கொன்ற பாவமானது நிழலைப் போல் முனிவரரை விடாது பற்ற அப்பாவத்தைத் தொலைப்பான் கருதி சமீபத்திலுள்ள மருதவரையை அடைந்து தமது குருவான முருகக்கடவுளைப் பிரார்த்திக்க அவர் "மாணவ! சத்தியின் வடிவான சதுர்ப்புயாசலத்தின் கீழ்பால் சகலபாபத்தையும் நிவிர்த்திசெய்யும் வன்மையுள்ள திருத்துடிசையம்பதி என்னும் க்ஷேத்திரம் ஒன்று உளது. அந்த க்ஷேத்திரத்தின் வடபால் சகல பாபத்தையும் ஜனனமரண துன்பத்தையும் நீக்கும் விநாயக நதியொன்றுளது. அந்நதியிற்படிந்து, அப்பதியின்கண் அம்மையப்பனை விதிமுறை வணங்கி, சகலருக்கும் விக்கினத்தைப் போக்கும் விநாயகப் பெருமானே சகலாபிட்டத்தையும் பெற்றாரென்றால் அப்பதியின் பெருமை கூறற் கெளிதோ? ஆகையால், அப்பதிக்ப் போய் பெருமானையும் பெருமாட்டியையும் முறையால் வணங்கி உன் கொலைப்பாவத்தைப் போக்கிக் கொள்வாய்' என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே அகத்தியனார் தாழ்ந்து வணங்கி விடைபெறறுக்கொண்டு திருத்துடிசையம்பதியைச் சேர்ந்து விநாயகநதியில் மூழ்கி விதிப்படி

நீறணிந்து அம்மையப்பனை விதியால் வணங்கி பன்னாள் அரிய பூசை ஆற்றினர். இப்படியாகத்தவம் புரிந்து வரும் நாளில் சிவராத்திரிப் புண்ணியநாள் அணுக, சதுர்ப்புயா சலத்தின் ஓர்பால் தன்பெயரால் அகத்தியதீர்த்தம் என ஓர் சுனையை உண்டுபண்ணி அதில் விதிப்படி மூழ்கி, திருத் துடிசையம்பதியில் உள்ள கோவிலைத்தம் குழாங்களைக்கொ ண்டு வாழை, கமுகு முதலியவைகளால் அலங்கரிக்கச் செய்து, சிவாலயத்துட் சென்று தோரணபூரண கும்பமா லிகையமைந்த விமானத்தில் அமர்ந்த பரம் பொருளைத் துதித்து, செம்பஞ்சு வெண்பஞ்சுத் திரியால், ஆவினெய்யால் தீபம்பொருத்தி, பஞ்சகௌவியாதிகளால் அபிடேகம் இய ற்றி, ஆகமவிதிப்படி முறை வழாது பூசித்து, பலவாறு நாத்த ழும்புறத் தோத்திரம் செய்து முன்னைநாள் அசமுகியின் புத்திரரான வில்வலன் வாதாபியைக் கொன்றதனாலடைந்த பிரமகத்தி பாபம் யாவும் நீங்கி உடன்போந்தகணங் களோடு திருத்துடிசையம்பதியைவிட்டு நீங்கி, வெள்ளி யங்கிரியை அடைந்து பிரிதிவியாதிய பஞ்சலிங்க மூர்த் திகளையும் தரிசித்துப் பின் அநேக தலங்களையும் தரிசித்துக் கொண்டு பிறகு பொதிகையை அடைந்தனர்.

அகத்தியர் பூசித்த காரணத்தால் 'சதுர்ப்புயாசலம் அகத்தியகிரி யெனவும், அத்தலம் அகத்திய நல்லூர் என வும், பெயர்பெறும் சிவபிரானும் உமாதேவியும் அகத்தீ சுரர் அருந்தவச்செல்வி யென்று பெயர் பெறுவார்கள்.

கந்தமாமுனி பூசைச்சருக்கம்

ஆணவமல பந்தத்தாற் சிமிழ்ப்புற்ற மன அடவியைப் பேருணர் வென்னும் கனலால் தகித்து சதுர்ப்புயாசலத்திற் றவம் புரிவோர்களில் கந்தமாமுனி யென்பவர் துவாபர யுகத்தில் அரியயனும் அளவிடப்படாத பரசிவத்தைப் பூசிக்க முயன்று, அருணோதயத் தெழுந்து, பரிமளச் சுனையில் மூழ்கி, பவவிருளகற்றும் வெண்ணீறு பூசி, உருத்திராக்கமணி யணிந்து, விதிப்படி காலைக்கடன் முடித்து, முருக்கிலை, சுற்றுள தண்டு, கமண்டலப், தருப்பையும் ஏந்தி உதர பந்தன முப்புரிநூல் வயங்க, அமராதியோர் பரவுந் திருத்துடிசைத்தலம் வந்துசேர்ந்து பிறைக்கோட்டினையும், பேழைவயிற்றினையும், மும்மத, நால் வாயினையும், சிறுகட்புகர்முகத்தையுமுடைய பெருமானும், கடனீர் முழுவது மயின்று, கிரவுஞ்சகிரியைத் துலைத்து, விந்தகிரியின கங்காரத்தைப் போக்கி, வில்வலன் வாதாபியைச் செற்ற குறுமுனிவனும் பூசித்ததற்கு இரங்கி அருள் சுரந்த சிவபெருமான் திருக்கோவிலை வலம் போந்து, அபிடேக வலங்கார பூசனையாவும் இயற்றி இருகையும் சிரமேற்குவித்து, அருவுருவாய், சுயம்பு மூர்த்தியாய்க் கணேசுரபுரத்தின் கண் அமர்ந்த அகத்தீசரையும், அருந்தவச் செல்வியென்று காரணப்பெயர்பூண்ட அம்மையையும் ஆனந்த பரவாசமாய்ப்பாடி ஆடிப்பன்முறை துதித்து, மீட்டும் சதுர்ப்புயாசலம் அடைந்து வசிக்குநாளில் நிர்மல சித்தியைத்தரத் தகுந்த பிரதோட கால மணுகலும் அப்புண்ணிய காலத்து முன்னைநாள் எண்ணிறந்த தேவரும் முனிவரும் பரசிவ

த்தை நோற்று நல் வாழ்வை யடைந்தனர் என உள்ளத்தில் நினைந்து வியந்து, அம்மலையினிடத்து ஓர் தீர்த்தம் நிருமித்து, உலகோர் யாவரும் **கந்ததீர்த்தம்** எனக்கொண்டாடும்படி அந்நீருண்மூழ்கி, சைவ வேடம் பூண்டு, திரிதண்டு, கமண்டலம், எக்ஞோபவீதம், உதரபந்தனமும் விளங்க உள்ளன்போடு திருத்குடிசையைச்சார்ந்து, பொன்னாலாகிய புரிசைசூழ்ந்த சிவாலயத்துள் அம்பிகை பாகராகிய சிவலிங்கப் பெருமானைத் திருமஞ்சனமாட்டித் திவ்யாபிடேக பூசனையாவும் விதிவழாது செய்து நண்ணுவுடையார், நாயகச்செல்வியெனப் பரசிவத்தையும் அம்மையையும் பழிச்சி தவசித்தியையும் பற்பலவரத்தையும் பெற்று வாழ்ந்தனர். அக்காரணத்தால் அச்சைலம் **கந்தசைலம்** என்றும் அத்தலம் **கந்தமாபுரி** என்றும் பெயர் பெற்றன.

குருவிருடி பூசைச் சருக்கம்.

கேளும் நைமிசாரணிய வாசிகளே! நான்காம்யுகத்தில் பூந்துணர்களினின்றும் தேன்தரும்ப வரிவண்டினங்கள் படிந்து துவழ்கின்ற அழகிய சோலைகள் சூழ்ந்த பற்பல தெய்விக நாமம் புனையப்பெற்ற திருத்குடிசைத்தலத்தின் குடதிசை சிவந்த சதுர்ப்புயாசலத்தமர்ந்த முனிவரிற் **குருவிருடி** யென்பவர் சிவபெருமான் காட்சியைப் பெறுமாறு, கிருதயுகத்தில் கணேச்சுரநாதர் என விநாயகக் கடவுளுக்கும், திரேதாயுகத்தில் அகத்தீசுரர் எனத் தமிழ் முனிவருக்கும், துவாபரயுகத்தில் நண்ணுவுடையார் எனக்

கந்தமாமுனிவருக்கும் அருள்புரிந்து, அம்முறையே கோமளவல்லியெனவும், அருந்தவச் செல்வியெனவும், நாயகச் செல்வியெனவும் காரணப்பெயர் கொண்ட நாககங்கணியாள் பாகனாகிய பரஞ்சுரடரைத் தொழுவிழைந்து அன்பு தூண்ட, ஆதியில் சதுர்ப்புயாசலமாயும், பின்னர் அகத்திய கிரியாயும், பின் கந்தசைலமாயும் தெய்வத்தன்மை வாய்ந்த அம்மலையினிடத்து நிர்மலமான அகத்திய தீர்த்தத்தினருகே பன்னசாலை ஒன்று இயற்றி, குணதிசை நோக்கி, விடயானந்தப்பற்றற்றுப் பரமானந்தத்தை யடைவிக்கும் நல்லுணர்வுற்று, அகமுகனாகி, நாசி நுனிப்பார்வையாய், ஆகவனீயம், தக்கணாக்கினி, காருகபத்தியம் என்று மூவக்கினியின் நடுவணின்று பஞ்சாக்கர மந்திரம் மனத்துட்பொதிந்து, மூலக்கனலையெழுப்பி, இடகலை பிங்கலையைச் சேரவியக்கி, நிலத்திடையூன்றிக் கைகால் நகம் வேர்கொள, திசையிற் பறவைகள் பஞ்சரமெனவடைய யாவராலு முடித்தற்கரிய கொடியதவத்தைப் பற்பகலுமியற்றும் குருவமுனிக்கு இரங்கி, முத்தனையமூரலும் திலகநுதலுங் கொண்ட அருந்தவச் செல்வி சமேதனாகிய கணேசுரபுரத் தலைவராகிய கடவுள் இடபவாகன ரூடராய் அரகரவென்னும் பேரோசையோடு சிவகணங்கள் புடைசூழ, வெண்ணீற்றொளிதிகழ, களிற்றுரிவயங்க, சடாடவியில் ஆகாய கங்கையும் பிறைமதியும் நிலவெரிப்ப, அறுகுகரந்தைமத்த மாலிகை துலங்கக் கொன்றைமாலையிலங்க, அரவாபரணமசைய, சுருதியாதிகளும் ஒலமிட, வெண்டலைமாலை மிளிர வெள்ளிக்குன்றிற் சந்திரோதயமானது போன்று வதனம் பிரகாசிப்ப, திரிநேத்திரங்களிலும் கருணைமாரி விளங்க, அட்டகுலாசலமென எட்டுக்கைகளும் தோன்ற, பரிபுரம்

பாதமலரினொலிப்ப, தேவமுரசமுழங்க, இந்திரன் கவரி வீச, குபேரன் வெண்குடையேந்த, வருணன் வாயு மணிச் சிவிறிவீச, மற்றைப்பாலர் பல விருதுகள் ஏந்த நான்முகன் காளாஞ்சி சுமப்ப, திருமால் கட்டியங்கூற, தும்புருநாதர் பாட, அரம்பையர் ஆட, சுரர்கள் மலர்மாரி தூற்றவும் சிவ பெருமான் எதிர் தோன்றுதலும், குருவமுனி திடீரென்று கண்விழித்தெழுந்து, துள்ளிப் பரவசமடைந்து, ஆனந்தக் கூத்தாடி, சிரமேற் கரங்குவித்து அஞ்சலித்து, தேகம் புளகரும்ப அருட்கண்ணீர் சொரிந்து, இதயம் நெகிழ்ந்து வணங்கலும், பரமசிவன் நுங்கருத்தின் விழைந்த வாறே துதியெனலும், இறைவனே! நும் அடி மலர்க்கண் அகலாத அன்புபூண்டு ஒழுகும் விரத நெறிதந்து அதனினின்றும் உய்யுமாறு அருள்செயல் வேண்டும்" என இரத்தலும், அவ்வாறே செய்தும், இச்சைலத்தின் கீழ்பால் நாம் எழுந்தருளிய கணேச்சுரபுரமடைந்து நமதாலயத்தின் வடகீழ்பால் நும்பொருட்டு ஒரு தீர்த்தம் விளங்க நினைத்தருளினோம், அதின்மூழ்கி எம்மைத் தரிசிப்பின் நிகழ்த்தியவாறு கைகூடும்" எனக்கூறி அந்தரத்தின் மறைந்தருளினார்

குருவமுனியும் அத்திருவாய்மையைக் கடைப்பிடித்து, புலரிக்காலையில் செய்கடன் யாவும் முடித்து, மரவுரி பூண்டு, சிவவேடம் தாங்கி, சூக்கும பஞ்சாக்கர உருச் செபித்து, திருத்துடிசையை அணுகி, ஆலயத்துட் புகுந்து, வணங்கி நிற்றலும், இறைவனருளால் வெண்கைலையினின்றும் வந்தது ஒத்து மதிற்பிரகாரத்துள் ஓர் திவ்ய தீர்த்தம் உண்டாயது.

உறுப்பில்லாதவருக்கு உறுப்பு எய்தவும், வினையைத்

தவிர்ப்பதும், ஜனன மரணநோயை அறுப்பதும், இனிமை நல்குவதும், காமமாதிய இடும்பையைச் சேதிப்பதும், சிவத்தைத் தெளிவிப்பதும், வைராக்கிய தவநிலையை முற்றுவிப்பதும், விரும்பினவற்றை அளிப்பதும், கஞ்சமாதிய மலர் பூப்பனவும், சங்கினங்கள் தவழ்வனவும், மூவுலகினும் நன்னலத்தைத் தரவல்லதுமான அப்புண்ணிய தீர்த்தத்தைக் கண்ணுற்று நற்றவப்பயனென வாழ்த்தி அதனுட்படிந்து, திரிநேத்திர தாரியையும் பராசத்தியையும் பணிந்து, துதித்துவரும் நாளில் ஓர்நாள் சிவபெருமானை வியந்து, "எமதிறைவனே! மிகவும் ஏழையேன், நுமது திருத்தாண்டவத்தைத் தரிசிக்குமாறு நடித்தருளல் வேண்டும்" எனப்பல்கால் இரத்தலும், அடியார் இச்சித்தவாறு புரியுந்தகையினராகிய சிவபெருமான் நிருத்தம் செயத் திருவுளங்கொண்டு, மண்ணுலகும் விண்ணுலகும் துதிப்ப, பிறைச்சடாடவி இலங்க, வேதநூபுரம் இசைப்ப, திருக்கோவணவுடைபிறங்க, நெடிய கைகளில் மான்மழுத்திகழ, சுயம்பு லிங்கத் துண்ணின்றெழுந்து வியாக்கிர பாதர் பதஞ்சலி முனிவருக்காகத் தில்லையம்பலத்துள் ஆடிய பெம்மான் வெளிப்பட்டு தாருகாவன மாதர் வியப்புற்ற பெருமித வேடத்தைக் கொண்டு அழகிய சபா மண்டபம் சேர்ந்து, கைமலர் நீட்டித் துடியை முழக்கி, உள்ளாள இசைப்படுத்தி, ஓர்முகூர்த்தகாலம் தாண்டவம் செய்தருளி அம்முனிவன் வேண்டுகோளினாற் சுயம்பு லிங்கத்துண் மறைந்தருளினார். முனிவனும் வேண்டிய வரங்களைப் பெற்றுத் தவம் புரிந்து வாழ்ந்தனன். துடிமுழக்கோடு சிவபெருமான் நடனம் செய்தலால் அத்தலம் துடிசையெனவும், முனிவன் தவம்புரிதலால் அம்மலை குருவவிருடி மலையெனவும், சினகர

த்தாடு சிவாஞ்ஞையாற்பிறந்த முனிவன் மூழ்கலாற் சிவ தீர்த்தம் எனவும் குருவமுனி தீர்த்த மெனவும் பெயர்பெறும்.

சுந்தரமூர்த்தி பூசனைச் சருக்கம்.

கேண்மின் நைமிசாரண்ய வாசிகளே! இன்னும் பற்பலதேவர்களும் முனிவர்களும் பூசித்ததன்றியும் திருத்தொண்டத்தொகை யருளிச்செய்த சுந்தர மூர்த்திநாயனாரும் பூசித்தனர். அச்சரிதமும் கூறுவோம்.

அறிவு, அன்பு, நிலைமை, பொறை, பீடு, பல்பொருள், இன்பம், சதா வேள்வியில் விருப்பும், நன்னெறி, தவகுணங்களும், வேதாகமப் பயிற்சியும் நிறைந்த பேரறிவாளர் நிறைந்துள்ள நதிவளம் சுரந்த திருமுனைப்பாடி நாட்டிற்கு நிலமகண்முகத்திலகமதாய் விளங்கும் திருநாவலூர் என்னும் தலத்தில் அந்தணர் குலத்தில் சடையனார் இசைஞானியார்க்குப்புத்திராய் அவதரித்து, நம்பியாரூரர் எனத் திருநாமம் பெற்று, பரவை சங்கிலியாரைத் தழுவவும், சிவபெருமானைத் தூதுபோக்கவும், முதலைவாய்ப்பிள்ளையை அழைக்கவும், சேரமான் பெருமானொடு வெள்ளையானையின் மீதிவர்ந்து திருக் கேதாரமடைந்து, செங்கல் பொன்னாகப் பதிகம் பாடவும் வல்லவரான நம்பியாரூரர் சைவதலந்தோறும் சென்று பதிகம்பாட நினைந்து திருநாவலூர் முதலாகிய தெய்வீகஸ் தலந்தோறும் சென்று ஆங்காங்கு பற்பல அற்புதமகிமையை விளைவித்து, திருப்பதிகமோதி, பின் கொங்கு நாட்டெல்லையைக் குறுகி. சிவனடியார்கள் சூழ்தர திரு

முருகன் பூண்டியை வணங்கி, பின் திருவவிநாசியின் கண் முதலைவாய்ப் பிள்ளையை அழைப்பித்து அங்கிருந்து விடை பெற்று வரும்போது நடுவில் பெரிய ஆரணியம் ஒன்று எதிர்ப்பட்டது. அவ்வாரணியத்தில் நம்பியாரூரரும் அடியார்களும் வழிதெரியாமல் திசைதப்பி பலபேர் பலபக்கமாகப் போய்விட்டார்கள். சுந்தரமூர்த்தி நாயனாரும் தனியே அடர்ந்த அவ்வாரணியத்தில் முட்கள் நிறைந்த ஓரிடத்தில் அகப்பட்டுக்கொண்டு வழிதெரியாமல் திகைத்து எம்பெருமானைக் குறித்துத் தோத்திரம் செய்யவே திருத்துடிசையம் பதியின்கண் எழுந்தருளியிருக்கின்ற பரமேஸ்பரர் ஆனவர் பார்வதி தேவியாருடன் வேடனும் வேடிச்சியுமாக வேடம் தரித்துக் கொண்டு இந்நாயனார் முன்பு சென்று, அவருக்கு வழிகாட்டித் துடிசையம்பதிக்கு வந்து சினகரத்துள் மறைதலும் அந்நாயனார் வந்தவர் இன்னாரென அறிந்து வேதங்களை மனம் உருகப்பாடி ஆடித்துதித்தலும், சிவபெருமான் கருணை கூர்ந்து "வாரும் சுந்தரரே! உலகில் நின்னையன்றி அன்பு மிக்கூர்ந்தவர் வேறில்லை. சற்றே நாமளிக்கும் உணவினை அயின்று பசியாறல் வேண்டும்" என வுரைத்துச் சிவகணங்களாற் சட்சுவைப் பதார்த்தமும் பண்டு பலாதி வர்க்கமும் முருங்கையிலைக் கறியும் சமைப்பித்தருளி சுந்தரர்க்கும் அடியார்குழாங்கட்கும் துய்ப்பித்தலும், சுந்தரர் விருந்திட்ட விருந்தீசர் விஸ்வநாயகி எனப்பாவால் வியந்துருகிப்பாடி விடைபெற்றுத் திருச்சின்னமுழங் கத்திரு நாவலூராரும் அத்தலம் நீங்கி ஆதிபுரம் என்னும் திருப்பேரூர்ப் பட்டீச்சுரப் பெருமானைச் சேவிக்கச் சென்றனர்.

சந்திரார்ச்சனைச் சருக்கம்.

சோடச கலைகளோடு கூடியவனும், அரிபிர மேந்திராதியர்கட்கு அரிய சிவபெருமான் முடியில் வீற்றிருப்பவனும், ஐந்தருக்கள், சுரபி, சிந்தாமணி, இலக்குமி இவர்களுடன் பிறந்தவனும், அத்திரிமகாமுனிவர் விழியினும், பிரமனுடைய யாகாக்கினியினும் அவதரித்து இருபத்தேழு தாரா கணங்கட்குப் பதியாயும் இவ்வுலகை வலம் வரும் மதிக்கடவுள் வியாழபகவான் மனைவியாகிய தாரையின் மூலைக்கு வட்டினைப் புணர்ந்த மையாலுண்டாகிய பழியை யொழிக்குமாறு வருந்தி யிருக்கும் அமயத்தில், நாரதமாமுனிவர் எதிர்ந்து, "வாரும் சந்திரனே! மகாபாதகங்கள் யாவும் சிவபூசையாலன்றோ நீங்கவேண்டும், அதற்குரிய புண்ணியதலம் யாதெனின், கொங்கு நாட்டினிடத்து யாவராலும் புகலற் கரியதான திருத்துடிசையம்பதியென ஒரு தலம் உளது. அதன்மேற்றிசையில் மந்தரமாதிய மலைகளினும் உயர்ந்த சதுர்ப்புயாசலகிரியும் ஒன்று உளது. அவண் அடைந்து தவம் இயற்றி, சிவலிங்கப்பெருமானைத் தரிசிக்கில் உமது வினையானவை நீங்கும்" எனச் சொல்லிப் போயினர். அந்நாரதர் சொன்ன வாய்மையைச் சிரமேற்கொண்டு மதிக்கடவுளும் கோமளவல்லி பாகனாகிய வேதநாயகனை அர்ச்சித்துப் பன்னாள் வசித்து சதுர்ப்புயாசலம் அடைந்து அங்கு தோன்றிய நதியிற்படிந்து தவம்புரிந்து, திருத்துடிசையங் கடவுட்போற்றி, சிவானுக்கிரகத்தால் அப்பழி நீங்கி வானுலகடைந்தனன்

அக்குருவ விருடி மலையில் சந்திரன் மூழ்கிய நதிக்குச்

சந்திரநதி யெனப்பெயர். இச்சந்திரநதி விநாயகநதியிற் கலத்தலால் சந்திரோபநதி யெனவும் பெயர்பெறும்.

வச்சிரபாகுபாவ விமோசனச் சருக்கம்.

கற்பக விருக்கத்தால் வளமையும், பெருமையும் கொண்ட இந்திரலோகமே குடிவந்ததாமென அலைகடோறும் நவமணி கொழிக்கும் நலனமைந்த மகததேயத்துக்கிறைவனும் பருவமுகிற்குங் கொடைத்தொழிலைப் பயிற்றும் கையினையும், மந்தரகிரியனைய விசாலமார்பினையும், மதனனழகினை வெற்றிகொண்ட மதிமுக விசாலத்தையும் நவரத்ன கேயூர புயத்தினையும் வீரக்கழல் விளங்கும் தாளினையும், சதாவேள் வியினையும், கடல்போன்ற சேனை மூகத்தினையும், செங்கோலையும், குற்றுடைவாளையும், மற்றைய தேய மன்னர் திறைகொளவல்லனுமான இரவிகுலத்துற்பவித்தவச்சிரபாகு மென்னும் அரசன் முறை புரியுநாளில் வேட்டத்தின் விழைவுற்று அவற்றிற்குரிய உடையணி பூண்டு, தனுவாத்திர சத்திரங்களைப்பற்றி இரதாரூடனாகி நகர்நீங்குமளவில், கட்டுத்தறியைக்கடிந்து, அந்தர் லோகத்தையு நடுக்கி, மேகத்தையும் கலக்கி, அனந்தனும் சிரந்தளக்க வழாநின்ற மதயானைத்திரளும், ஐங்கதிகொண்டு நடத்தலின் எழுந்ததுகளால் மண்விண் ணனைத்தும் மறைக்கும் இயல்பினவாய பரிக்கூட்டங்களும், இயமனையும் போரில் புறங்காணும் வலியினையும் வடவைக்கனல் சொரியும் விழியினையும் உடைய காலாட்படைகளும் புறஞ்சூழத் தேரை

நடாத்தி, முரசு, குழல், மத்தளம், சிறுகட்பறை பலவாச்சியங்களும் முழங்க எதிர்கொண்ட மகளிர் மயல் கொண்டு மயங்க, இறைவன் பதியைத்தணந்து. ஆரணியத்துட் புகுந்து, வேங்கையாதிய மிருகங்களைச் சாயகத்தாற் பலவாறு சிதைத்துப் புகுங்கால் ஓர் வராகமானது கண்பாலேறுண்டு வெருவி ஓடித் தூர்வாச மகாமுனிவர் ஆச்சிரமத்திற்புக, அம்முனிவன் பின்றொடர்ந்த அரசனைக்கண்ணுற்று வடவானலப்போற் கனன்று, "ஓ! இறைவனே நீ கொலைத்தொழிலை விரும்பிப் போந்தனையாதலால் வேடனாகுக" எனச் சபித்தலும், அரசன்பயந்து வணங்கிக்குறையிரத்தலும், "ஆன்றோர் சாபக்கடல் கடத்தல் அரிது! ஆயினும், சின்னாள் சிவதலமடைந்து சேவிக்கின் இச்சாபம் அகலும்" என வுரைத்தலும், கோமானும் வேடரூபம் அடைந்து அரசுரிமைத்தொழிலையும் இழந்து, துயர்பூண்டு பற்பல சைவதலத்தடைந்துந் தீராது பின்னர் கொங்குநாடடைந்து அகத்திய கிரிச்சாரல் மேவி உதராக்கினியான் மயங்கிக் கந்தமூலாதிகளை நுகர்ந்து காலங்கழித்துத் திருத்துடிசைத்தலம் அடைந்து ஆலயத்துட் புகுந்து, சந்திரசடாதாரியாகிய விருந்தீச்சுரரையும் விஸ்வநாயகியையும் தரிசித்த மாத்திரத்தில் தூருவாசமுனியின் சாபவினையால் போந்த வேடுருவநீங்கிச் சுயரூபமடைந்து மகதமேயம் சென்று அரசுபுரிந்திருந்தான்.

சிவபூசைச் சருக்கம்.

ஆரியவேத விதிப்படி இயற்றும் துரகமேதம் முதலானவைகளால் உண்டாகும் பலன் யாவும் திருத்துடிசைச்

சிவபெருமானைத் தரிசிப்போருக்குண்டாகும் காசியாதிபல ஸ்தலங்களில் பன்னாள் முயன்று தவம்புரியும் பயன் அத்தலத்திலிருந்து தமிழ்வேத விதப்படி வேள்விபுரிவார்க்கு உளதாகும். அமரபக்கத்து அட்டமிநாள் அச்சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்யின் எண்ணிறந்த வேதியர்கட்கு பசுதானம்கோடி செய்ததனினும் மிக்கபலனைத் தரும். திலதயிலத்தேனும் ஆவினெய்யிலேனும் ஓர் நாள் அபிடேகிக்கின் சிவபதம் அடைவர். அன்றியும் வெண்ணீற்றபிடேகம் செய்யின் சந்திரக் கடவுளெனப் புனிதனாகுவர். தேனபிடேகம் செய்யின் உருத்திரனாகி விளங்குவர். சுத்தோதகவபிடேகம் செய்யிற் சுகமடைவர். சோமவாரப் புலரிக்காலத்தில் ஆவின் பாலால் அபிடேகிக்கிற் பரமுத்தியடைவர். அமரபக்கத்து அட்டமி ஞாயிறுநாள் இளநீர் அபிடேகிக்கின் இந்திரனாகுவர். அமரபக்கத்துவாதசியில் தயிர், தேன், நெய், கருப்பஞ்சாறு, இவைகளால் அபிடேகிக்கிற் சிவபதம் அடைவர். கார்த்திகை மதியின் ஏகாதசி நாள் புத்துருக்கு நெய்யால் அபிடேகிக்கில் பரமபதம் அடைவர். வெள்ளெருக்கு அலரி, தும்பை, வில்வம், வெண்ணுயுருவி யாதியால் அமலனை அர்ச்சிப்போர் கைலாய பதவியை அடைவர். நூற்றுப்பத்தாக அலங்கலைத் தொடுத்துப் பூசிப்போர் சாயூட்சியபதத்தையடைவர் பிரதோடகாலத்துப் பூசிக்கின் அன்னை, தந்தை, அந்தணர், மகவு இவர்களைக் கொன்ற பாதகத்தையும் மாதர்கருப்பத்தைச் சேதித்த மகாபாதகத்தையும் விட்டு நீங்குவர். பிரதோடத்து அபிடேகிப்பவர் சிவசாரூபத்தை அடைவர் அக்காலத்துத் தூபதீபத்தைச் சந்நிதியிலிட்டோர் சாலோக பதமடைவர், நெய்,திலதீபமிடின் சதுரயுகம் சிவபதமடை-

வர். மலர்வகைகளை விதிப்படி பறித்து முறைப்படி தொடுத்தல், சாத்துதல், தோத்தரித்தல், அலகிடல், மெழுகல், தீபமிடல் நந்தனவனம் வைத்தல் அடியாரைப்போற்றல் முதலாகிய எண்வகைச் சிவபக்தியானும் வணங்கித் திருத்துடிசைத் தலத்துச் சிவபெருமானைத் தோத்தரித்து தேவரும் முனிவரும் தத்தம் இஷ்டகாமியார்த் தங்களைப் பெற்றனர் என்றால் மானிடர் அவ்வாறு எண்வகைப் பத்திகளைச்செய்தால் அவர்கள் பெறும்பேறு இவ்வளவின வெனப் புகலுதல் கூடுமோ.

ஆகையால், மானிடராய்ப் பிறந்தபேர் தங்கடங்களால் கூடியபக்திகளைச்செய்து சிவப்பேற்றை யடைந்து நீடூழி வாழ்வார்களாக.

துடிசைப்புராணச் சுருக்கவசனம்

முற்றும்.

"துடிசைநெடுங் கதையிதனைச் சொலக்கேட்போர் வாசிப்போர்
படியினுணர்ந் தெழுதிவைப்போர்பாட முற்றோரு ரைபகர்வோர்
மிடிதவறும் படிதுதித்தோர் மிகவாழி யகனுலகில்
வடிவுபெறு குலோத்துங்கன் வாழிசெங்கோல் வாழியவே"

Thompson & Co., Printers, Madras.

இனி வெளிவரும் நூல்கள்.

1. விபூதி விளக்கம்.
2. சிவஞானபோத முதனூல் விளக்கம்.
3. பண்முறை விளக்கம்.
4. நித்தியகரும விளக்கம்.
5. சைவ பேத விளக்கம்.
6. சமயபேத விளக்கம்.
7. ஆலய விளக்கம்.
8. மனைவாழ்க்கை விளக்கம்.
9. போசன விளக்கம்.
10. சுந்தரமூர்த்திநாயனார் சரித்திர விளக்கம்.
11. உருத்திராக்ஷ விளக்கம்.

All by the editor of this book.